3463

# நெய்தல்

3446

1981 - 2006
SILVER JUBILEE YEAR

கிழக்குப் பல்கலைக்கழகம் கலைபண்பாட்டுப் பீடத்தின்

வருடாந்த சஞ்சிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை
களுதாவளை
பொது நூல் நிலையம்

1. இப்புத்தகம் கடைசியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ மீள ஒப்படைக்கப்பட வேண்டும். பின் தாமதமாகும் ஒவ்வொரு நாட்களுக்கும் 2.00 ரூபா வீதம் அறவிடப்படும்.
2. இப்புத்தகத்தை அங்கத்தவர் ஒருவருக்கோ அல்லது அங்கத்தவர் அல்லாத ஒருவருக்கோ இரவல் கொடுக்கக் கூடாது.
3. புத்தகங்களில் கீறிடுதல், எழுதுதல், புத்தகங்களை மடித்து வைத்தல் போன்ற செயல்கள் தகாதவை இதனை மீறும் பட்சத்தில் தண்டப்பணம் அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

3463
வகுப்பு எண் 232
தொடர் இலக்கம் 3463

# நெய்தல்

தொகுதி 2, எண் 1

பிரதம ஆசிரியர்
ம.வர்ணகுலசிங்கம்
தலைவர்/ புவியியற் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

B/S 2024

நிர்வாக ஆசிரியர்
A.J.குசைன்

பொது நூலகம்

ஆசிரிய பீட உறுப்பினர்கள்
பேராசிரியர் சி. மௌனகுரு
M.T.M.றிஸ்வி

கலைகலாசார பீட வெளியீடு
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை
வந்தாறுமூலை, செங்கலடி
இலங்கை
2007/2008

V. ALAGARATNAM
Assistant Librarian
Library,
Southern Campus, KDU
Sooriyawewa

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**NEITHAL**

**ISSN : 1800-380X**

A bi- annual research journal of the Faculty of Arts & Culture, Eastern University,Sri Lanka,
Vol. 2 No. 1

Chief Editor : **M.Varnagulasingam**
**Head**
**Department of Geography**
**Eastern University**
**Sri Lanka**

Administrative Editor: **A.J.Hussain**

Editorial Board Members: **Prof.S.Mounaguru**
**M.T.M.Rizvi**

Copy right : **Faculty of Arts & Culture,**
**Eastern University,**
**Sri Lanka**

Printers : **Hira Offset Printers, Eravur.**

Price :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நெய்தல்

ISSN : 1800-380X

வெளியீடு : மார்கழி 2008

தொடர்புகளுக்கு : ம.வர்ணகுலசிங்கம்
தலைவர்/புவியியற் துறை
கலைகலாசார பீடம்
கிழக்குப்பல்கலைக்கழகம்
செங்கலடி

தொலைபேசி : 065 2240739

தொலைநகல் : varnan1963@yahoo.com

அச்சுப்பதிப்பு : ஹிரா அச்சகம்,
ஏறாவூர்.

விலை :

வருடம் இருமுறை வெளியிடப்படும் ஆராய்ச்சிச் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பதிப்புரை

வேகமாக மாறிவரும் உலக மாற்றங்களுக்கேற்ப பல்கலைக்கழக கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளையும் மாற்றவேண்டிய கட்டாய தேவை இன்றைய பல்கலைக்கழகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவாலாக உள்ளது. மிக அருமையாக கிடைக்கக் கூடிய வளங்களைக் கொண்டே சமூகம் எதிர்பார்க்கும் அனேக தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய நிலை வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் காணப்படும் அதிர்ச்சி தராத அன்றாட நடைமுறையாக உள்ளது. இந்த நிலை தொடர்பில் கிழக்குப்பல்கலைக்கழகம் சம்பந்தமாக இரு வேறுபட்ட கருத்துக்கள் இருக்கமுடியாது. மிகக்குறைந்த வசதிவாய்ப்புக்களைக் கொண்டு தளராது முன்னேற்றம் கண்டு வரும் கிழக்குப்பல்கலைக்கழகத்தின் சமூகம் சார் உயரிய சிந்தனையை நிறைவு செய்யும் ஒரு வழியாகவும் கலைகலாசார பீட விரிவுரையாளர்களை ஆராய்ச்சிகளில் ஈடுபடத்தூண்டும் ஒரு களமாகவும் இருந்து நெய்தல் சஞ்சிகை வருடம் தோறும் இரு முறை வெளிவந்து கொண்டிருக்கின்றது. அது மட்டுமன்றி எமது பீட விரிவுரையாளர்களின் ஆராய்ச்சி முடிவுகளையும் திறமைகளையும் சமூகத்திற்குள் எடுத்துச் செல்லும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆவணமாகவும் நெய்தல் மிளிர்கின்றது. பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவியினை ஒரு தொழிலாக மாத்திரம் கருதும் இன்றைய இளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விரிவுரையாளர்கள் மத்தியில் அப்பதவியினை ஒரு சமூகம் சார் கடமையாகவும் கலை கலாசார பீட விரிவுரையாளர்கள் கருதத் தவறவில்லை என்பதற்கு நெய்தல் ஒரு முக்கிய சாட்சியாக உள்ளது.

1995 இல் ஆரம்பிக்கப்பட்ட இச் சஞ்சிகை கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளில் பல் துறை சார்ந்த வகையில் ஆக்கங்களை தாங்கி துறைசார் நிபுணர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. இவ்வருடம் அதிலிருந்து மேலும் ஒரு படி முன்னோக்கி சர்வதேச தர சஞ்சிகைகளின் பட்டியலிலும் இடம் பிடித்துக் கொண்டமையானது இச் சஞ்சிகையின் தரத்தினையும் அதன் வளர்ச்சி வேகத்தினையும் துல்லியமாக எடுத்துக்காட்டும் சான்றாக உள்ளது.

இச் சஞ்சிகையினை வெகு விரைவாக வெளியிடுவதற்கேதுவாக கட்டுரைகளை வழங்கிய ஆய்வாளர்களுக்கும் கட்ரையினை எழுத்துப்பிளைகளற்ற விதத்தில் வடிவமைத்துக் கொடுத்த புவியியற் துறை உதவி விரிவுரையாளர் செல்வி என். தவப்பிரபா அவர்களுக்கும் குறுகிய காலத்தில் அச்சுப் பதித்துத் தந்த ஏறாவூர் கைறா அச்சகத்தாருக்கும் வெளியீட்டிற்கான நிதியினைத் தந்துதவிய கிழக்குப்பல்கலைக் கழகத்திற்கும் ஆசிரியர் பீடத்தின் சார்பில் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரதம ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளடக்கம்

01. Methods of Measurment of Weather elements - 01

02. கிழக்கின் கல்வி வரலாற்றில்
இராமகிருஷ்ண மிஷன் - 21

03. வங்கக் கடலில் புதிய தகட்டின்
உருவாக்கமும், இலங்கையின் சுனாமி
அச்சுறுத்தலும். - 35

04. நபி மொழி (ஹதீஸ்) பற்றிய கீழைத்தேய
ஆய்வாளர்களின் பிழையான
விமர்சனங்களும், இஸ்லாத்தின் பதிலும். - 53

05. தென்னாசியாவில் தீவிரமடையும் வறுமை
நிலையும், சமூகச் சீர்கேடுகளும், மக்களின்
விபரீதமான வாழ்க்கை நிலையும். - 76

06. கல்வி உளவியலின் தோற்றமும்,
அதன் பின்னணியும் - 94

07. நவீனத் தமிழின் இரு ஆளுமைகளும்,
இலங்கையின் நவீன இலக்கியமும். - 119

08. இந்துக்களின் கணித வானியற் புலமை
மரபில் பிரம்மகுப்த்தர் - ஒரு நோக்கு - 143

09. அம்மன் வழிபாடு சார்ந்த வாழ்வியலின்
அடியாக இயங்கும் இலக்கியப் பாரம்பரியமும்,
அதன் சமூக முக்கியத்துவமும். - 165

10. இலங்கையின் உள்ளூராட்சிநிருவாக
முறைமை : அதன் நோக்கங்களும்,
அதிகாரங்களும். - 184

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கட்டுரையாளர்கள்

நா. தவப்பிரபா,உதவி விரிவுரையாளர் ,B.A sp, புவியியற் துறை கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் மா.செல்வராஜா, தலைவர், கல்வித் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்

கிருபா இராஜரெட்ணம;B.A, விரிவுரையாளர், புவியியற் துறை, கிழக்குப்பல்கலைக் கழகம்

எம்.ரீ.எம். றிஸ்வி, B.A, MA, PGDE, இணைப்பாளர், இஸ்லாமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக் கழகம்

ம.வர்ணகுலசிங்கம் B.A., M.A., PGDE, தலைவர், புவியியற் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப்பல்கலைக் கழகம்.

செ. அருள்மொழி B.Sc. Agri, PGDE, SLPSL, PGDM, M.Sc, SLEAS, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக் கழகம்.

செ. யோகராசா B.A, MA, PGDE, PhD., மொழித்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக் கழகம்.

சயனொளிபவன் முகுந்தன் BA, MA, இந்துநாகரிகப்பிரிவு, கலை கலாசார பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம்

வே. குணரெத்தினம் BA, MA,
தலைவர் : சமூக விஞ்ஞானத் துறை
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# Methods of Measurement Of Weather Elements

நா. தவப்பிரபா, உதவி விரிவுரையாளர்
புவியியற் துறை

வளிமண்டலம் பற்றிய ஆய்வானது வளிமண்டலவியல், காலநிலையியல் என இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றது. வளிமண்டல செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்வதும் விளக்குவதும் கால ரீதியாக அவற்றின் நடத்தைகளை எதிர்வுகூறுவதுமே வளிமண்டலவியல் (Metrology) எனப்படுகிறது.

காலநிலையானது மனித சூழலுடன் தொடர்புடையதாக இருப்பதுடன் வளிமண்டலவியலுடனும் நெருங்கிய தொடர்புடையது. 20ம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் காலநிலையியல் ஒரு முக்கிய பாடமாக விளங்கியதுடன் தரவுகளைத் தொகுத்தல், ஆய்வுசெய்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பிரதேச காலநிலையியல் ஆய்வாகவும் கருதப்பட்டது. இத்தகைய ஆரம்ப வளர்ச்சியினைக் கொண்ட காலநிலையியல் நவீன காலநிலையியலாக பல்வேறு பிரதேச மட்டங்களில் இணைந்து காணப்படும் வளிமண்டலவியல் பொறிமுறைகளை விளங்கிக் கொள்வதன் மூலம் காலநிலையியலை வேறுபடுத்தி பிரச்சினைகளை ஆய்வு செய்வதுடன் தொடர்பான ஒரு இயக்கக் கற்கை நெறியாக விளங்கியது. பூகோள வளிமண்டலத்தை அவதானிக்கும் தொழிநுட்ப முறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியே நவீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காலநிலையியல் அபிவிருத்தியில் புதிய பரிணாம வளர்ச்சிக்கு காரணமாகியது எனலாம்.

நவீன தொழிநுட்ப விருத்தி வளிமண்டலத் தரவுகளை விரைவாகவும் நுணுக்கமாக ஆய்வு செய்யவும் வரைபடமாக அமைக்கவும் வழிவகுத்தது. இவற்றுடன் வளிமண்டல சுற்றோட்டத்தின் புதிய மாதிரிகளையும், கோட்பாடுகளையும் பரிசோதனை செய்யவும் விருத்தி செய்யவும் குறுகிய நீண்டகால வானிலை எதிர்வுகூறலை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்பட்டதுடன் வளிமண்டல விஞ்ஞானத்தைப் புரட்சிகரமாக மாற்றின.

ஆரம்ப காலங்களில் இருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்த காலநிலையியலானது நவீன கருவிகளின் வளர்ச்சியினால் காலநிலை மூலகங்களான அமுக்கம், வெப்பநிலை, மழைவீழ்ச்சி, காற்று, முகில், ஈரப்பதன், சூரியஒளி போன்றவற்றை அளவிடுவதற்கான கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இக்கருவிகளின் துணைகொண்டு வானிலைக் கூறுகளின் தன்மையினை ஒரே நேரத்தில் அறியக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

அந்தவகையில் அமுக்கத்தை அளவிடும் கருவிகளாக இரசமானி (Mercury barometer), போடின்ஸ் பாரமானி (Fortin's barometer), அனிரோய்ட் பாரமானி (Aniroid barometer) போன்ற கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. அதுபோல வெப்பநிலையை அளக்கும் கருவிகளாக சாதாரண வெப்பமானி (Household thermometer),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதிகூடிய குறைந்த வெப்பநிலையை அளக்கும் வெப்பமானி அல்லது Six's வெப்பமானி (A maximum and minimum thermometer or Six's thermometer), ஸரீவன்சன் திரை(Stevanson screen) போன்றனவும் மழைவீழ்ச்சியை அளவிடும் கருவியாக மழைமானி (Rain guage) உம் பயன்படுத்தப்படுகின்றது. காற்றினை அளவிடும் கருவிகளாக காற்றாடி (Wind wane), அனிமோ மானி (Animo meter), Venti meter போன்றனவும் முகில் மூடுகைகளை அளவிடும் கருவியாக முகில் மூடுகை பதிகருவி (Cloud cover recorder) என்பதும் பயன்படுத்தப்படுகின்றது. ஈரப்பதன் நிலமைகளை அளவிடும் கருவிகளாக ஈர அல்லது உலர் மின்குமிழ் வெப்பமானி (Wet and Dry bulb thermometer) அல்லது Hygrometer என்பதனாலும், சூரிய ஒளியினை சூரியஒளி பதிகருவி (Sun shine recorder) மூலமும் அளவிட முடிகின்றது.

**வானிலை அளவீடுகளைப் பெறும் முறை**




வளிமண்டல அமுக்கமானது, வெப்பநிலை மற்றும் அகலாங்கு அடிப்படையில் வேறுபடுகின்றது. கடல் மட்டத்தில் அமுக்கமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

1.03 $Kg/Cm^2$ ஆக அளவிடப்படும். அகலாங்கு 45°C யிலும் வெப்பநிலை 15°C ஆகவும் இருக்கும் போது இரசப் பாரமானியில் இரச மட்டமானது 760 mm அல்லது 76cm வரை உயரும். இது சாதாரண அமுக்கமாகும். இரசப் பாரமானியானது ஒரு பரந்த வெளியில் வைத்து இரச மட்டத்தை அவதானிப்பதன் மூலம் அறியப்படும். வளியமுக்கமானது அதிகரிக்கும் போது இரச மட்டமானது உயர்வடையும். இரச மட்டமானது குறைவடையும் போது வளியமுக்கமானது குறைவடையும். அதாவது வெப்பநிலை அதிகரிக்கும் போது இரச மட்டம் உயரும். வெப்பநிலை குறையும் போது இரச மட்டம் குறையும்.

### இரசப் பாரமானி (Mercury barometer)




அமுக்கத்தை அளவிடும் உபகரணமாக போரின்ஸ் பாரமானி (Fortin's barometer) காணப்படுகிறது. இது இரசபாரமானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அமைப்பை விட சிறந்ததா

குழாயினுள் இரசம் இடப்ப

மேல்நுனியின் ஒரு பகுதி திறந்து

பகுதியில் தலைகீழான Ciste

பொருத்தப்பட்டிருக்கும். அதன் அந்தத்

வகையில் சரிப்படுத்தும் திருகாணி கா

அளவை சரியாக நிறுத்துவதற்கு இ

நிறுத்திய பின்னர் இரசமட்டத்தை அவத

அமுக்கம் குறையும் போது சிறிதளவு

தொட்டியினுள் சென்றுவிடும். அமுக்

சிறிதளவு இரசம் குழாயினுள்

நிறுத்தப்படும் ஸ்தானத்தைக்

குவிக்கப்பட்டு இருக்கும். இத்

பூட்டப்பட்டிருக்கும் அமுக்கமானியின்

காணப்படும். அதனுடைய அளவு Cm.

அறியப்படும். அமுக்க அளவை அ

கண்ணாடி காணப்படும். இவ் உ

பொருத்தப்பட்டிருக்கும். வேனியர் மட்ட

போது சரியான ஆக்க அளவை

அமுக்கத்தை அளந்த பின்னர் மீள

கொண்டுவர வேண்டும். இதன் செய்

S செயற்படுவதற்கு இரச மட்டத்தின் அ

தொடர்பு பட்டதாக I இனால் காட்டப்பட

பூச்சிய நிலையில் V ஆனது குழா

சமனாக வைத்திருக்கும். பின்னர் நேர்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இணைந்து தரும் வகையில் V இன் அடியில் பித்தளைத் தகட்டிற்கு பின்பக்கம் திருகு T என்பது அமைந்து காணப்படும். திருகு T ஆனது பித்தளைத் தகட்டுடனும் வேனியருடனும தொடர்புபட்டு சரியான நிலைக்கு கொண்டுவர உதவும். இதன் பின்னர் அளவீட்டினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

**போரின்ஸ் பாரமானி**

**(Fortin's barometer)**




**குறுக்குப் பார்வை**




அடுத்து அமுக்கத்தை அளவிடுவதில் தொழிநுட்ப முன்னேற்றத்தினால் இரசத் திரவம் எதனையும் பயன்படுத்தாது அளவிடும் உபகரணம் சிறப்புப் பெற்றுக் காணப்படுகின்றது. இது அனிரோய்ட் பாரமானி (Aneroid barometer) என அழைக்கப்படும். இது மிகவும் திறமையானதாகவும், திரவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எதுவும் பயன்படுத்தப்படாமலும் அமுக்கத்தை அளவிடுகின்றது. இப் பாரமானியைச் சுற்றி முற்றிலும் வெள்ளியாலோ அல்லது தடித்த கலப்பு உலோகத்தாலோ செய்யப்பட்டு இருக்கும். இப் பெட்டியில் கம்பிச் சுருள் ஒன்று காணப்படும். இக் கம்பிச் சுருளானது மூடி உடைந்து போகாது பாதுகாப்பதுடன் அமுக்கம் உயரும் போது அக் கம்பிச் சுருள் வளைந்து கொடுத்து அதியுயர் பெறுமானத்தை வாசிப்பதற்கு ஏற்றதாகி விடுகின்றது. அமுக்கம் மாறும் பொழுது பெறப்படும் வாசிப்பானது சரியான முடிவினைப் பெற உதவுகின்றது. அமுக்கம் உயரும் போது பெட்டியினுடைய நுனி வளைந்தும், அமுக்கம் குறையும் போது வெளிப்பக்கமாக ஒட்டி பெட்டி தள்ளப்பட்டும் காணப்படும். சரியான வாசிப்பினை உபகரணத்தின் மேற்பகுதி மூலம் அறியலாம். இதன் மூலம் ஒரு வாரத்திற்குரிய அமுக்க அளவினை தொடர்ச்சியாகப் பெறமுடியம்.மாற்றமடையும் அமுக்கங்களின் பதிவினை மை கோட்டினால் வரைபட வடிவில் பதிந்து காட்டும்.

**அனிரோய்ட் பாரமானி (Aneroid barometer)**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**Barograph**




Figure:4.4
BAROGRAPH

அடுத்து வெப்பநிலையை அளவிடும் கருவிகளைப் பற்றி நோக்கினால் ஆரம்பத்தில் சாதாரண வெப்பமானி பயன்படுத்தப்பட்டது. முற்றிலும் கண்ணாடியால் மூடப்பட்டு ஒரு அந்தத்தில் மின்குமிழ் காணப்படும். அடுத்த அந்தம் சமனாக வளைந்து காணப்படும். வளிமண்டல வெப்பநிலையை அளக்கும் போது இரச மட்டமானது மேலெழும் போது வெப்பநிலை அதிகமாகவும் மாறாக இரச மட்டம் கீழே இறங்கும் போது வெப்பநிலை குறைவடைவதையும் அவதானிக்க முடியும். இம் மாற்றம் இவ் உபகரணத்தில் பதியப்பட்டுள்ள அளவினைக் கொண்டு வெப்பநிலையை அறிய முடியும். ஒவ்வொரு வெப்பமானியையும் பயன்படுத்தும் போது அதன் ஆரம்ப அளவைக் குறித்த பின்னரே உபயோகிக்க வேண்டும். இவ்வாறான வெப்பமானியை இரண்டு அளவுகளில் அளக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முடியும். ஒன்று செல்சியஸ் வெப்பமானி மற்றையது பரனைற் வெப்பமானி ஆகும்.

செல்சியஸ் வெப்பமானியானது குளிர் நிலையத்தில் 0°C ஆகவும் வெப்பநிலையத்தில் 100°C ஆகவும் காணப்படும். இவ் வெப்பமானியில் குளிர் நிலைக்கும் கொதி நிலைக்கும் 100°C சமனாக இருக்கும். மாறாக பரனைற் வெப்பமானியைப் பொறுத்தவரை குளிர் நிலையில் 32°F ஆகவும் கொதிநிலையில் 212°F ஆகவும் காணப்படும். இவை இரண்டுக்கும் இடையேயான வித்தியாசம் 180°F ஆக காணப்படும். ஒவ்வொரு பகுதியின் வெப்பநிலையும் இவ் இடைவெளியில் பதியப்படும். எனவே 1°C = 1.8°F என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**வெப்பமானி (Thermometer)**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அடுத்து வெப்பநிலையை அளப்பதில் பயன்படுத்தும் முன்னேற்றகரமான கருவியாக அதிகூடிய அதி குறைந்த வெப்பநிலையை அளக்கும் வெப்பமானி (A maximum and minimum thermometer or Six s thermometer) என்பது விளங்குகின்றது. இது Six's வெப்பமானி (Six's thermometer) எனவும் அழைக்கப்படும். இவ் உபகரணத்தின் மூலம் சிறப்பாகப் பகல் வேளையில் ஆகக் கூடிய வெப்பநிலையையும் இரவு வேளைகளில் அதி குறைந்த வெப்பநிலையையும் அளவிட முடிகின்றது. இவ் உபகரணம் U வடிவான குழாய் மூலம் வளைக்கப்பட்டு ஒவ்வொரு அந்தத்திலும் மின்குமிழ் பொருத்தப்பட்டு இருக்கும். இக் குழாயின் உள்ளே I இன் அளவிற்கு அற்ககோலும் ஏனைய பகுதிகளுக்கு இரசமும் இடப்படும். இரசமட்டம் அசையும் போது அற்ககோல் பெருக்கமடைதல், சுருங்குதல் தன்மையைக் கொண்டிருக்கும். வெப்பநிலை உயரும் போது அற்ககோல் மின்குமிழ் A ஐ நோக்கித் தள்ளப்படும். இம் முறை மூலம் இரசமட்டம் I வரை செல்வதன் மூலம் இதனளவை அறிந்து கொள்ளலாம். மாறாக வெப்பநிலை குறையும் போது I இன் குறைந்த பெறுமதியை வந்தடையும். இவ்வாறு குறைந்த கூடிய வெப்பநிலையை ஒரே மானியில் அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிகூடிய அதி குறைந்த வெப்பநிலையை அளக்கும் வெப்பமானி (A maximum and minimum thermometer or Six s thermometer அல்லது Six's வெப்பமானி (Six's thermometer)**







அடுத்து வெப்பநிலையை அளவிடுவதில் சற்று முன்னேற்றம் கொண்ட உபகரணம் ஸ்ரீவன்சன் திரை (Stevanson screen) ஆகும். சூரிய ஒளியின் தாக்கமானது நேரடியாகக் கிடைக்காத வண்ணம் மரத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் காற்றானது நேரடியாக உட்செல்ல முடியாததாகவும் காணப்படுகின்றது. இதனைப் பெரும்பாலும் திறந்த வெளியில் நில மட்டத்திலிருந்து 1.2m அல்லது 120cm உயரத்தில் வைக்க வேண்டும். இது நான்கு கால்களைக் கொண்டு அமைந்திருப்பதோடு இரு கூரைகள் அமைப்பைக் கொண்டது. இதன் வெளிப்பகுதிக்கு வெள்ளை நிறப்பூச்சு பூசப்பட்டு வந்தடையும். இவ்வாறு குறைந்த கூடிய வெப்பநிலையை ஒரே மானியில் அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருக்கும். காரணம் வெளியிலுள்ள வெப்பநிலையும், உள் வெப்பநிலையும் தொடர்புபடாது வைத்திருப்பதற்காகவாகும்.

**ஸ்ரீவன்சன் திரை (Stevanson screen)**






அடுத்ததாக மழைவீழ்ச்சியை அளக்கும் கருவியாக மழைமானி (Rain guage) என்பது காணப்படுகின்றது. இது சாதாரண ஒரு அளவு மானியாகும் பிரதேசத்தில் குறிப்பிட்ட காலத்தில் பெறப்படும் மழைவீழ்ச்சியின் அளவை அளக்க இது பயன்படுகின்றது. இதனமைப்பானது உலோகத்தாலான உருண்டையான பாத்திரத்தினுள் கண்ணாடிக் குடுவை பொருத்தப்பட்டிருக்கும். அதனுள் உலோகத்தாலான புனல் பொருத்தப்பட்டு காணப்படும். உருளை வடிவான பாத்திரத்தின் சுற்றளவும் புனலின் சுற்றளவும் ஒன்றுடன் ஒன்று பொருந்தக் கூடியவகையில் சமனாகக் காணப்படும். இவை இரண்டினதும் வாய்ப்பகுதி கிட்டத்தட்ட 12.8cm ஆகக் காணப்படும். பெறப்படும் மழைவீழ்ச்சியை அவதானித்து உருளையான பாத்திரத்தினுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வைக்கப்பட்டிருக்கும் குடுவை நிரம்பிய பின்னர் வெளியிலிருந்து mm/inch அளவில் அளவிடப்படும். 24 மணித்தியாலத்திற்கு ஒரு முறை மழைமானி மூலம் மழைவீழ்ச்சி அளவிடப்படும். இம் மானியைப் பரந்த வெளியில் தரையிலிருந்து 30cm க்கு மேல் வைத்தல் வேண்டும். ஏனெனில் பெறப்படும் மழைவீழ்ச்சியைத் தடைகள் இன்றி பெற்றுக் கொள்வதற்காகவாகும். பெறப்படும் மழைவீழ்ச்சி அருவி ஆகாதவாறு மூடி வைக்கப்படும்.

**மழைமானி (Rain guage)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மழைமானி மூலம் நீர் சேகரிக்கும் முறை




அடுத்து காற்றினை அளவிடும் கருவிகளைப் பற்றி நோக்கினால், காற்றின் திசையை அறிவதற்காக காற்றாடி (Wind wane) எனும் உபகரணம் பயன்படுத்தப்படுகின்றது. இதனமைப்பு அம்பு போன்று காணப்படும். கிட்டத்தட்ட 75cm நீளமானதாகவும் இரும்புக் கம்பியுடன் தொடர்புபட்டு காணப்படும். இவ் இரும்புக் கம்பியின் உச்சியில் அம்புக் குறியமைப்பு காணப்படும். சிறிய காற்று வீசும் போது இது அசைவுறத் தொடங்கும். இச் செங்குத்து தட்டில் அம்புக்கு கீழே நான்கு திசைகளையும் காட்டும் வகையில் தடிகள் பொருத்தப்பட்டிருக்கும். இவற்றின் மூலம் காற்று எத் திசையில் வீசுகின்றது என்பதையறிய உதவும். இக் காற்றாடியானது கூரையின் உச்சிப் பகுதியில் எவ்வித தடையுமின்றி அமைக்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## காற்றாடி (Wind wane)



காற்றின் வேகத்தையும் திசையையும் ஒரே உபகரணத்தில் அறிந்து கொள்ளக்கூடியதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள உபகரணமாக அனிமோமானி (Animo meter) காணப்படுகின்றது. பல வடிவங்களில் இம் மானி காணப்பட்டாலும் கோப்பை வடிவான அமைப்பே சிறபப்பானதாகும். இதனமைப்பு 3 அல்லது 4 கோப்பைகள் செங்குத்தான தண்டில் கம்பமாகப் பொருத்தப்பட்டிருக்கும். காற்று வீசும் போது இக் கோப்பையானது மட்டமான முறையில் சுற்ற ஆரம்பிக்கும். கோப்பை சுற்றும் போது அடியில் இலக்கமிடப்பட்ட ஒரு மானியில் காற்று வீசும் வேகத்தைக் காட்டும். இந்த மானியானது சில வேளைகளில் மின்சாரத்துடன் தொடர்பு படுத்தியும் சில வானிலை அவதான நிலையங்களில் காணப்படும். இதன் வேகமானது மணித்தியாலத்திற்கு எவ்வளவு Km வேகத்தில் காற்று வீசுகின்றது என்பதைக் காட்டும். இது Knots எனும் அளவில் அளக்கப்படும். இந்த அனிமோமானி எந்தவித தடைகளும் அற்ற பரந்த வெளியில் வைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அனிமோமானி (Animo meter)








முகில் மூடுகைகளை அறியும் கருவியாக முகில்மூடுகைப் பதிகருவி (Cloud cover recorder) காணப்படுகிறது. இது முகில்களின் எட்டு வகையான நிலமைகளை அறிவதற்கு பயன்படுத்தப்படுகிறது. கிரேக்கத்திலிருந்து பிறந்த Okta என்ற சொல் முகில் முடுகைகளின் அளவுகளை விபரிக்கப் பயன்பட்டது. இதற்காக 4 அல்லது 5cm காட்போட்டினை 20cm நீளத்தில் குழாய் வடிவில் அமைத்து பெறப்படும் வடிவமாகும். இவ்வாறு அமைக்கப்பட்ட குழாய் மூலம் கிடையாக நேராக ஒரு கண்ணினால் அவதானித்து அறியப்படும். இப் பதிவு முதலில் Oktas இலும் பின் கடைசியாக வானிலைக் கூறுகளில் பயன்படுத்தும் உத்தியோக பூர்வமான அடையாளங்களாலும் (Official symbols) குறிக்கப்படும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## முகில்மூடுகைப் பதிகருவி (Cloud cover recorder) அமைப்பும் முகில் வகைகளும்







காற்றில் செறிந்துள்ள நீராவியின் அளவை ஈரப்பதன் என்பர். ஈரப்பதனை அளப்பதற்கு ஈரக்குமிழ் வெப்பமானி, உலர்குமிழ் வெப்பமானி (Wet and Dry bulb thermometer), ஆகிய இரண்டும் பயன்படுத்தப்படுகிறது. இது Hygrometer என்றும் அழைக்கப்படுகிறது. ஈரப்பதனானது தன்னீரப்பதன், தனியீரப்பதன், சாரீரப்பதன் ஆகிய மூன்று முறைகளில் அளக்கப்படுகின்றது. Hygrometer ஆனது சாதாரண இரண்டு வெப்பமானிகளாலானது. அதாவது ஒரு வெப்பமானியின் மின்குமிழைச் சுற்றி பருத்தித் துணியினைக் கட்டி அதனை நீர்த்தாங்கி ஒன்றினுள் அமிழ்த்திக் காணப்படும். இது ஈரக்குமிழ் வெப்பமானி எனப்படும். மற்றையது உலர்குமிழ் வெப்பமானியாகும். வளியானது நிரம்பல் இல்லாது காணப்படும் போது பருத்தித் துணியிலிருந்து நீர் ஆவியாகிக் குளிர்வடையும். அதனை இரசமட்ட மாற்றத்தின் மூலம் கண்டுகொள்ளலாம். இதன் போது உலர் மின்குமிழ் வெப்பமானியில் எந்தவித மாற்றமும் ஏற்படாது. எனவே வேறுபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்புக்களை இரு மானிகளும் காட்டி நிற்கும். மாறாக வளியானது நிரம்பிக் காணப்படும் போதும் ஆவியாக்கம் இடம்பெறாத வேளையிலும் இரு வெப்பமானிகளிலும் ஒரே மாதிரியான வாசிப்புக்களைக் காட்டும்.

**Hygrometer**




சூரிய ஒளியினை அளக்கும் கருவியாக சூரியஒளிபதிகருவி (Sun shine recorder) காணப்படுகின்றது. பூமி சூரியனைச் சுற்றுவதால் எல்லாப் பிரதேசங்களிலும் ஒரேயளவான சூரிய ஒளி கிடைப்பதில்லை. ஒரு இடத்தில் எத்தனை மணித்தியாலங்கள் அல்லது நிமிடங்கள் சூரிய ஒளி கிடைக்கின்றது என்பதனை இந்த பதிகருவி அளந்து காட்டும். உலோகத்தாலான உருவத்தினைச் சுற்றி கண்ணாடி காணப்படும். இதற்குள் இருக்கும் பதிவு அட்டையில் சூரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒளிக் கதிரினளவை பதிந்து கொள்ளும். சூரிய ஒளியானது இக் கருவியின் மேல் நேரடியாக விழும் போது அது தனது கணிப்பினை ஒரு வரைபடத்தில் பதிந்து வைத்துக் கொள்ளும். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எவ்வளவு சூரிய ஒளி கிடைக்கின்றது என்பதை அறியலாம்.

**சூரியஒளிபதிகருவி (Sun shine recorder)**



இன்று தொழிநுட்ப முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி போன்றவற்றின் பலனாக அனைத்து வானிலைக் கூறுகளையும் ஒரேநேரத்தில் அளவிடும் கருவிகள் கூட கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதாவது செய்மதிகள் மூலமாக கணனியூடாக விரைவில் ஒரேநேரத்தில் அனைத்தினையும் அறிந்து கொள்ளும் முறைகள் விருத்தி பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நவீன கருவி



வளிமண்டல நிலமைகளை அறிய ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்ட ஐதரசன் பலூன்கள் மாறி செய்மதி மூலம் வளிமண்டலத்தில் ஏற்படும் நிகழ்வுகளை தரவுகளாக கணனிக்கும் அனுப்பும் நிலமை ஏற்பட்டுள்ளது. இதனால் ஒரு பிரதேசத்தின் வானிலை நிலமைகளை குறிப்பிட்ட சில நிமிடங்களில் அறியக்கூடிய தன்மை விருத்தியடைந்துள்ளது.

## உசாத்துணை நூல்கள்


1. Bunnett.R.B, 1995, "Physical Geography in Diagrams", Longman Group Ltd, England, 183-186
2. Goh Cheng Leong, 1994, "Certificate Physical and Human Geography", Oxford University, 114-122
3. Jennifer Frew, 1999, "Geography fielf work project", Thomas Nelson and sons Ltd, UK, 28-35
4. www.coollessons.org/Weathr13.htm
5. www.phanderson.com/weather/index.html
6. www.coleparmer.com/catalog/product_index.asp?cls=7385 - 34k




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிழக்கின் கல்வி வரலாற்றில் இராமகிருஷ்ண மிஷன்

**பேராசிரியர் மா.செல்வராஜா**
தலைவர், கல்வித் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்:**

கல்வி மனிதனையும் சமூகத்தையும் மாற்றியமைக்கின்ற வலிமை பொருந்திய சக்தியாக மிகப் பண்டைக் காலத்திலிருந்தே கையாளப்பட்டு வந்திருக்கிறது. தனி மனித உயர்வுக்கும், சமூக உயர்வுக்கும் கல்வியே வழிவகுத்து வந்துள்ளது. இன்றைய உலகு பல துறைசார் கல்வி வளர்ச்சியின் விளைவாகும். கல்விக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்ட நாடுகள் சகல அம்சங்களிலும் வளர்ச்சி பெற்றுள்ளதை உலக வரலாறு உணர்த்துகின்றது. சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டு வர முயன்ற அரசுகள் கல்வியைத் தம் கருவியாகக் கொண்டன. மனிதனின் துன்பத்திற்குக் காரணம் அறியாமை. அவ்வறியாமையை நீக்கினால், மனிதன் துன்பத்திலிருந்து விடுபடலாம் என்பது ஆன்றோர் வாக்கு. மனிதன் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதும், கற்க மறுப்பவன் வாழ மறுப்பவனாகின்றான் என்பதும் இராமகிருஷ்ணர் திருவாக்கு. மனிதனிடம் ஏற்கனவே மறைந்துள்ள பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே கல்வி என்பது விவேகானந்தர் திருவாக்கு. இதனாலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இராமகிருஷ்ண மிஷனின் பல பணிகளுள் கல்விப் பணி பிரதான இடம் வகிக்கின்றது.

## கிழக்கின் பண்டைய கல்வி முறை

வடக்கே திருகோணமலை மாவட்டம் தொடங்கி, தெற்கே அம்பாறை மாவட்டம் வரையிலான நிலப்பரப்பு கிழக்கிலங்கையை உள்ளடக்கியது. மேலும், தமிழர், சிங்களவர், இஸ்லாமியர், பறங்கியர் எனப் பல்வேறுபட்ட சமூகப் பிரிவினர் வாழ்ந்து வரும் பிரதேசமாகவும் கிழக்கிலங்கை விளங்குகின்றது. பண்டைய கிழக்கின் கல்விமுறை மரபு வழி சார்ந்ததாகவும், தொழில்வழிக் கல்வி சார்ந்ததாகவும் இருந்து வந்துள்ளதற்கு ஆதாரங்கள் உள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் கல்வி, தொழிற்கல்வி என்பனவற்றை வளர்த்துக் காக்கக் குல அடிப்படையைக் கொண்டிருந்தனர். கட்டிடம், சிற்பம், சித்திரம், ஆடல், இசை முதலிய கலைகள் மட்டுமன்றி பாத்திரம் வனைதல், கொல்ல வேலை, தச்சு வேலை, நகை இழைத்தல், நெசவு போன்ற தொழில்களும் குல அடிப்படையில் காத்து வளர்க்கப்பட்டன. இது குல வித்தை எனப்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் தோன்றியதாகக் கொள்ளப்படும் போடி கல்வெட்டில், அம்பிளாந்துறையில் பண்டிதர்களைக் கொண்டதும், அன்னச்சத்திரம் உள்ளதுமான கல்வி நிலையமொன்று இயங்கியதாகத் தெரிகின்றது. இக்கல்வெட்டில் பல உயர்ந்த கல்விக் கருத்துக்கள் அடங்கியுள்ளன. திருச்சிராப் பள்ளியிலிருந்து கற்றறிந்த பண்டிதர் சிலர் இங்கு கல்விப் பணிக்கெனக் கொண்டு வரப்பட்ட செய்தி நோக்குதற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கிறிஸ்தவ மிஷனரிகளின் கல்வித் தொண்டு

கிழக்கில் இராமகிருஷ்ண மிஷனின் கல்வித் தொண்டு பற்றி நோக்கும் நாம், அதற்கு முன்னர் கல்விப் பணியாற்றிய கிறிஸ்தவ மிஷனரிகளின் கல்வித் தொண்டு பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. கிறிஸ்தவக் கல்விப் பணியும் ஏனைய இந்து இஸ்லாமியக் கல்விப் பணி போன்று சமயத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்கியது. 16ம் நூற்றாண்டின் பின்னர் உள்ள இலங்கையின் கல்வி வளர்ச்சியில் கிறிஸ்தவ மிஷனரிகள் பெரும் பங்காற்றின. இலங்கையின் ஏனைய மாகாணங்களில் போன்று கிழக்கிலங்கையிலும் கிறிஸ்தவர் கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர். மேல்நாட்டு மொழிக் கல்வி, விஞ்ஞானக் கல்வி என்பனவற்றை ஊட்டிய புதிய முறையான பள்ளிக் கூடங்கள் தோற்றம் பெற்றன. மக்கள் தமது சுதேச கல்வி கலாசாரப் பண்புகள் பலவற்றை இக்கல்வி மூலமாக இழக்கத் தொடங்கிய நிலையையும் குறிப்பிடலாம். கிறிஸ்தவ மதத் துறவிகள் மேல்நாடுகளில் தம் உற்றார் உறவினர்களை விட்டு, வாழ்க்கை வசதிகளை விட்டு கீழைத்தேசங்களுக்குச் சேவையாற்ற வந்தனர். கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதில் தம் உயிரையும் விடவும் இவர்கள் தயாராக இருந்தனர். தியாகமும், அதனடிப்படையில் வந்த ஒற்றுமையுணர்வும் இவர்கள் கிழக்கு மாகாணத்தில் மட்டுமன்றி, இலங்கையின் ஏனைய பாகங்களிலும் சாதனைகளை நிலைநாட்டக் காரணிகளாக அமைந்தன.

கிழக்கு மாகாணத்தில் கத்தோலிக்க, மெதடிஸ்த, அக்கிளிக்கன் மதப்பிரிவினர் கல்விப் பணியாற்றினர். மட்டக்களப்பில் 1814ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்விப் பணி ஆரம்பமாயிற்று. மட்டக்களப்பு, கோட்டைமுனை அமிர்தகழி, மஞ்சந்தொடுவாய், முதலைக்குடா, களுவன்கேணி, செங்கலடி, கல்முனை, கல்லாறு, பழுகாமம், திருக்கோயில், கோமாரி, அக்கரைப்பற்று, பொத்துவில், திருகோணமலை, நிலாவெளி, மூதூர் போன்ற இடங்களில் மெதடிஸ்த சபைத் துறவிகள் பாடசாலைகளை ஆரம்பித்துக் கல்விப் பணியாற்றினர். யேசு சபையினர், புனித வளனார் சபையினர், கார்மேல் கன்னியர் சபையினர் ஆகியோர் கல்வித் தொண்டில் அயராது உழைத்தனர். திருகோணமலையிலிருந்து பொத்துவில் ஈறாக நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரிகள், பாடசாலைகள் மேற்கூறப்பட்ட சபைகளின் துறவியரால் ஸ்தாபித்து நடாத்தப்பட்டன. அது மட்டுமன்றி, ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் மட்டக்களப்பு அரசடி போன்ற இடங்களில் நடாத்தப்பட்டன. இவர்களது சேவையால் கிழக்கிலங்கையில் கல்வி, சமய, கலாசார விழிப்புணர்வு உயர்த்தப்பட்டது. சுதேச கலாசாரத் தேவை அதனடிப்படையிலான கல்வியின் அவசியம் என்ற உணர்வுகள் இங்குள்ள மக்களிடையே வளர்ச்சியடைந்தன.

## இராமகிருஷ்ண மிஷனின் கல்விப் பணிகள்

சுவாமி விவேகானந்தர் மேலைநாடுகளுக்குச் சென்று பணியாற்றிய பின்னர் தனது தாய்நாட்டிற்குச் செல்லுமுன் கொழும்பை வந்தடைந்தார். அவருக்கு இலங்கைவாழ் இந்துக்களால் அமோக வரவேற்பு வழங்கப்பட்டது. கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் அவர் உரையாற்றினார். இலங்கையிலும் இந்தியாவிலும் தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒற்றுமைக்கு ஆத்மீக சக்திகள் ஒன்றுசேர்க்கப்பட வேண்டுமென்ற உண்மையினை அவர் வெளியிட்டார். இக்கருத்துக்கள் இங்குள்ள அனைத்து மத நிறுவனங்களுக்கும் உந்துசக்தியாக அமைந்தன. யாழ்ப்பாணத்தில் அவர் ஆற்றிய உரை சமூக சீர்திருத்தத்திற்கு வித்திட்டது. இந்துக்கள் கடவுள் வழிபாட்டிலும் கூடப் பொறாமை பாராட்டுகின்றார்கள் என்று கூறிய அவர், தீண்டாமை சமூகத்தை விட்டு நீங்க வேண்டுமெனவும் கூறினார். சுவாமி விவேகானந்தரிடம் விடப்பட்ட வேண்டுகோளிற்கு இணங்க சுவாமி சிவானந்தர் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். இவ்வாண்டிலேயே கொழும்பு விவேகானந்த சபையும் அமைக்கப்பட்டது. 1903-1906க்கு இடைப்பட்ட காலத்தில் இராமகிருஷ்ண பரமஹம்சரின் நேர்ச்சீடர்களான சுவாமி துரியானந்தர், சுவாமி அபேதானந்தர் போன்றோர் வரவழைக்கப்பட்டுச் சொற்பொழிவுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இக்காலத்தில் விவேகானந்த சபை மேல்மாகாணம், வடமாகாணம், மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் முதலிய இடங்களில் பரவியது. பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் சுவாமி விவேகானந்தரது கருத்துக்களாலும், பணிகளாலும் கவரப்பட்டனர்.

சென்னை இராமகிருஷ்ண மிஷனின் தலைவராக இருந்த சுவாமி சர்வானந்தரவை விவேகானந்த சபை அழைத்துச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இவரது வருகையும் இளைஞர்களைச் செயலில் ஈடுபடத் தூண்டியது. இவ்வாறு இளைஞர்களால் தோற்றுவிக்கப்பட்ட சபைகள் கொழும்பு விவேகானந்த சபையுடன் தொடர்பு கொண்டனவாக விளங்கின. சுவாமி விவேகானந்தரது இலங்கை விஜயத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொடர்ந்து இராமகிரஷ்ண சங்கத் துறவிகள் இந்நாட்டிற்கு அடிக்கடி வரும் வாய்ப்புகள் அதிகரித்தமையால், இங்கு இராமகிருஷ்ண மிஷனின் கருத்துக்கள் பரவவும், சமய கலாசார சமூகப் பணிகள் விருத்தியடையவும் ஏதுவாயிற்று. இராமகிருஷ்ண மிஷனின் கல்விப் பணியினை நாம் மொழி அடிப்படையிலும் பாடசாலையின் தரத்தினடிப்படையிலும் நோக்குதல் பொருத்தமாகும்.

## ஆங்கிலப் பாடசாலைகள்

1924ம் ஆண்டு சுவாமி விபுலானந்தரின் வருகை கிழக்கிலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு புது சகாப்தத்தை ஏற்படுத்தியது. சுவாமிகள் தமது அறிவாற்றல், முன்னேற்றகரமான நோக்கு என்பனவற்றால் தம்முடன் தொடர்பு கொண்டவர்களைக் கவர்ந்து கல்வி நடவடிக்கையை விரிவாக்கினார். சுவாமி விபுலானந்தரின் உதவியை நாடி திருகோணமலை மக்கள் 1925ல் இந்துப் பாடசாலை ஒன்றை அவரிடம் கையளித்தனர். இராமகிருஷ்ண மிஷன் நிருவாகத்தின் கீழ் வந்தவுடன் இப்பாடசாலையானது மாணவர் தொகை, மற்றும் உபகரண வசதிகள் என்பவற்றில் துரித வளர்ச்சியடையத் தொடங்கியது. 1940-45 காலப்பகுதியில் இதன் வளர்ச்சி சற்றுத் தடைப்பட்டது. காரணம், உலகப் போரின் நிமித்தம் இப்பாடசாலையில் இராணுவத்தினர் தங்க வேண்டியதாயிற்று. ஆயினும், மக்களின் ஆதரவு காரணமாக, விவேகானந்தர் கண்ட மனிதனை உருவாக்கும் பணியில் இப்பாடசாலை முன்னேற்றம் கண்டது. கிழக்கிலங்கையில் முன்னணியில் நிற்கும் நிறுவனங்களுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒன்றாக விளங்கி, திருகோணமலைப் பகுதியில் கல்வி நிலையை உயர்த்தியது இந்துக் கல்லூரியாகும்.

மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் தாகூரின் சாந்தி நிகேதனுக்கு நிகராக ஒரு கல்விச் சாலையை அமைக்க வேண்டுமென்ற தனது கனவை நனவாக்கும் பொருட்டு ஓர் ஆங்கில ஆண்கள் பாடசாலையை நிறுவ சுவாமிகள் முன்வந்தார். சிவானந்த வித்தியாலயத்திற்கு 1925ல் அடிக்கல் நாட்டப்பட்டு 1929ல் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. தனது குருநாதருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக 'சிவானந்த வித்தியாலயம்' என அதற்குப் பெயரிடப்பட்டது. மட்டக்களப்பில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட இந்து ஆங்கிலப் பாடசாலை இதுவாகும். ஆங்கில மொழி மூலம் விஞ்ஞானக் கல்வியை வளர்த்து வந்த நிறுவனம் இதுவாகும்.

மேற்குறிப்பிட்ட இரு பாடசாலைகளும் இன்று சிறப்பான வளர்ச்சியடைந்து தேசியப் பாடசாலை அந்தஸ்தைப் பெற்று சிறந்த கல்விப் பணியாற்றும் நிறுவனங்களாகச் செயற்பட்டு வருவதைக் காணலாம்.

## சிரேஷ்ட இடைநிலைத் தமிழ்ப் பாடசாலைகள்

இராமகிருஷ்ண மிஷனின் தமிழ்ப் பாடசாலைகளை நாம் மூன்று வகையாகப் பகுத்து நோக்கலாம். அவை:

1. சிரேஷ்ட இடைநிலைத் தமிழ்ப் பாடசாலைகள்
2. கனிஷ்ட இடைநிலைத் தமிழ்ப் பாடசாலைகள்
3. ஆரம்பத் தமிழ்ப் பாடசாலைகள்

பன்னிரண்டு சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளில் இராமகிருஷ்ண மிஷன் நடத்தி வந்தது.

அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை, மண்டூர், களுதாவளை, பழுகாமம், கல்லடி, உப்போடை, ஆரைப்பற்றை, சித்தாண்டி, தம்பலகாமம் முதலிய இடங்களில் இத்தகைய பாடசாலைகள் இயங்கி வந்தன. இவை சில பொதுமக்களால் ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் மிஷனுக்குக் கையளிக்கப்பட்டவை. சில மிஷனாலேயே பொதுமக்களின் உதவியால் தோற்றுவிக்கப்பட்டவை.

கனிஷ்ட இடைநிலைப் பாடசாலைகள் கொக்கட்டிச்சோலை, மங்கிகட்டு, ஈச்சந்தீவு, நாவற்காடு, ஆனைப்பந்தி, முறக்கொட்டாஞ்சேனை முதலிய இடங்களில் அமையப் பெற்றிருந்தன.

ஆரம்பத் தமிழ்ப் பாடசாலைகள் நான்கினை இராமகிருஷ்ண மிஷன் நடாத்தி வந்தது. காரைதீவு, கரடித் தோட்டம், திருகோணமலை கோணேஸ்வர வித்தியாலயம் முதலியவை இவையாகும். பொதுவாக நோக்கும் போது, இப்பாடசாலைகள் அனைத்துமே மிஷன் நடத்தி வந்த காலத்திலும், பின்னரும் படிப்படியாக வளர்ச்சியடைந்து அவ்வப்பகுதிகளில் கல்வி, மற்றும் சமய பண்பாட்டுக் கலாசார வளர்ச்சிக்குப் பங்களித்து வந்தன. இப்பிராந்தியத்தின் சமயம், கலாசாரம், பண்பாடு என்பன இப்பாடசாலைகள் இன்றேல் மறைந்து போயிருக்கும் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். 1962ல் இப்பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றாலும் கூட இப்பாடசாலைகளுடன் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வரை இராமகிருஷ்ண மிஷனின் தொடர்பு இருந்து கொண்டே வருவதை நாம் அவதானிக்கலாம். மேலும், இப்பாடசாலைகள் அனைத்தும் இன்று கல்லூரிகளாக, மகாவித்தியாலயங்களாக, தேசியக்கல்லூரிகளாக, க.பொ.த. சாதாரண வகுப்புக்களைக் கொண்ட 2ஆம் தரப் பாடசாலைகளாக உயர்வு கண்டிருப்பது இவை ஆற்றிய கல்விப் பணிக்குச் சான்றாக அமையும்.

## மாணவரில்லங்கள்

மாணவரில்லங்களை நடத்துவதன் மூலமும் இராமகிருஷ்ண மிஷன் கல்வி, சமூக சேவைகளை ஆற்றி வந்தது. முழுமையான மனிதனை உருவாக்குதல் என்ற கோட்பாட்டினடிப்படையில் புத்திக் கூர்மையுள்ள வறிய மாணவர்களுக்காக மாணவரில்லங்கள் தோற்றுவிக்கப்பட்டன. கல்லடி உப்போடையில் அமைந்துள்ள மாணவரில்லம், சாரதா மகளிர் இல்லம், காரை தீவு சாரதா மகளிர் இல்லம் என்பன இந்நாட்டு வறிய மாணவர்களுக்கும் தாய் தந்தையரை இழந்த மாணவர்களுக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இன்று வடக்குக் கிழக்கு மாகாணத்தில் பரவலாகப் பொதுமக்களாலும், நிறுவனங்களாலும் மாணவரில்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. போர்ச்சூழலால் தாய் தந்தையரை இழந்த குழந்தைகளின் கல்விக்காக இவை பெரும் பணியாற்றி வருகின்றன. இத்தகைய மாணவரில்லங்களுக்கெல்லாம் மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் விளங்குபவை இராமகிருஷ்ண மிஷன் நடத்தி வரும் மாணவரில்லங்களாகும். மாணவரில்லங்களை நடத்தும் நிறுவனங்களுக்குப் பொருத்தமான ஆலோசனைகளையும், இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் வழங்கி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாணவர்கள் இராமகிருஷ்ண மிஷன் நடத்தும் மாணவரில்லங்களை வந்து பார்த்து அனுபவங்கள் பெறும் ஒழுங்குகளையும் பல்வேறு நிறுவனங்கள் மேற்கொள்கின்றன. மிஷன் நடத்தும் இவ்வில்லங்களில் மாணவர்கள் பெறும் பயிற்சிகள் ஒரு முழு மனிதனை உருவாக்கும் பாங்கில் அமைந்தவை.

## ஆத்மீகக் கல்வியைப் பரப்பும் தொண்டு

ஆத்மீகக் கல்வியை வழங்கும் ஒரு அரிய பணியினைக் கடந்த சில பத்தாண்டுகளாக இராமகிருஷ்ண மிஷன் மிகவும் சிறப்பான வகையில் ஆற்றி வருகின்றது. ஸ்ரீராமகிருஷ்ணர் காட்டிய வழியில் வேதாந்த ஆராய்ச்சியை ஊக்குவித்தலும், அறிவை வழங்குதலும் இராமகிருஷ்ணர் தமது வாழ்வில் வாழ்ந்து நிரூபித்தபடி சமய உண்மைகளைப் பரந்த நோக்கில் காண்பதும் இராமகிருஷ்ண மிஷனின் ஒரு குறிக்கோளாகும். இதனடிப்படையில் பல்வேறுபட்ட மாதாந்த இதழ்களை இந்தியாவில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் கிளைகள் வெளியிட்டு மக்களிடையே பரப்பி வருகின்றன. அவற்றில் ஒன்று 'இராமகிருஷ்ண விஜயம்' ஆகும். மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் கிளையானது 1500க்கு மேற்பட்ட பிரதிக்ளை மாதம் தோறும் மக்களிடையே சிறிய மாதாந்தச் சந்தாவைப் பெற்று விநியோகித்து வருகின்றது. இதன் மூலமாக மக்களிடையே ஒரு அறிவுப் பரம்பல் அமைதியாகவும் உறுதியாகவும் ஏற்பட்டு வருவதைக் காண முடிகின்றது. இராமகிருஷ்ண விவேகானந்த சிந்தனைகள் மக்களது சிந்தனையில் உடன்பாடான மாற்றத்தை ஏற்படுத்தி வருவதை இந்த மாதாந்த விநியோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிரூபித்துள்ளது. "அறிவியல் நூலின் பயனை ஏற்கும் பொருட்டு இந்து சமயமானது அறிவுத் துறையைச் சிறப்புற வற்புறுத்தல் வேண்டும். அங்ஙனமாயினும், இடைக்கால இந்தியாவில் வாழ்ந்த பெரியோர் திரட்டி வைத்த ஆத்மீகச் செல்வத்தினை இந்நாட்டினர் இழந்து விடுதல் கூடாது. பழமையும் புதுமையும் துவைதமும் அத்வைதமும், பௌதிக விஞ்ஞானமும், மெய்ஞானக் காட்சியும், மேற்றிசை அறிவும், கீழ்த்திசைச் சமயமும், மனமொடுங்கிய தியானநெறியும், மனித குலத்திற்குத் தொண்டு புரிதலும் சமரசப்பட வேண்டிய காலம் இதுவாகும்" என்பது சுவாமி விபுலானந்தர் கருத்தாகும். இதனடிப்படையில், பல செயற்பாடுகளை இராமகிருஷ்ண மிஷன் மேற்கொண்டு வருவது அதன் கல்விப் பணிக்குச் சான்றாகும்.

## புத்தகக் கண்காட்சிகள்

காலத்திற்குக் காலம் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் புத்தகக் கண்காட்சிகளை நடத்தி வந்துள்ளது. மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை, காரைதீவு, ஆரையம்பதி, வவுனியா, அக்கரைப்பற்று, தம்பிலுவில், பெரிய கல்லாறு, செங்கலடி, கிழக்குப் பல்கலைக்கழகம் போன்ற இடங்களில் நடத்தப்பட்ட புத்தகக் கண்காட்சியில் இடம்பெற்ற நூல் விற்பனைகளில் பல இலட்சம் ரூபாய்களுக்கு நூல்கள் விற்பனையாகியிருப்பது மக்கள் மத்தியில் ஆத்மீகம் சார்ந்த இலட்சியங்களில் உள்ள பேரார்வத்திற்கு உதாரணமாகும். இராமகிருஷ்ண மிஷன் நடத்தி வந்த பாடசாலைகளை 1962ல் அரசு பொறுப்பேற்றாலும் கூட, அதன் கல்வி சார்ந்த பணிகள் வேறு ஒரு பரிமாணத்தில் தொடர்ந்து கொண்டிருப்பதை நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காணலாம்.

**விரிவுரைகளும் செயலமர்வுகளும்**

மேலும், காலத்திற்குக் காலம் இடம்பெறும் பெருவிழாக்களின் போது இந்திய நாட்டிலிருந்து அறிவாற்றல் வாய்ந்த சுவாமிகளும், அறிஞர்களும் வரவழைக்கப்பட்டு ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள் ஆகியோருக்கு விரிவுரைகளும் செயலமர்வுகளும் ஆத்மீகப் பயிற்சிப் பட்டறைகளும் நடத்தப்படுகின்றன. இவற்றால் பலரது ஆர்வம் தூண்டப்பட்டிருப்பதையும் காண முடிகின்றது. வெள்ளிவிழா, பவளவிழா, வைரவிழா, நூற்றாண்டு விழா, 150ஆவது ஆண்டு விழாக்கள் என்பனவற்றின் போது சிறப்பறிஞர்களும், துறவிகளும் வரவழைக்கப்பட்டு மக்கள் மத்தியில் விரிவுரைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இவை மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க கல்வித் தாக்கத்தினையும், சிந்தனை மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளன என்பது தெளிவு.

**நிறைவுரை**

இராமகிருஷ்ண மிஷனின் கல்விப் பணி முடிவடையாததும், தொடர்வதுமான ஒரு பணியாகும். மிஷனின் கடந்த காலப் பணிகள் மக்களிடையே ஒரு உடன்பாடான தாக்கத்தைக் கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக அமைதியாக, ஆனால் ஸ்திரமாக ஆற்றி வந்துள்ளதை உறுதியாகக் கூற முடியும். சமூக மாற்றம், காலத்தின் தேவை என்பனவற்றின் அடிப்படையில், புதிய உத்திகளைக் கல்விப் பணியில் மிஷன் மேற்கொண்டு வந்துள்ளது. இதன் மூலம் எண்ணற்றோரின் ஆளுமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒரு விருத்தி, சமூகங்களிடை ஓர் இணக்கம், சேவை தொடர்பான தத்துவப் பின்னணி சார்பான ஒரு விளக்கம் என்ற பல பரிமாணங்களினூடாக இராமகிருஷ்ண மிஷனின் முடிவடையாத கல்விப் பணி தொடர்கின்றது. காலம் மாறுகின்றது. சமூகம் மாறுகின்றது. தேவைகள் மாறுகின்றன. கருத்துக்கள், கோட்பாடுகள் மாறுகின்றன. தனிமனிதனின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் மாறுபடுகின்றன. இவற்றினூடே இராமகிருஷ்ண மிஷனின் கல்வியடிப்படையான பல் பரிமாணத் தொண்டும் தொடர்கின்றது.

**துணை நூல்கள்**


1. எம். சித்திரலேகா, வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, 2004
2. வ. சிவசுப்பிரமணியம், விபுலானந்த தரிசனம், மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை, மட்டக்களப்பு, 1993
3. Swami Virupakshananda, The Ramakrishna Movement in Sri Lanka, Ramakrishna Mission, Colombo, 2005
4. பே.சு. மணி, இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம், இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு, 1997
5. அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மண்டபம் திறப்பு விழா மலர், 1949
6. பொன்விழா சிறப்பு மலர், (1946-1996) முதலைக்குடா ம.வி., கொக்கட்டிச்சோலை, 1996




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

7. பொன்விழா மலர் (1952-2002) மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கம், மட்டக்களப்பு, 2002
8. சோ. சாமித்தம்பி (தொகுப்பு) அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் மகாவித்தியாலய வரலாறு
9. வ. சிவசுப்பிரமணியம், மட்டக்களப்பு நாட்டாரியல், 2004
10. எஸ்.ஏ.ஐ. மத்தியு, கிழக்கு மாகாணத்தில் கிறிஸ்தவர் ஆற்றிய கல்விப் பணி, ஓர் ஆய்வு, பழைய மாணவர் சங்க வெளியீடு, கார்மேல் பாத்திமா கல்லூரி, கல்முனை, 1999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வங்கக்கடலில் புதிய தகட்டின் உருவாக்கமும் இலங்கையில் சுனாமி அச்சுறுத்தலும்

*Mr Kirupa Rajaratnam , Dept.of Geography, EUSL*

கடந்த 2004.12.26 இல் நாம் இலங்கையின் வரலாற்றில் என்றும் இல்லாதவாறு ஒரு பேரழிவைச் சந்தித்துள்ளோம். இலங்கையில் 40000 மக்களைப் பலிகொண்ட சுனாமி பல கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்களையும் கடலினுள் கரைத்துச் சென்ற நிகழ்வுகள் மனதைவிட்டு நீங்காத நிலையில் மீண்டும் சுனாமி ஏற்படுமா? என்ற அச்சம் கடந்த 18.07.2007 அன்று வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் மூலம் வலுப்பெற்றுள்ளது. இவை பற்றி ஆழமாகச் சிந்திக்கத் தூண்டும் வகையில். தகடுகள் என்பது யாது? அவை எவ்வாறு உருவாக்கம் பெறுகின்றது? வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தகட்டின் மூலம் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன? இதற்கு முன்னெச்சரிக்கை சமிக்ஞைகள் எந்தளவுக்குச் சாத்தியமாகும்? என்பது தொடர்பாக ஒரு தெளிவினை ஏற்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அந்தவகையில் எதிர்காலத்தில் வங்கக்கடலில் உருவான புதிய தகட்டில் சுனாமி அச்சுறுத்தல்கள் பற்றி சிந்திப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

## தகடு என்றால் என்ன?

நிலநடுக்கத்தின் தோற்றத்தில் புவிக் கவசத் தகடுகளே பிரதான பங்கு வகிக்கின்றன. தகடுகள் என்பது புவியின் கெட்டியான மேற்பரப்பு அதாவது புவியோடு புவியின் உள்ளிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வெளிக்கிளம்பும் கிளர் மின் விசைகளால் பல கூறுகளாக பிளவு படுத்தப்படுகின்றது. இவ்வாறு பிளவுற்ற புவியோட்டின் பாகங்களே தகடுகளாகும். இவை பிளவுற்ற பிரதேசங்களைப் பொறுத்து அந்தந்த பிரதேசங்களின் பெயர்களால் அழைக்கப்படுகின்றது உதாரணமாக வட அமெரிக்கக் தகடு வட அமெரிக்காவை வேறுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது இதேபோன்றே ஆபிரிக்கத் தகடு, தென் அமெரிக்கத் தகடு, பசுபிக் தகுடு ஆகியன அமைவு பெற்றிருக்கின்றன (உரு 01).

**உரு 01 : உலகில் இனம்காணப்பட்ட சில முக்கியமான தகடுகள்**




புவியின் உட்பாக நிலைமையின் வேறுபட்ட இயல்புகள் காரணமாக இன்றுவரை சிறியதும் பெரியதுமாக 20க்கும் அதிகமான தகடுகள் பூமியில் உருவாகியிருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது இத்தகடுகள் அசைகின்ற ஒவ்வொரு கணமும் ஆபத்துக்கள் வெவ்வேறு வடிவங்களில் காத்திருக்கின்றன என்பதை மட்டும் மறுக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தகடுகளின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைவது புவியின் உள்ளமைப்பாகும் இதன் வேறுபட்ட இயல்புகளை முதலில் விளங்கிக் கொள்வது அவசியமாகும். புவியின் உட்கட்டமைப்பைப் பொறுத்தவரையில் மூன்று வித்தியாசமான இயல்புகளைக் கொண்டமைந்து காணப்படுகின்றது. அவை புவியோடு, இடையோடு மற்றும் கோளவகம் என்பதாகும். புவியோடு என்பது குளிர்ந்த கெட்டியான சராசரி 35 கிலோ மீற்றர் தடிப்புடைய பகுதியாகும். இடையோடு புவியோட்டிற்குக் கீழ் 2900 கிலோ மீற்றர் வரை தடிப்புக்கொண்ட பாகுநிலையிலான பாறையாகும். கோளவகம் இடையோட்டிற்குக்கீழ் சுமார் $6000^{0}C$ இல் கொதித்துக் கொண்டிருக்கின்ற பாறைக் குழம்பினை மத்தியில் கொண்டுள்ள ஒரு பகுதியாகும். 6378 கிலோ மீற்றர் தடிப்புள்ள புவியில் சுமார் 6343 கிலோ மீற்றர் உருகிய நிலையில் கொதித்துக் கொண்டிருக்கும் பாறைக் குழம்பாகவே காணப்படுகின்றது. இப்பகுதியிலிருந்து வெளிப்படும் பிரமாண்டமான சக்தியே தகடுகளின் உருவாக்கத்திற்கும் அதன் மூலமான அனர்த்தங்களுக்கும் அடிப்படையாகின்றது. (உரு 02).

**உரு 02 : புவியின் உட்கட்டமைப்பு**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இந்து சமுத்திரத்தில் சுனாமி

இந்து சமுத்திரத்தில் சுனாமி பல தடவைகள் தோன்றியபோதும் இந்தோனேசியாவில் ஏற்பட்ட இருவேறு நிகழ்வுகளால் இலங்கையில் சுனாமி தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது. ஒன்று 1883 இல் காரக்கற்றோவா எரிமலை வெடித்தபோது இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மேற்குக் கரையோரங்கள் சுனாமி தாக்கத்திற்கு உட்பட்டுள்ளது. அடுத்து 2004 இல் வடசுமாத்திராவில் ஏற்பட்ட பாரிய நில அதிர்வு மற்றுமொரு சுனாமியைத் தோற்றுவித்திருந்தன. ஆனால் 1883 இல் ஏற்பட்ட சுனாமி இலங்கையின் கரையோரத்தை 2004 ஆம் ஆண்டை விட கோரமாகத் தாக்கியிருக்கின்றது என்பதை விளக்கப்படத்தின் மூலம் விளங்கிக்கொள்ள முடிகின்றது. ஏறக்குறைய 121 வருடங்களின் பின் கடந்த 2004 இல் சுனாமி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**உரு 02 : இந்து சமுத்திரத்தில் சுனாமி 1883 இலும் 2004 இலும்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருப்பினும் கடந்த சுனாமியைத் தொடர்ந்து புவியியலாளர்களின் கவனம் புவிக்கவசத்தகடுகளின் பக்கம் திரும்பின அவைசார்ந்த ஆய்வுகளும் அவதானிப்புகளும் அதிகரித்தன. புதியதகடுகளைக் கண்டறியும் முயற்சிகள் தீவிரமடைந்தன. வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு அண்மையாக கிட்டத்தட்ட 300 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் புதியதோர் தகடு உருவாகியுள்ளமை பற்றிய கருத்துக்கள் கடந்த சுனாமியைத் தொடர்ந்தே வெளிவரத் தொடங்கின (மத்திய வங்கி ஆண்டறிக்கை 2004). இருப்பினும் அவை புதிய தகட்டில் எந்தவிதமான அனர்த்தங்களும் தோன்றாத வரை உறுதிப்படுத்தப்படாததாகவே இருந்தது. எனினும் கடந்த ஜுலை 18 ஆம் திகதி வங்காள விரிகுடாவில் 5.2 ரிச்டர் அளவுத்திட்டத்தில் பதிவான நிலநடுக்கம் இலங்கையின் தென் கரையோரத்தில் இருந்து 300 கிலோ மீற்றருக்கு அப்பால் உருவாகியுள்ளமை மூலம் இப் புதிய தகட்டின் உருவாக்கம் உறுதியாகியுள்ளது. இந் நிலஅதிர்வின் தாக்கம் திசமகாராம என்னும் இடத்தில் உணரப்பட்டபோதும் அங்கு பல வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் நிலநடுக்கங்கள் பல இலங்கையின் பல பாகங்களில் உணரப்பட்டபோதும் சமீபத்திலேயே புவிநடுக்க மையமானது இலங்கையை அண்டி அமைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கம் புதிய தகடு ஒன்று உருவாக்கப்பட்டதன் ஆரம்ப நிகழ்வு என்று குறிப்பிடத் தோணுகின்றது. இத்தகடு விருத்தியடைந்து வரும் பட்சத்தில் எதிர் காலத்தில் பாரதூரமான விளைவுகள் இலங்கைக்குக் காத்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. இப்புதிய தகடானது விருத்தியுறும் நிலை மற்றும் அதன் அசைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்பதைப் பொறுத்து நிலநடுக்கம், சுனாமி என்பவற்றோடு மட்டுமன்றி எரிமலை ஒன்று தோற்றுவிக்கப்பட்டால் கூட ஆச்சரியப் படுவதற்கில்லை.

## நிலநடுக்கம் இடம்பெறும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுனாமி தோற்றம் பெறுமா?

வரலாற்றுப் பதிவுகளின் அடிப்படையில் அதிகம் நிலநடுக்கங்களே சுனாமியைத் தோற்றுவித்துள்ளன. ஆனால் இந் நிலநடுக்கங்கள் கடல் அடித்தளத்தில் ஏற்படவேண்டும். கடல் அடித்தளத்தில் தோன்றும் நிலநடுக்கங்கள் எல்லாம் சுனாமி வடிவம் பெறக் காரணமாக அமைய முடியாது. அதற்கு நான்கு பிரதானமான பௌதீக அடிப்படைகள் உள்ளன.

1. நிலஅதிர்வு பதிவாகும் ரிச்டர் அளவு
2. நிலநடுக்கம் ஏற்படும் புவியின் ஆழம்
3. நிலநடுக்கம் ஏற்பட்ட இடத்தில் நீரின் ஆழம்
4. அலை பயணிக்கும் தூரம்

இவற்றைப் பொறுத்தே சுனாமியின் உருவாக்கம் தங்கியுள்ளது. அதாவது இவை நான்கும் சாதகமாக அமைய வேண்டும். பொதுவாக இன்றுள்ள பதிவுகளின்படி 1-9.5 ரிச்டர் வரை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இவற்றுள் சுனாமியைத் தோற்றுவித்திருப்பது 7 ரிச்டருக்கு மேற்பட்ட அதிர்வுகளே ஆகும். நிலநடுக்கம் ஏற்படுகின்ற ஆழத்தைப் பொறுத்தவரையில் குறைவாகவும் (12 கிலோ மீற்றருக்கு உட்பட்ட ஆழம்). அதேவேளை நிலநடுக்கம் ஏற்படுகின்ற இடத்தில் நீரின் ஆழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதிகமாக இருக்கும்போது கரையை அடையும் அலையின் எழுச்சி உயர்வாக அமையும் அதனால் அழிவுகள் பலமடங்காகும். மேற்படி மூன்றும் சாதகமாக அமைந்தால் மட்டுமே சுனாமி மணிக்குப் பல மைல் வேகத்தில் பயணித்து நீண்ட தூரத்தை சென்றடையும். எடுத்துக்காட்டாக கடந்த 2004.12.26 அன்று இந்தோனேசியாவின் வட சுமாத்திராவில் ஏற்பட்ட நில நடுக்கத்திற்கு யாவுமே சாதகமாக அமைந்தன. நிலநடுக்கம் 9.0 முதல் 9.3 ரிச்டர் வரை பதிவாகியிருந்தது. அதன் குவிவு மையம் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் அமைந்தது. அது உருவான இடத்தில் சமுத்திரம் மிக ஆழமாக இருந்தமையால் பாரிய சுனாமி ஒன்றின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. இக் காரணிகளின் செல்வாக்கினால் சுனாமி உச்ச வேகத்தில் பயணித்து விரைவாக இலங்கையை அடைந்தது (உரு 03).

மற்றுமொரு நிகழ்வாக 2005.03.28 ஆம் திகதி வட சுமாாத்திராவின் அதேஇடத்தில் 7.8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டது. இந் நிலநடுக்கம் பதிவு செய்யப்பட்ட அளவு சுனாமி ஒன்று உருவாகப் போதுமானதாக இருந்ததுடன் அது ஏற்பட்ட சமுத்திரத்தில் நீரின் ஆழமும் அதிகமாகவே இருந்தது. ஆனால் நிலத்திற்குள் அதன் குவிவுமைய ஆழம் அதிகமாக அமைந்து விட்டது. கிட்டத்தட்ட 30 கிலோ மீற்றருக்கும் சற்று அதிகமாக ஆழம் அமைந்ததால் சுனாமிக்கு இடமே இல்லாமல் போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உரு 03 : இந்து சமுத்திர சுனாமி 2004




பொதுவாக ரிச்டர் அளவு, புவிமைய ஆழம், நீரின் ஆழம் ஆகிய மூன்று காரணிகளும் ஒருங்கே அமைவது என்பது மிக அரிது அவ்வாறு அமையும் பட்சத்திலேதான் சுனாமி வடிவம் பெறுகின்றன. உலகில் நீரிலும் நிலத்திலுமாக 6 ரிச்டருக்கும் அதிகமான வகையில் சுமார் வருடாந்தம் 10000 க்கும் அதிகமான நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. ஓப்பீட்டு ரீதியில் நீருக்கடியில் ஏற்படுகின்ற நிலநடுக்கங்களே அதிகம் (உரு 04). அவையெல்லாம் சுனாமியாக விருத்தியுறுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உரு 04 : உலகில் சராசரி ஒரு மாத காலத்துள் ஏற்படும் நிலநடுக்கங்களின் பரம்பல்.



சமீபத்தில் (12.08.2007) தென் சுமாத்திராவில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கத்தை எடுத்துக்கொண்டால் அதன் மூலம் இலங்கையில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு கரையோரங்களிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர். ஆனால் சுனாமி ஏற்பட்டதா? இல்லை! காரணம் 8.4 ரிச்டர் அளவில் ஒரு நிலநடுக்கம் 35 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது. தொடர்ந்து 7.0 றிச்டர் அளவிலான நிலநடுக்கங்கள் 10, 15 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது. இதனால் தென் சுமாத்திராவை அண்டிய பல பிரதேசங்கள் சுனாமி தாக்கத்திற்கு உட்பட்டன. இருப்பினும் இலங்கையை நோக்கி அவ்வலைகள் நகர்ந்தபோதும் அவை கரையை வந்தடையத் தவறிவட்டன. அதற்கான காரணம் இலங்கைக்கும் சுமாத்திராவுக்கு மிடையிலான தூரம் அதிகமாக இருந்தமையே ஆகும். அத்தூரத்தைக் கடப்பதற்கான அதிவேகசக்தியை 7 ரிச்டர் நில நடுக்கத்தால் வழங்கமுடியவில்லை. இதனால் இலங்கைநோக்கிய பயணத்தை ஆரம்பித்த சுனாமி அலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இடைநடுவே செயலிழந்து போயின. ஆனாலும் இலங்கையின் கிழக்கு, தெற்குக் கரையோரங்களில் கடல் மட்டத்தில் ஒருவித மாற்றம் புலப்பட்டுள்ளமையை பலர் அவதானித்துள்ளனர் (உரு 05).

**உரு 05 : தென் சுமாத்திராவில் அடுக்கடுக்காய் ஏற்பட்ட நில நடுக்கம்**




அந்தவகையில் சுனாமி ஒன்றை உருவாக்கக்கூடிய நிலநடுக்கம் குறைந்தது 6.5-7.0 ரிச்டர் வரையினதாக அமைதல் வேண்டும். அதேசமயம் நிலநடுக்கம் ஏற்படும் ஆழம் 10 கிலோ மீற்றருக்கு உட்பட்டதாக இருப்பது பொருத்தமானது. நிலநடுக்கம் 7.0 ரிச்டரைவிட அதிகரிக்கின்ற போது 15 கிலோமீற்றர் ஆழத்தில் தோன்றும் நிலநடுக்கம் கூட சுனாமியைத் தோற்றுவிக்கத் தவறாது. காரணம் நிலநடுக்கம் ஒரு ரிச்டரால் அதிகரிக்குமாயின் அது முன்னரிலும் விட 10 மடங்கு சக்தியை அதிகமாகக் கொண்டிருப்பதேயாகும் நிலநடுக்கம் தவிர்ந்த பல காரணிகளும் சுனாமியைத் தோற்றுவிக்கும் எரிமலை வெடிப்பு, விண்கல் வீழ்வு, பனிப்பாறைசரிவு, அணுகுண்டுப் பரிசோதனை போன்றன அத்தகையன. இலங்கையில் இவற்றுக்கான சாத்தியப்பாடுகள் மிகமிக அரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வங்காள விரிகுடாவில் நிலநடுக்கமும் இலங்கை எதிர்கொள்ளவிருக்கும் சவால்களும்.

தகடுகள் பற்றி ஓரளவுக்கேனும் தெளிவினை நாம் பெற்றிருக்கின்றோம். தகடுகள் காலத்திற்குக் காலம் புதிது புதிதாக உருவாகி வந்திருக்கின்றன. அந்தவகையில் சமீபத்தில் வங்காள விரிகுடாவில் புதியதொரு தகடு உருவாகி நிலைகொண்டிருப்பதையும் கண்டறிந்துள்ளனர். இத்தகடு இலங்கையின் தென்மேல் கரைகளில் இருந்து சுமார் 300 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் அமைந்திருப்பதுதான் எமக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. காரணம் ஒரு தகட்டு விளிம்பில் எவ்வகையான அனர்த்தங்கள் ஆபத்தை விளைவிக்கின்றதோ அவ்வனர்த்தங்கள் யாவும் குறிப்பிட்ட தகட்டின் அசைவையும் அமைவையும் பொறுத்து எதிர்காலத்தில் இலங்கைக்கும் சாத்தியப்பாடுடையனவாக அமையப்போவதில் சந்தேகமில்லை.

எதிர்காலத்தில் விளையப்போகும் ஆபத்தின் அறிகுறியாகவேதான் சமீபத்தில் ஒரு நிலஅதிர்வினை நாம் உணர்ந்தோம். இந் நிலஅதிர்வு 5.2 ரிச்டர் அளவுத்திட்டத்தில் $6^0$ 55’ வட அகலாங்கு, $84^0$ (பாகை) 46’ (கலை) கிழக்கு நெட்டாங்கு புவிநிலை மையத்தில் 35 கிலோ மீற்றர் ஆழத்தில் வங்கக்கடலில் ஏற்பட்டது (உரு 06). இந் நிகழ்வு இயற்கையால் விடுக்கப்பட்ட ஒரு மிகப்பெரிய எச்சரிக்கை அல்லது ஒரு சமிக்ஞை என்று கூடக் கூறலாம். இதற்குப் பின்பும் நாம் விழிப்படைந்திருக்கின்றோமா? இல்லவே இல்லை! விழிப்பினை ஓர் அழிவின் மூலமாகத்தான் பெறவேண்டுமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காத்திருக்கின்றோம். அவ்வாறில்லாமல் அனர்த்தங்களைக் கையாளும் ஆளுமையையும் அறிவையும் அடைவதற்கான வழியைத் தேடவேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் இன்று ஏற்பட்டுள்ளது. இலங்கையில் கடந்த ஜுலை 18 இல் 5.2 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டமை குறித்தும் அதனால் ஏற்பட்ட சேதம் குறித்தும் அறிந்தவர்களை விட அறியாதவர்கள் ஏராளம். அறிந்தவர்களிலும் அதைப்பற்றிச் சிந்தித்தவர்கள் எத்தனை பேர்???

**உரு 06 : ஜுலை 2007 இல் ஏற்பட்ட வங்காள விரிகுடா நிலநடுக்கம்.**



BAY OF BENGAL
2007 07 18 04:27:28 UTC 6.55N 84.46E Depth: 35.0 km, Magnitude: 5.2
Earthquake Location

அன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி உருவாகும் வாய்ப்பு அதிஸ்டவசமாக தவறிவிட்டது. அதற்காக இந்நிலைதான் இனிமேலும் தொடருமா? இல்லவே இல்லை நாளை இது 7.0 ரிச்டராகலாம் 8 ரிச்டராகலாம் ஏன் அதற்கு மேல் ஏற்படவும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. இந் நிலஅதிர்வின் குவிவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மையம் (focus) 10 கிலோ மீற்றருக்கு உட்பட்ட ஆழத்தில் அமைய வாய்ப்பில்லை என்றும் கூறமுடியாது. இந்நிலை அமைந்தால் மிக மோசமானதொரு சுனாமியோடு நிலஅதிர்வினையும் இலங்கைத்தீவில் வாழும் மக்கள் சந்திக்கத் தவற மாட்டார்கள். காரணம் கடந்த 2004 இல் இந்தோனேசியாவில் இருந்து கிட்டத்தட்ட 1400 மைல் பயணித்து வந்த சுனாமியே எமக்கு பாரிய அழிவைத் தோற்றுவித்திருக்கின்றதென்றால் வங்காள விரிகுடாவில் பாரிய நிலநடுக்கம் ஏற்படுகின்ற பொழுது ஆழிப்பேரலை பயணிக்க எடுக்கும் தூரமும், நேரமும் குறுகியதாகவே அமையும். அவ்வாறு அமையும்போது ஆபத்துக்கள் அதிகமாகவே காத்திருக்கின்றன.

**புதிய தகட்டில் சுனாமியும் முன்னெச்சரிக்கையின் சாத்தியப்பாடுகளும்.**

இலங்கையில் புதிய தகட்டில் சுனாமி ஏற்படுகின்ற பொழுது முன்னெச்சரிக்கை (early warning) என்பது எந்தளவுக்குச் சாத்தியமானது என்பது மிகப் பெரிய வினா. ஏனெனில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உரிய பலனை அவற்றால் வழங்க முடியாது. முன்னெச்சரிக்கை என்பது குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களை தயார்படுத்தச் செய்வது. தயார்படுத்தலுக்கு நேரம் அவசியமானது. அந்த நேரம் நிலநடுக்கம் ஏற்பட்ட இடத்திற்கும் குறித்த பிரதேசம் அமைந்துள்ள தூரத்தையும் பொறுத்து வேறுபடும். சில இடங்களில் தயார்படுத்துவதற்கான நேரம் போதாமல் இருக்கும் சில இடங்களுக்கு நேரம் மேலதிகமாக இருக்கும். உதாரணமாக 2004 இந்து சமுத்திர சுனாமியின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்தோனேசியாவின் அச்சேய் மாகாணம் அதிகம் பாதிப்புற்றது. காரணம் இப்பிரதேசம் நிலநடுக்கம் ஏற்பட்ட இடத்தில் இருந்து மிக அண்மையில் அமைந்ததனால் 20 நிமிடத்திற்குள் 80 அடி உயரமான அலைகள் மணிக்கு 700 கிலோ மீற்றர் வேகத்தில் கரையை அடைந்தன. எனவே எச்சரிக்கை கிடைத்து 20 நிமிடத்திற்குள் எவ்வாறு தம்மைத் தற்காத்துக்கொள்ளத் தயார்ப்படுத்த முடியும். இந்த நிலையில் முன்னெச்சரிக்கையின் பயனை எட்டமுடியாது. ஆனால் இலங்கையை இரண்டு மணிநேரம் கடந்தே சுனாமி வந்தடைந்தது. அச்சமயம் எமக்கு முன்னெச்சரிக்கை கிடைத்திருக்குமாக இருந்தால் 40000 உறவுகளை இழந்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. சடுதியான இழப்புக்களைத் தவிர்த்திருக்க முடியும்.

ஆனால் வங்காள விரிகுடாவின் உருவான புதிய தகட்டில் பாரிய நிலஅதிர்வு ஏற்படுகின்றபொழுது சுனாமி உருவாவதற்கான அடிப்படைகள் அமையுமாக இருந்தால் முன்னெச்சரிக்கை கிடைத்து சில நிமிடங்களில் அலை கரையத் தாண்டும் அபாயம் உள்ளது. காரணம் இலங்கையின் அமைவு தகட்டிற்கு அண்மையில் உள்ளமையாகும். 2004 இல் முன்னெச்சரிக்கை இல்லாத காரணத்தால் இழப்புக்களைச் சந்தித்தோம். வருங்காலத்தில் முன்னெச்சரிக்கை கிடைத்தும் இழப்புக்களைச் சந்திக்கவேண்டிய சந்தர்ப்பம் உள்ளது. அதற்கு கடந்த சுனாமிக்குப் பின்னரான அரச, அரசசார்பற்ற அமைப்புக்களின் முன்னெடுப்புக்களும் ஒரு காரணமாக அமையும். மக்களைப் பாதுகாக்கக் கூடிய சரியான வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இலங்கையைப் பொறுத்தவரையில் இனி இந்தோனேசியாவில் உருவாகும் எந்த ஒரு சுனாமியாலும் உயிரிழப்புக்களையும் உடமைகள் இழக்கப்படுவதையும் இயன்றவரை தவிர்த்துக் கொள்ள வாய்ப்புண்டு. காரணம் சுனாமி முன்னெச்சரிக்கை நிலையங்கள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக இந்து சமுத்திர சுனாமி முன்னெச்சரிக்கை நிலையம் (IOTWC) ஊடாக உடனுக்குடன் தகவல்கள் பரிமாறப்பட்டுக்கொண்டே இருக்கின்றது (உரு 07).

**உரு 07: இந்துசமுத்திர சுனாமி முன்எச்சரிக்கை மையத்தின் ஊடாகத் தகவல்களைப் பெறுவதற்கான இணையத்தளம்**




ஆகவே புதிய தகட்டில் உருவாகும் சுனாமியில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு முன்னெச்சரிக்கையும் அவசியமாக இருப்பதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- கரையோரத்தில் மக்களின் வாழிட எல்லையை வரையறுத்தல்
- கரையோர நிலப்பயன்பாட்டில் மாற்றங்களைச் செய்தல்
- உயிர்காப்புக் கோபுரங்கள் (Lifeguard towers) அமைத்தல்
- சிறந்த பொறியியற் தொழிநுட்பத்துடனான கட்டிட நிர்மாணம்
- அனர்த்த தயார்படுத்தலுக்கான அறிவூட்டலும் பயிற்சியும்
- அனர்த்தங்கள் பற்றி கல்வியறிவூட்டல்
- கரையோரச் சுற்றாடல் பாதுகாப்பு

என்பவற்றில் கூடிய கவனம் செலுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் சுனாமியில் இருந்து விடுபடுவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்தக்கொள்ளலாம்.

## முடிவுரை

எனவே இனிமேலும் நாம் அலட்சியமாக இருந்துவிட முடியாது. விழிப்புடன் இருப்பது காலத்தின் கட்டாய தேவையாகிவிட்டது. அந்தவகையில் இன்றைய எமது தேவை

- உளவியல் ரீதியாக பாதிப்படையாத வகையிலான மன வலிமை,
- வதந்திகளில் இருந்து ஏமாறாத வகையிலான சுனாமி பற்றிய விழிப்புணர்வு
- அழிவுகளைத் தவிர்த்துக்கொள்ளக் கூடிய வகையிலான அணுகுமுறைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்பனவாகும். இதன்மூலம் சுனாமி வாய்ப்பு பற்றி முன் உணர்ந்து கொள்ளும் திறனை வளர்த்துக் கொள்ள முடியும், முற்காப்பு நடவடிக்கையில் எவ்வாறு இறங்க முடியும் என்பதற்கான அறிவைப் பெற்றுக் கொள்ளலாம். எதிர்காலச் சந்ததி தாமாகவே தம்மை நெறிப்படுத்தக் கூடிய திறனைப் பெறும், முறையான பொறியியல் தொழில்நுட்பத்தின் ஊடாக இழப்புக்களைக் குறைக்க முடியும் இதன் அடிப்படையில் நாமும் வளர்ந்து எதிர்கால சந்ததியினரையும் வழிப்படுத்தினால் மட்டுமே எதிர்காலத்தை சுனாமி தாக்கத்திலிருந்து விடுபடும் வகையில் வெற்றிகொள்ளலாம்.

ஆனால் இவ்விடத்தில் இன்னுமொரு விடயத்தையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அதாவது இலங்கையைச் சூழ்ந்த ஒரு கண்டமேடை அமைந்திருக்கின்றது. கண்டமேடையைத் தாண்டி இப்புதிய தகடு அமைவு பெற்றாலும் கண்டமேடைப்பகுதியில் நில அதிர்வு ஏற்படலாம் அவ்வாறு ஏற்பட்டால் சுனாமி தாக்கம் குறைவாகவும் அதற்கப்பால் ஏற்படுகின்ற பொழுது தாக்கம் அதிகரிக்கவும் வாய்புண்டு காரணம் நீரின் ஆழம் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது ஆழம் குறைந்த கடற்பரப்பில் அலையின் எழுச்சி குறைவாகவும் ஆழம் கூடிய கடற்பரப்பில் அலையின் எழுச்சியும் வேகமும் அதிகமாகவும் அமைகின்றது. எவ்வாறிருப்பினும் நில அதிர்வின் தாக்கங்கள் பல இடங்களில் உணரப்படும். எதிர்காலத்தில் இப்புதிய தகடு விருத்தியுறும் நிலையைப் பொறுத்து மிக ஆபத்தானதொரு வலயமாக வங்கக்கடல் பிராந்தியமும் அதில் உள்ள தீவுகளும் மாறினாலும் கூட வியப்புறுவதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**உசாத்துணை**

1. Charles C.Plummer, David McGeary, Diane H. Carlson; (2001); Physical Geography; McGraw –Hill Companies.Inc.; New York; pp382-413.
2. Guha-Sapir.D, D.Hargitt, P.Hoyois; (2004) Thirty Years of Natural Disasters 1974-2003; centre for Research on the Epidemiology of disasters; Belgium.
3. NFPA, USGS, American Red Cross (1999) TALKING ABOUT DISASTER : Guide for Standard Messages; National Disaster Education Coalition: Washington DC,USA.
4. Patrick L Abbott; (2004); Natural Disaster: McGraw – Hill Companies.Inc.; New York
5. Peter S.Anderson (2006); BRITISH COLUMBIA TSUNAMI WARNING METHODS "A toolkit for Community Planning"; Simon Fraser University, Brunaby,B.C, Canada
6. Ranjith Premalal De Silva; (2005); Tsunami in Sri Lanka; Geo-Informatics society of Sri lanka; peradeniya.
7 மத்திய வங்கி ஆண்டறிக்கை 2004, இலங்கை மத்தியவங்கி

**URL references**

http://www.fema.gov/hazard/tsunami/
http://en.wikipedia.org/wiki/Tsunami
http://www.tsunamiwave.info/
http://www.ngdc.noaa.gov/seg/hazard/tsupub.shtml
http://www.ngdc.noaa.gov/seg/hazard/tsu_travel_time.shtml
http://www.tsunami.noaa.gov/terminology.html
http://nthmp.tsunami.gov/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நபிமொழி (ஹதீஸ்)பற்றிய கீழைத்தேய ஆய்வாளர்களின் பிழையான விமர்சனங்களும் இஸ்லாத்தின் பதிலும்

**M.T.M.Rizvi (Majeedy), BA (Hons), MA, PGDE**
**Lecturer, Dept. of Islamic Studies**

**இஸ்லாமிய மார்க்கத்தின் மூலாதாரங்களை இரண்டாக நோக்கலாம்.**

1. **மஸாதீர்அந்நக்லிய்யா** - வஹியுடன் (அல்குர்ஆன், அல்ஹதீஸ்) நேரடியாகதொடர்புடையவை.
2. **மஸாதீர் அல் அக்லிய்யா** - இஜ்திஹாதின் (அல்குர்ஆன், அல்ஹதீஸுக்கு முரண்படாத மனித அறிவுசார் முயற்ச்சி) வெளிப்பாடாக உருவானவை.

முதல்வகையுள் 'அல்-குர்ஆனும், அல்-ஹதீஸும்', இரண்டாம் வகையுள் 'இஜ்மாவும், கியாஸும்' உள்ளடங்குகிறது. இந்த வகையில் அல்-குர்ஆனும், அல்-ஹதீஸும் இஸ்லாத்தின் முதற்தர அடிப்படை மூலாதாரங்களாகத் திகழ்கின்றன.

அல்-குர்ஆனுக்கு அடுத்து அல்-ஹதீஸ் மிக முக்கிய இடத்தை பெறுகின்றது. ஹதீஸின் துணையின்றி அல்-குர்ஆனை விளங்குவதோ அல்லது அதன் போதனைகளை செயல்படுத்துவதோ சாத்தியமற்றது. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல வஹி எனும் ஒரே ஊற்றிலிருந்து பிறந்த இரண்டு மூலாதாரங்கள்தான் அல்-குர்ஆனும், அல்-ஹதீஸும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

“அல்-ஹதீஸ்” எனும் பதம் “பேச்சு” “நிகழ்வு” என்ற கருத்தைக்கொண்டிருந்தாலும், நபி முகம்மது (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கிகாரம் போன்றவற்றைக் குறிக்கவே இச் சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. “அல்ஹதீஸ்”என்பதை“அஸ் ஸுன்னா” என்ற பதத்தாலும் வழங்கப்பட்டு வருகிறது.

அல்குர்ஆனை விட அல்ஹதீஸ் பல விமர்சனங்களுக்கு ஆரம்ப காலம் தொட்டு முகம் கொடுத்து வருகிறது. “மௌழூவு”-புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்களின் தோற்றமும், ஹதீஸ் பற்றிய விமர்சனங்களும், அதன் நம்பகத்தன்மையில் ஊறு விளைவிப்பதற்கான முயற்சிகளும் இஸ்லாத்தின் தோற்ற காலம் முதல் இன்று வரை ஏற்பட்டவண்ணமே இருக்கிறது.

நபி(ஸல்) அவர்களின் நபித்துவம் முதல் அவர்கள் மரணிக்கும் வரையான அவர்களது சொல், செயல், அங்கீகாரம் அனைத்தும் ஹதீஸ்-சுன்னாவில் அடங்கும். வரலாற்றில் ஹதீஸ் நபி (ஸல்) காலம் முதல் சிறப்பாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. மனனத்தின் மூலமும், எழுதிவைத்தும், செயல்வடிவம் கொடுக்கப்பட்டும், ஹதீஸ் கிரந்தங்கள், ஹதீஸ் திறனாய்வுக் கலைகள், உஸுல் அல் ஹதீஸ் என பல வடிவங்களிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை மறுக்கப்படாத உண்மையாகும்.

இந்நிலையிலும் கூட ஹதீஸுக்கு எதிராக எழுந்த மாபெரும் கருத்துப் படையெடுப்பே இஸ்லாத்தின் விரோதிகளான கீழைத்தேய வாதிகள் மூலம் அவிழ்த்து விடப்பட்ட ஹதீஸ் பற்றிய பிழையான கருத்துக்களாகும். அக்கருத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் கொச்சைப்படுத்த மேற் கொள்ளப்பட்ட முயற்சிகளாகும்.

பல முஸ்லிம் நாடுகள் ஐரோப்பிய காலனித்துவத்தின் கீழ் உட்பட்டிருந்த போதும் அங்கு வாழ்ந்த முஸ்லிம்களை கிறிஸ்துவத்தின் பால் ஈர்க்க முடியவில்லை. ஆதலால் தாம் கைப்பற்றிய முஸ்லிம் நாடுகளை தொடர்ந்தும் தமது காலனித்துவத்தின் கீழ் வைத்துக்கொள்ள அரசியல், பொருளாதாரம் மூலமான மேலாதிக்கம் மாத்திரம் போதாது என்று கருதிய ஐரோப்பியர் முஸ்லிம்களின் கலாசார, பண்பாட்டு, சமய விடயங்களில் கைபோடத் தொடங்கினர்.

இதற்காக கீழைத்தேயநாடுகளிலுள்ள "இனங்கள்", அவர்களின் "மொழி", "மதம்", "பண்பாடு", "நாகரிகம்", "வரலாறு" பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு முஸ்லிம்களதும், இஸ்லாத்தினதும் தனித்துவத்தை மாசு படுத்த முனைந்தனர்.
இதற்கான கருவிகளாக ஹதீஸ், ஸீரதுர் ரஸுல்,((முகம்மது நபியின் வாழ்க்கை வரலாறு) அகீதா,((முஸ்லிம்களின் அடிப்படை நம்பிக்கை கோட்பாடுகள்) மறுமை நம்பிக்கை போன்ற துறைகளில் மாசு கற்பிப்பதற்கு முயற்சித்து ஹதீஸ் - ஸுன்னா விடயத்தில் உண்மைக்கும், அறிவுக்கும் முரண்பட்ட பிழையான விமர்சனங்களை கட்டவிழ்த்து விட்டனர்.

இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலில் இஸ்லாமிய கொள்கைகள், ஹதீஸ் போன்றவைகளில் சந்தேகங்களை ஏற்படுத்தியவர்கள் உமையா ஆட்சிகால டமஸ்கஸை சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

“யஹு”னாவும்” அப்பாஸியர் காலத்தில் வாழ்ந்த “பஹ்தீஸ்” என்பவருமாவர். இத்தகையோர்களே கீழைத்தேய வாதிகளுக்கு முன்னோடியாக விளங்கினர் எனலாம்.

எனினும் இவர்கள் எந்தவொரு குழுவையோ, இயக்கத்தையோ பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாக இருக்கவில்லை. தனிப்பட்ட மனிதர்களாக இருந்தே அக்கருத்துக்களை வளர்த்து வந்தார்கள். மேலும் எல்லா இஸ்லாமிய நாடுகளிலும் காணப்பட்ட பொதுவான சிந்தனைப் போக்காகவும் அக்கருத்து காணப்படவில்லை. பெரும்பாலும் ஈரான் பிரதேசத்தில் மாத்திரமே காணப்பட்டது. சுன்னாவை ஒரு சட்ட மூலாதாரமாக ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் என இமாம் ஷாபி (ரஹ்) குறிப்பிடுபவர்களில் பெரும்பாலானோர் இப்பிரதேசத்திலேயே வாழ்ந்து வந்துள்ளனர்.

ஹதீஸ் தொடர்பாக மிகவும் ஆபத்தான கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்த போக்கு கி.பி. 13 ஆம் நூற்றாண்டிலேதான் ஆரம்பமானது. அதன் முன்னோடிகளே இந்த கீழைத்தேயவாதிகள். இவர்கள் இஸ்லாத்தினதும், முஸ்லிம்களினதும் விரோதிகள். முஸ்லிம்களே இஸ்லாத்தின் மீது அதிருப்தி கொள்ளும் வகையிலும், பிறர் இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்படாதிருக்கும் விதத்திலும் இஸ்லாத்தின் எல்லாத்துறைகளிலும் குளறுபடிகளை ஏற்படுத்தியவர்கள் இவர்கள்.

கீழைத்தேயவாதிகள் தமது இஸ்லாத்திற்கு எதிரான முழு நோக்கத்தையும் பிரதிபலிக்கச் செய்யப்பயன்படுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஊடகங்களுள் ஒன்றே நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றில், ஹதீஸ்-சுன்னாவில் சந்தேகங்களை ஏற்படுத்தி விமர்சனங்களை கட்டவிழ்த்து விடுவது.அந்த வகையில் கீழைத்தேய வாதிகள், ஹதீஸ் சுன்னா தொடர்பாக முன்வைத்த விமர்சனங்கள், அவ்விமர்சனங்களை அவர்கள் முன்வைத்தமைக்கான நோக்கங்கள் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## கீழைத்தேய ஆய்வு, கீழைத்தேய ஆய்வாளர்கள், ஓர் அறிமுகம்.

இருளுக்கும், ஒளிக்குமிடையே ஏற்படுகின்ற போராட்டத்தில் இறுதியாக வெற்றி வாகை சூடுவது ஒளியே என்ற நியதிக்கேற்ப சத்திய இஸ்லாம் அசத்தியங்களோடு போராடிய போதெல்லாம் ஜெயித்தே வந்திருப்பதை வரலாறு தெரிந்த எவரும் மறுக்க முடியாது.

இது பற்றி "ஹபன்னகா அல் மைதானி" என்ற அறிஞர் குறிப்பிடுகையில் **"இஸ்லாம் அல்லாஹ்விடமிருந்து வந்திருக்காவிட்டால் எப்போதோ அது அழிந்து போயிருக்கும்"** என்று கூறியிருப்பது இஸ்லாம் எதிர் கொண்ட எண்ணற்ற சவால்களையும், அது தோல்வியடையாத மார்க்கம் என்பதையும் மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறது. இச்சவால்களில் ஒன்றே கீழைத்தேய ஆய்வாளர்களின் விமர்சனங்களாகும்.

"கீழைத்தேய நாடுகளின் மொழி, வரலாறு, மதம், நாகரிகம் போன்ற துறைகளில் மேற்கத்திய ஆய்வாளர்களின் ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முயற்சிகளையே கீழைத்தேய ஆய்வு என்றும் மேற்கூறிய துறைகளில் ஆய்வு மேற் கொண்டவர்களை கீழைத்தேய ஆய்வாளர்கள்" எனவும் வழங்கப்படுகிறது.(Encyclopedia of Britannica) பல்வேறுபட்ட நாடுகளையும், இனங்களையும் சேர்ந்த இவர்கள் அறபு, பாரசீக, இந்திய, சீன அறிவியற்துறைகளில் தங்கள் ஆய்வுகளை மேற் கொண்டாலும், குறிப்பாக இஸ்லாமிய நாகரிகம், வரலாறு, அறபுமொழி இஸ்லாமியக் கலைகள் என்பவற்றையே அதிமாக ஆய்வு செய்தனர்.

கீழைத்தேய ஆய்வின் வளர்ச்சி ஆரம்பத்தில் ஐரோப்பிய காலனித்துவ வாதிகளின் ஆதரவிலும், தொடர்ந்து கீழைத்தேய உலகில் கிறிஸ்தவ மதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த மதப் பிரச்சாரகர்களின் துணையுடனுமே ஏற்பட்டது எனலாம்.

இஸ்லாத்தின் புனித போதனைகளிலும், மூலாதாரங்களிலும் சந்தேகங்களை ஏற்படுத்த நினைத்த கீழைத்தேயவாதிகள் பல்வேறு வழிகளிலும் செயற்பட்டனர். அவர்களது இஸ்லாத்திற்கெதிரான முயற்சிகளுக்கு அப்போதிருந்த காலனித்துவம் பெரிதும் உதவியது எனலாம்.

இந்த வகையில் அல் குர்ஆன், அஸ் சுன்னா, இஸ்லாமிய நம்பிக்கை கோட்பாடுகள், இஸ்லாமிய சட்டங்கள், வரலாறு, நாகரிகம், அறபு மொழி என்பன தொடர்பாக பல்வேறு வாதங்களை,விமர்சனங்களை முன்வைத்தனர். ஏகத்துவம், தூதுத்துவம், மறுமை நம்பிக்கை போன்றவற்றில் ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை பலவீனப்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேற்குறிப்பிட்ட அத்தனைக்குள்ளும், எல்லாவற்றையும் விட ஹதீஸும், நபி (ஸல்) அவர்களின் சீறாவுமே (முகம்மது நபியின் வாழ்க்கை வரலாறு) கீழைத்தேய ஆய்வாளர்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்தன. ஹதீஸ், சுன்னா என்பன ஆதாரமற்றவை, போலியானவை, புனைந்துரைக்கப்பட்டவை என நிறுவினால் இஸ்லாமும், நபி(ஸல்) அவர்களின் வாழ்வும் வெறுமனே ஒரு கற்பனைச்சரிதையாக மாறுவது மட்டுமன்றி, அல் குர்ஆன் வெறுமனே செயல்பாடற்ற நூலாக மாறிவிடும் என்றும் அவரகள் கருதினர்.

எனவே கீழைத்தேய வாதிகள் நபியவர்களின் ஹதீஸுக்கும், சுன்னாவுக்கும் எதிரான தமது கருத்துப்படையெடுப்பை ஆரம்பித்தனர். இஸ்லாமிய கோட்பாடுகளை மிக நுணுக்கமான முறையில் ஆராய்ந்த இக் கீழைத்தேய ஆய்வாளர்களை இமாம் அலவி மாலிகி தனது **"அல் முஸ்தரிகூன் பைனல் இன்ஸாப் வல் அஸபிய்யா"** என்ற நூலில் இரண்டு வகையினராக வகுத்து நோக்குகிறார்.

1. தீவிரவாதிகள் (Extremist)
2. நேர்மையானவர்கள்(Righteousts)

தீவிரவாதிகள் (Extremist) என இனங்காணப்படும் இவர்களது முழு நோக்கமும் இஸ்லாத்தை வேரோடு களைய வேண்டும் என்பதாகும். இவர்களே தமது ஆய்வுகளின் மூலம் இஸ்லாமிய கோட்பாட்டில் திரிபுகளையும், ஹதீஸ்-சுன்னா தொடர்பான விமர்சனங்களையும் ஏற்படுத்தியிருப்பதைக் காணலாம். இத்தகைய கீழைத்தேய வாதிகளாக கீழ் வருவோரைவரலாற்றில் அடையாளப்படுத்தலாம் : -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | |
|---|---|---|
| 1) Ignad | 2) GolziherAlfred | 3) Gullamur |
| 4) Springer | 5) JosephSchach | 6) Karicker |
| 7) Antol | 8) Shsrk | 9) Margoliuth |
| 10) Juynboll | 11) Coulson Anderson | |
| 12) WilliamMuirA | 13) Guillaume | 14)Majid khaduri |

இத்தகைய கீழைத்தேய வாதிகளே ஹதீஸ-சுன்னா பற்றிய முரண்பாடான பல்வேறு கருத்துக்களையும், விமர்சனங்களையும் தங்களது நூல்கள் சஞ்சிகைகள் மூலம் முன்வைத்து ஹதீஸ்-சுன்னாவில் நம்பகமற்ற தன்மையை ஏற்படுத்த சதி முயற்சிகளை மேற்கொண்டனர். இவர்களுள் பிரதான விமர்சக முன்னோடியாக Ignad Golziher என்பவர் திகழ்கிறார். இவரது கருத்தொட்டிய விமர்சனங்களையே ஏனைய கீழைத்தேயவாதிகள் முன்வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது பிரிவினரான நேர்மையானவர்கள் (Righteousts) இவர்களால் இஸ்லாத்திற்கும் அதன் கொள்கைகளுக்கும் எதுவித பாதிப்புகளும் ஏற்படவில்லை. இவர்கள் இரு பிரிவினர்.

1. இஸ்லாமியக் கோட்பாடுகள், பண்பாடுகள், நாகரிகம் என்பவற்றை ஆராய்ந்ததன் பின்னர் இஸ்லாத்தை அதன் உண்மை வடிவில் வெளியிட்டவர்கள். அலவி மாலிகி கூறுவது போல இவர்கள் **"அழுக்கடைந்த உடல்களோடு இஸ்லாத்தை அழகான உடைகளில் வெளிப்படுத்தினர்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2. கீழைத்தேய ஆய்வுகளை மேற்கொண்ட சிலர் அதன் யதார்த்த பூர்வமான உண்மைகளை உணர்ந்து அதன் போதனைகளால் கவரப்பட்டு, அதனை ஏற்றுக்கொண்டவர்கள். இதற்கு உதாரணமாக பிரான்சைச் சேர்ந்த E.Dinet அவுஸ்திரேலியாவை சேர்ந்த Ciyo poltwaisஎன்போரைக்குறிப்பிடலாம் .

ஹதீஸ்-சுன்னா பற்றிய கீழைத்தேய ஆய்வாளர்களின் பிழையான விமர்சனங்கள்.

1. ஹதீஸ் - ஸுன்னா என்பது இஸ்லாத்தின் முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் முஸ்லிம் சமூகத்தில் மத கலாசார வளர்ச்சியின் காரணமாகத் தோன்றிய சில மரபுகள் பழக்க வழக்கங்களுக்கு மத அங்கீகாரம் பெறுவதற்காக நபி முஹம்மத் கூறியதாக இட்டுக்கட்டப்பட்ட கூற்றுகளாகும்.

2. ஹதீஸின் பெயரில் அதிகமான விடயங்கள் புனைந்துரைக்கப்பட்டுள்ளன என்பதை முஸ்லிம் அறிஞர்களே ஏற்றுக்கொள்கின்றனர்.

3. ஹதீஸ்கள் பெரும்பாலும் உமையாக்கள்(கி.பி661-750) காலப்பகுதியில் உருவாக்கப்பட்டன. தமது கொள்கைகளுக்கு சார்பான ஹதீஸ்களை உருவாக்குவதில் உமைய கலீபாக்கள் மும்முரமாக ஈடுபட்டனர். அவர்கள் தமக்கு சாதகமான ஹதீஸ்களை உருவாக்குவதற்காக புகழ்மிக்க ஹதீஸ் கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேதையான இமாம் ஸுஹ்ரியைப்பயன்படுத்தினர். இமாம் ஸுஹ்ரி ஆட்சியாளர்களின் தூண்டுதலின் பெயரில் பல ஹதீஸ்களை புனைந்துரைத்தார்.

4. "இஸ்னாத்" – அறிவிப்பாளர்கள் ஹதீஸ்களை புனைந்து உருவாக்கினர். அவ் அறிவிப்பாளர் வரிசையில் வருவோர் நம்பிக்கையற்றவர்கள்.

5. பெரிய ஸஹாபாக்களினால் அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கையை விட சிறிய ஸஹாபாக்களினால் அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. 'இஸ்னாதும்' அறிவிப்பாளர்கள் பட்டியலும் மிக நீண்டதாக காணப்படுகிறது. இது ஹதீஸில் போலி கலந்துள்ளது என்பதற்கு சான்றாகும்.

6. சில வேளை நபி (ஸல்) அவர்களிடமிருந்து நேரடியாக ஹதீஸைப்பெற்றவர்கள் அல்லது அதற்கு சாட்சியாக இருந்தவர்கள் அல்லது பின் வந்த அறிவிப்பாளர்கள் மறதியின் காரணமாக சில விடயங்களை சேர்க்காமல் விட்டிருக்கலாம், வேறு சில விடயங்களை மேலதிமாக சேர்த்திருக்கலாம். இதன் பயனாக ஹதீஸின் உண்மையான நிலை மற்றும் அதன் கருத்துக்கள் சிதைக்கப்பட்டிருக்கும். எனவே இன்று முஸ்லிம்கள் பாராட்டுவது போன்று ஹதீஸ் எதுவித சந்தேகத்திற்குமிடமின்றி தூய்மை நிலையில் காணப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

7. ஹதீஸ்-ஸுன்னா சுமாராக ஒரு நூற்றாண்டு காலம் வரை பதியப்படாமல் வாய் மொழி மூலமாகவே வழங்கப்பட்டு வந்தது. ஹிஜ்ரி 2 ஆம் நூற்றாண்டுகளில்தான் அவற்றைத் தொகுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பிழைகளும், அதில் கலந்து கருத்துச் சிதைவுகளும், குளறுபடிகளும் ஏற்பட்டுள்ளன.

8. நபி(ஸல்) அவர்கள் ஹதீஸை எழுத வேண்டாம் என்றும், எழுத அனுமதித்திருந்ததாகவும் முரண்பாடான அறிவிப்புகள் காணப்படுகின்றன. எனவே இந்த முரண்பட்ட கருத்துக்களால் ஹதீஸ்-சுன்னா ஆரம்ப காலத்தில் முறையாக எழுதப்படவில்லை, பிற்பட்ட காலப்பகுதியில்தான் எழுதப்பட்டது. எனவே அதில் இடைச்செருகல்கள் ஏற்பட்டுள்ளன.

9. ஆரம்ப காலங்களில் தொகுக்கப்பட்ட ஹதீஸ்களின் எண்ணிக்கையை விட பிற்பட்ட காலங்களில் தொகுக்கப்பட்ட ஹதீஸ்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றன. இது பிற்பட்ட காலத்திலேயே ஹதீஸ்கள் உருவாக்கப்பட்டது என்பதை உணர்த்துகிறது.

10. .ஹிஜ்ரி 2 ஆம் நூற்றாண்டில்தான் முதன்முதல் ஸுன்னா பதியப்பட்டது. அதுவரை மனனமிடுவதன் மூலம் அது பாதுகாக்கப்பட்டு வந்ததனால் பிழைகளும், தவறுகளும் அதில் இடம் பெற்றுள்ளன. எனவே ஸுன்னாவை நம்பகமான ஒரு சட்ட மூலாதாரமாக ஏற்றுக்கொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

11. ஸுன்னாவை எழுதியவர்கள் தமது மனோ இச்சைக்கு ஏற்ப தமது சிந்தனைப் போக்கிற்கும், வாழ்க்கைக்கும் இணங்கிய வகையில் அதனை எழுதியுள்ளனர்.

இந்த வகையில் ஹதீஸ்-ஸுன்னா பற்றிய கீழைத்தேயவாதிகளின் விமர்சனங்களை சுருக்கமாக நோக்கின்- **“ஹதீஸ்-ஸுன்னா என்பது முஸ்லிம்களால் மிகப்பிற்பட்ட காலத்தில் படைக்கப்பட்ட, உருவாக்கப்பட்ட ஒரு கலை”** என்பதை நிறுவ முனைவதாகும். அத்தோடு ஹதீஸ்-ஸுன்னா எனக் கூறப்படுபவைகள் அடிப்படையிலேயே புனைந்து உரைக்கப்பட்டுள்ளன என்றும் சமூக பழக்க வழக்கங்களுக்கும், மரபுகளுக்கும் புனிதத்துவம் வழங்கி சன்மார்க்க அங்கிகாரத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஹதீஸ்-ஸுன்னா என கூறப்பட்டுள்ளன என்றும் விமர்சிக்க முனைவதே இக் கீழைத்தேயவாதிகளின் ஹதீஸ்-ஸுன்னா தொடர்பான விமர்சனங்களின் அடி நாதமாகும்.

## ஹதீஸ்கள் பற்றிய கீழைத்தேய ஆய்வாளர்களின் பிழையான விமர்சனங்களுக்கான இஸ்லாமிய அறிஞர்களின் பதில்கள்.

ஹதீஸ்-ஸுன்னா என்பது நபி(ஸல்) அவர்களின் சொல், செயல், வாழ்க்கை முறைகள் அனைத்தையும் கொண்டதோர் அம்சம் என்பதில் மு.்.மின்களிடத்தில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. அது வஹியின் மூல ஊற்றிலிருந்து பிரிந்த ஒரு மூலாதாரம் என்பதிலும், அவற்றை ஏற்று எடுத்து நடக்க வேண்டும் என்பதிலும் எதுவித சந்தேகக் கருத்தும் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறபிகள் அபார ஞாபக சக்தியுடையோர் என்பதால் அவர்கள் நபி(ஸல்) அவர்கள் காலம் முதல் மனனத்தின் மூலமும், எழுதிவைத்தும் ஸுன்னாவை பாதுகாத்து வந்துள்ளார்கள்.

இங்கு ஒரு விடயத்தை நாம் புரிந்து கொள்ள முடிகிறது,அதாவது கீழைத்தேய வாதிகள் ஹதீஸ்- ஸுன்னா என்பவை நம்பகத்தன்மையற்றது என வெளிப்படையில் நிறுவ முற்பட்டாலும் அவை ஏதொ ஒரு வகையில் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது என்பதை மறைமுகமாக ஏற்றுக் கொள்கிறார்கள். மேலும் அவர்கள் கூறும் கருத்தை நிறுவ ஹதீஸில் இருந்தே ஆதாரம் கூறுவதைப்பார்க்கிறோம். இந்நிலையில் ஹதீஸ்-ஸுன்னா எழுத்து மூலம் தெளிவாகப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது எனக்கூறும் ஹதீஸ் மற்றும் ஏனைய ஆதாரங்களை அவர்கள் மறுப்பது அவர்களது முட்டாள்தனத்தையும், பிடிவாதத்தையும் காட்டுகிறது.

உண்மையில் நபி(ஸல்) அவர்கள் காலத்திலும் ஸஹாபாக்கள் காலத்திலும் ஹதீஸ்-ஸுன்னா எழுதப்பட்டுள்ளன. அப்துல்லா இப்னு அம்று இப்னு ஆஸ் எழுதிய **"அஸ்ஸாதிகா"** என்ற தொகுப்பையும், ஜாபிர் (றழி) எழுதிய **"அஸ்ஸஹிபா"**என்ற தெகுப்பும் நபி(ஸல்) காலத்திலேயே எழுதப்பட்ட ஹதீஸ் தொகுப்புகளுக்கு உதாரணங்களாகும்.

ஸஹாபாக்கள் காலத்தில் எழுதப்பட்ட ஹதீஸ் தொகுப்புகளுக்கு உதாரணங்களாக –அபு ஹுறைரா(றழி) அவர்களின் மாணவர் ஹம்மாம் இப்னு முனப்பஹ் எழுதிய **"அஸ் ஸஹிபா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அஸ்ஸாதிகா" எனும் தொகுப்பையும் கூறலாம .
மேலும் அனஸ் இப்னு மாலிக் (றழி) அவர்கள் ஹதீஸில் பலதை எழுதி வைத்திருந்தார்கள். அதனை ஓய்வு நேரங்களில் நபிகளாரிடம் வாசித்துக்காட்டி திருத்திக் கொள்வார்கள்" .

அக்கால அறபிகளிடமிருந்த சிறந்த ஞாபக சக்தி காரணமாக அவர்கள் மனனம் மூலம் மாத்திரமல்ல, எழுதியும் தம்மோடு தொடர்பான விடயங்களை பாதுகாத்து வந்துள்ளார்கள். என்பதை கீழைத்தேய வாதிகளும் அறிவர். இருப்பினும் அவர்களது காழ்ப்புணர்ச்சி உண்மையை ஏற்க மறுக்கிறது. தாபியீன்கள் (ஹிஜ்ரி 2ஆம் நூற்றாண்டு) காலப்பகுதியில்தான் முதன் முதலாக ஹதீஸ்-ஸுன்னா பதியப்பட்டுள்ளது என்ற கீழைத்தேய வாதிகளின் கருத்து அவர்கள் தாபியீன் காலத்தை வரையறுத்துக்கொண்டதிலுள்ள அறியாமை எனலாம் . அதாவது அவர்களது கருத்துப்படி ஸஹாபாக்களின் காலம் முடிவடைந்ததன் பின்புதான் தாபியீன்கள் காலம் ஆரம்பமாகிறது என்பதாகும். .

ஆனால் தாபியீன்கள் காலம் நபி(ஸல்) அவர்களின் மரணத்திலிருந்தே (வபாத்) ஆரம்பமாகின்றது. ஏனெனில் நபியவர்கள் உயிர் வாழும் போதே சில தாபியீன்கள் பிறந்திருந்தனர். அவர்களது இளமை அல்லது தூரம் காரணமாக நபியவர்களின் தோழமை கிடைக்காதிருந்தது. இத்தகைய தாபியீன்கள் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் பல பகுதிகளுக்கும் சென்று ஸஹாபாக்களை சந்தித்து ஹதீஸ்களை கற்றுக் கொண்டனர். .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இவ்வாறு ஸஹாபாக்களிடம் ஹதீஸ்களை கற்றுக்கொண்ட தாபியீன்கள் பலர் காணப்பட்டனர். மக்காவில்: 131 கூபாவில்: 413 மதினாவில் :355 பஸராவில்: 164 எனக் காணப்பட்டதாக இப்னு ஸஃதா தனது **"தபகாத்"** எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தாபியீன்கள் கற்ற ஹதீஸ்களையும், அவற்றோடு தொடர்பான சம்பவங்களையும் மனனத்தினூடாகவும், எழுதுவதன் மூலமும் பாதுகாத்து வந்தனர். பின்னர் ஹஜ்ரி 2ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களினாலேயே ஹதீஸ் உத்தியோகபூர்வமாக பதியும் பணி ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு உண்மையாகவே ஆரம்ப காலப்பகுதியிலேயே ஸுன்னா பதியப்பட்டு, மனனம், எழுத்து மூலமாக அவை பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது என்ற உண்மை தெளிவாக இருக்கும் நிலையில் கீழைத்தேய வாதிகள் அதனை அறியாதவர்களாக இத்தகைய தமது கருத்துக்களை முன்வைக்கவில்லை என்பது நிச்சயம். அவர்கள் உண்மையை அறிந்தவர்கள். ஆனால் அவர்களின் நவீன விமர்சனமுறைகள் ஊடாகவும், Logic தர்க்க ரீதியாகவும் உண்மையை பொய்யாக சித்தரிக்க முயலும் முயற்சியே அவை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

கீழைத்தேய வாதிகள் கூறுவது போல ஹிஜ்ரி 2 ஆம் நூற்றாண்டு வரை ஸுன்னா எழுதப்படாது, வாய்மொழி மூலமாகவே வழங்கப்பட்டு வந்தது என வைத்துக்கொண்டாலும், ஸுன்னாவில் பிழைகளும், இடைச்செருகல்களும் ஏற்பட்டுள்ளன என்பதற்கு ஒரு போதும் ஆதாரமாக அமையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உண்மையில் மனனமாக்கப்பட்டது எழுதப்பட்டதை விட எந்த வகையிலும் தரம் குறைந்ததல்ல. ஒரு வகையில் எழுதப்பட்ட ஹதீஸை விட மனனமாக்கப்பட்ட ஹதீஸ் பலமானதாக அமைந்து விடலாம். காரணம் எழுதப்பட்டதில் திருத்தங்களையும், மாற்றங்களையும் செய்துவிட சாத்தியப்பாடுண்டு. ஆனால் மனனத்தின் மூலம் உள்ளத்தில் பதியப்பட்டதில் அத்தகைய மாற்றங்களை, திருத்தங்களை மேற்கொள்ள முடியாது. இதனால்தான் அபூபக்கர் (றழி) காலத்தில் அல் குர்ஆன் தொகுக்கப்பட்ட போது எழுதிவைக்கப்பட்டவைகளுக்கு வழங்கப்பட்ட அதே முக்கியத்துவம் மனனமிடப்பட்டதற்கும் வழங்கப்பட்டது. எழுதிவைக்கப்பட்டிருந்தவைகள் மனனமாக்கப்பட்டவைகளுடன் ஒப்பு நோக்கப்பட்டே எழுதப்பட்டது.

அக்கால அறபிகளின் மனன சக்தி அபரிமிதமானதாக காணப்பட்டது. பிழையின்றி மனனம் செய்து வைத்துக் கொள்வதில் அறபிகள் பிரபல்யமாகத் திகழ்ந்தார்கள். அக்காலக்கவிதைகளையும், பரம்பரை பற்றிய பெயர் வரிசைகளையும் மனனத்தின் மூலம் காத்து வந்துள்ளனர்.

நபியவர்கள் காலத்திலும்கூட ஸஹாபாக்கள் ஞாபக சக்தியில் மிகைத்துக் காணப்பட்டனர். பல ஆயிரம் கவிதைகளைக் கூட மனப்பாடம் பண்ணியிருந்தனர். ஹம்மாத் என்ற கவிஞர் 27000 கவிதைகளையும், அபு தமாம் என்பவர் 16000 கவிதைகளையும், அஸ்மயி என்பவர் 14000 கவிதைகளையும் மனனம் செய்திருந்தனர். இவ்வாறு திறமை படைத்த நபித்தோழர்கள் ஹதீஸ்களையும் பிழையின்றி மிகத்தூய்மையான முறையில் ஞாபகத்தில், உள்ளத்தில் பாதுகாத்து வந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேலும் உள்ளத்திலுள்ள நபி மொழிகளை தமது செயற்பாடுகளிலும் நடைமுறைப்படுத்திவந்தமையால் மனனத்தின் நம்பகத்தன்மையை ஸஹாபாக்களது செயற்பாடுகள் நிரூபித்துநின்றன மாத்திரமல்லாது என்றுமே மறக்காத விதமாக ஆழமாக ஹதீஸ்கள் உள்ளத்தில் பதிந்திருந்தன.

எனவே இத்தகைய சான்றுகள் நிச்சயமாக ஹதீஸ்-ஸுன்னாவில் பிழைகளோ, இடைச்செருகல்களோ, கருத்துச்சிதைவுகளோ ஏற்படாது மிகத் தூய்மையாக பாதுகாக்கப்பட்டு வந்துள்ளமை மறுக்கப்பட முடியாக உண்மையாகும்.

கீழைத்தேய வாதிகள் கூறுகின்ற ஹதீஸ்களை எழுதும் படியும், எழுத வேண்டாம் என்றும் முன்னுக்குப்பின் முரணாக அறிவிப்புக்கள் வந்துள்ளமை ஹதீஸ் நபி(ஸல்) காலத்தில் எழுதப்படவில்லை, ஹிஜ்ரி 2 ஆம் நூற்றாண்டு வரை முறையாக தொகுக்கப்படவில்லை என்ற அவர்களது கருத்து முற்றிலும் பிழையான, தவறாகப் புரிந்து கொண்டதால் ஏற்பட்ட விமர்சனங்களாகும்.

ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருக்கும் ஒரு விடயம் பின்னர் சில காரணங்களால் தடுக்கப்படுவதும், ஏலவே தடுக்கப்பட்டவை பின் தளர்த்தப்படுவதும் உண்மையான இயல்பு மாத்திரமலல் சிலருக்கு அனுமதிக்கப்பட்டவை மற்றும் சிலருக்கு அவர்களது பலம், பலவீனங்கள் நிமித்தம் குறிப்பிட்ட விடயம் தடுக்கபடுவது உலக வழமை. வேதங்களும் அதனை நிரூபித்து நிற்கின்றன. உண்மையில் நபி(ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் ஹதீஸ்களை எழுத வேண்டாம் எனத்தடுத்து மனனம் செய்யுமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தூண்டினார்கள். அதற்கு பல நியாயமான காரணங்களைக் கூறலாம்.

ஹதீஸ்கள் எழுதப்படுவதை நபிகளார் தடைசெய்தமைக்கான நியாயங்கள்.

1. ஒரு சில ஸஹாபாக்களைத்தவிர பெரும்பாலான ஸஹாபாக்கள் எழுதத்தெரியாதவர்களாக இருந்தமை
2. அல் குர்ஆன் அருளப்பட்டுக்கொண்டிருந்ததால் ஹதீஸ்களை குர் ஆனோடு சேர்த்து எழுதிவிடுவார்களோ எனப்பயந்தமை.
3. முக்கியமாக எழுத்துப்புலமையுள்ள சில ஸஹாபாக்கள் அல் குர்ஆனை எழுதும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை.
4. மனனம் செய்வதற்கான தூண்டுதலுக்காக.
5. பெரும்பாலான ஸஹாபாக்களை ஞாபகசக்திமிக்கவர்களாகக் கண்டமை.

இவை போன்ற காரணிகளால் நபியவர்கள் எழுதத்தடுதிருந்தார்கள். இதே நேரம் -இப்னு அப்பாஸ்(றழி) இப்னு உமர்(றழி) அலி(றழி) போன்றவர்களுக்கு ஹதீஸ்களை எழுதிவைக்கவும் அனுமதி வழங்கியிருந்தார்கள்.

இது ஒரு முரண்பாடான விடயமல்ல பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப நபியவர்கள் எழுதுவதைத் தடுத்தும், எழுதப்பணித்தும் இருக்கலாம். இது பற்றி Dr. Hamithullah **"நபியவர்கள் ஹதீஸை எழுதவேண்டாம் என்று கூறியது பொதுவானதாக அல்லாது தனிப்பட்ட ஒரு சிலர் விடயத்தில் விதிக்கப்பட்டதாக இருக்கலாம். அவர்கள் புதிதாக இஸ்லாத்தை தழுவியதாகவோ,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அல்லது குர்ஆனுக்கும், ஸுன்னாவுக்குமுள்ள வேறுபாட்டை உணர முடியாதவர்களாகவோ, அல்லது புதிதாக எழுதக் கற்றுக்கொண்டவர்களாகவோ இருந்திருக்கலாம்" எனக் கருதுகிறார்.

ஹதீஸ் துறை அறிஞர் முஸ்தபா ஸிபாஈ- "சில ஸஹாபாக்களுக்கு நபி(ஸல்) அவர்கள் ஹதீஸ்களை எழுதிக்கொள்வதில் வழங்கிய அனுமதி முன்னர் எழுத வேண்டாம் என்றிருந்த தடையை நீக்கி விட்டது. நபியவர்கள் எழுதவேண்டாம் எனக் கூறியது முற்றாக அதனை எழுதவேண்டாம் என்பதை குறிக்காமல் உத்தியோக பூர்வமாக எழுத வேண்டாம் என்பதைத்தான் குறிக்கிறது" எனக் கருதுகிறார்.

எனவே ஸுன்னாவை எழுதுவது தொடர்பாக நபியவர்கள் கூறிய அவ்வார்த்தைப் பிரயோகங்கள் முன்னுக்குப்பின் முரணானது அல்ல. மாறாக கீழைத்தேயவாதிகளே முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை ஹதீஸ் தொடர்பாக முன்வைத்துள்ளனர். அவர்களின் குறை மதியும், இஸ்லாத்தின் குறை காணும் எண்ணமுமே இம்முரண்பாடான கருத்துக்களின் வெளிப்பாட்டுக்குக் காரணமாகும்.

அதிகமான ஹதீஸ்களை அறிவித்தவர்கள் வரிசையில் சிறிய ஸஹாபாக்களான அபு ஹ-றைறா(றழி) (5374 ஹதீஸ்கள்) இப்னு அப்பாஸ் (2660 ஹதீஸ்கள்), ஆயிஸா(றழி) (2220 ஹதீஸ்கள்) ஆகியோர் முதன்மை பெற்றவர்கள். இதனை ஆதாரமாகக் கொண்டு கீழைத்தேய ஆய்வாளர்கள் வயது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முதிர்ந்த ஸஹாபாக்களால் அறிவிக்கப்பட்ட ஹதீஸ்களின் எண்ணிக்கையை விட, வயது குறைந்த ஸஹாபாக்களினால் அறிவிக்கப்பட்ட ஹதீஸ்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. எனவே ஹதீஸில் போலிகளும், இட்டுக்கட்டுகளும் உள்ளது என்று கருதுவதோடு, ஹதீஸ்கள் ஆதாரமற்றது என்கின்றனர்.

இக்கருத்திலிருந்து அவர்களின் குறைமதி தெளிவுபடுத்தப்படுவதை காணலாம். அதாவது இவர்கள் ஒரு விடயம் மூத்தோர்கள் கூறுவதில்தான் நம்பிக்கையும், உறுதியும் இருக்க முடியும், இளையவர்களின் கருத்துக்களில் பலவீனம் கூடுதலாக இருக்கமுடியும் என நிறுவமுனைகின்றனர்.

உண்மையில் பலம், பலவீனம் என்பது மூத்தவர்கள், இளையவர்கள் என்பதில் தங்கியிருக்கும் விடயமல்ல. ஹதீஸைப்பொறுத்தவரை மூத்த ஸஹாபாக்களிடமிருந்தே கேட்டு, விளங்கி இளையவர்கள் அறிவித்துள்ளமை அதன் பலத்தில், நம்பகத்தன்மையில் எதுவித சந்தேகமும் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இளைய ஸஹாபாக்கள் கூட மூத்த ஸஹாபக்களைப் போன்று நபிகளாரை அண்டிக்காணப்பட்ட அதே நேரம், நபியவர்களை நேசித்தவர்களும் கூட. மற்றொரு உண்மையையும் இது தொடர்பாக அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். என்னவெனில் அன்று வாழ்ந்த மூத்த ஸஹாபாக்கள் வெளியிடங்களுக்குச் சென்றமையாலும், இயற்கையாகவும், புனிதப்போரில் கலந்தும் மரணித்தமையாலும், ஹதீஸ்களை மனனமிட்டுருந்தவர்களின் எண்ணிக்கை குறையலானது. இதனால் ஏற்படவிருக்கும் விபரீதங்களை அறிந்த சிறிய ஸஹாபாக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பலபகுதிகளுக்கும் சென்று பெரிய ஸஹாபாக்களைச் சந்தித்து ஹதீஸ்களை கேட்டறிந்தனர். பிற்காலத்தில் ஹதீஸ்களை திரட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது பெரிய ஸஹாபாக்கள் பலர் உயிரோடு இருக்கவில்லை இதன் காரணமாகத்தான் சிறிய ஸஹாபாக்களிடமிருந்து அதிக ஹதீஸ்களையும், பெரிய ஸஹாபாக்களிடமிருந்து குறைந்த ஹதீஸ்களையும் காணமுடிகிறது..

ஹதீஸ்கலை அறிஞர்கள் ஹதீஸ்களை தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதும் கூட ஒரு ஹதீஸை சரியென ஏற்றுக்கொள்வதில் கடும் சிரமத்தை கண்டுள்ளனர். இவர்கள் ஹதீஸில் எதுவித பிழையும், தவறும், சந்தேகங்களும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக தமது வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணித்த இமாம் புஹாரி, முஸ்லிம் போன்ற பல அறிஞர்களும் உள்ளனர்.

ஸயீத் இப்னு முஸையிப் குறிப்பிடும் போது "நான் ஒரேயொரு ஹதீஸைப் பெறுவதற்காக பல நாட்கள் இரவு, பகலாக பிரயாணம் செய்துள்ளேன்" என்றார்கள்.

ஒரு ஹதீஸை உண்மையான முறையில் உறுதிப்படுத்திக் கொள்வதில் ஹதீஸ்துறை அறிஞர்கள் கடைப்பிடித்தது போன்ற பேணுதலையும், பொறுப்புணர்ச்சியையும் வேறு எந்த சமூகத்திலும் காணமுடியாது. அவ் அறிஞர்கள் ("இஸ்னாத்") அறிவிப்பாளர்களை ஆழ்ந்து அவதானித்தது போன்றே ஹதீஸின் ("மதன்"), மொழி நடை, பதப்பிரயோகம், விளக்கம் அதன் போக்கு போன்றவற்றிற்கு ஏற்ப திறனாய்வு செய்யும் கலைகளையும்-("உஸ-லுத்தஹ்ரீஜ)" கண்டு பிடித்தார்கள். எனவே ஹதீஸ்களின் பாதுகாப்புக்காக இந்தளவு அரண்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முஸ்லிம் அறிஞர்கள் அமைத்துள்ள நிலையிலும் ஹதீஸ்கள் தொடர்பாக கீழைத்தேயவாதிகளின் கண்மூடித்தனமான பொய்யான பிழையான கருத்துக்கள் புறக்கணிக்கப்பட வேண்டியவைகளாகும்.

கீழைத்தேயவாதிகளின் மற்றொரு கருத்தான ஹதீஸ்களை அறிவிப்புச் செய்தவர்கள் மறதியின் காரணமாக பலதை விட்டிருக்கலாம் என மனிதப்பலவீனங்களை நியாயம் காட்டி விமர்சிக்கின்றனர்.

அதாவது மனிதப்பலவீனம் நியாயமானதே இருப்பினும் ஹதீஸ்களைப் பொறுத்தவரையில் அவை சாத்தியப்படாதவையாகும். ஹதீஸ் விடயத்தில் ஸஹாபாக்களும், பின்வந்த ஹதீஸ் துறை மேதைகளும் மிகவும் எச்சரிக்கையாக இருந்தமையால் மனிதப்பலவீனங்கள் ஹதீஸ்களைப் பாதிக்கவில்லை.

கீழைத்தேய வாதிகளின் மனிதப்பலவீனங்கள் தவறு புரியத்தூண்டும் என்ற சிந்தனை ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றிருக்கும். அதே நேரம் எந்த நிலையிலும் வலிந்துரைத்தும் தெரியாததை இட்டுக்கட்டியும் கூடப்பலக்கப்படாத நபித்தோழர்கள் ஹதீஸ்களில் தமது பலவீனங்களை ஒரு போதும் வெளியிட்ட வரலாறு கிடையாது. இவ்வாறிருக்கும் போது அக்கருத்து ஏற்கப்பட முடியாததொன்றாகும்.

எனவே இஸ்லாமிய நாகரீகத்தினதும், கலாசாரத்தினதும் அடிப்படை மூலாதாரங்களுள் ஒன்றான (ஹதீஸ்-ஸ-ன்னா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நபிமொழிகளை கொச்சைப்படுத்த முயலும் கீழைத்தேய வாதிகளின் இத்தகைய தவறான விமர்சனங்கள் சூரியனை கைகளால்மறைக்க முயலும் முயற்சியை ஒத்ததாகும்.

**உசாத்துணைகள்**


- Dr. Ashaih Musthafa Shibai, 1961, "AsSunnah wa Makanathuha fi Thareil Islam" Arabic Cairo

- Dr.Shukri.M.A.M. 1993," Hathees Waralarum Mukkiyathuwamum" Tamil, Darul Busra Publication.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தென்னாசியாவில் தீவிரமடையும் வறுமைநிலையும், சமூகச்சீர்கேடுகளும், மக்களின் விபரீதமான வாழ்க்கை நிலையும் (Poverty and Disastrous Living Conditions of South Asian People)

ம.வர்ணகுலசிங்கம் B.A., M.A., PGDE.
தலைவர், புவியியற் துறை, கிழக்குப்பல்கலைக் கழகம்

தென்னாசிய நாடுகள் உலக சனத்தொகையில் 23 சதவீதத்தைக் கொண்டு காணப்படுகின்றது. அதே சமயம் இப்பிராந்தியமே உலகில் மிகவும் வறுமையான பிராந்தியமாகவும் காணப்படுகின்றது. இந்நாடுகளில் சுமார் 540 மில்லியன் அல்லது இந்நாடுகளின் மொத்த சனத்தொகையில் 45 சதவீதமானவர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழேயே வாழ்கின்றனர். இவர்களின் சராசரி நாளாந்த வருமானம் ஒரு அமெரிக்க டொலருக்குக் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த அளவானது ஆபிரிக்கா, உப சகாரா, கிழக்காசியா, மத்திய கிழக்கு, லத்தீன் அமெரிக்க ஹரிபியன் பகுதிகள் பசுபிக் பிராந்தியம், சீனா ஆகியவற்றை விட சற்று அதிகமாகவே காணப்படுகின்றது. பாகிஸ்தானின் மனித வள அபிவிருத்தி நிலையத்தின் அதிகாரியான மஹ்பூப் அல் ஹக் என்பவர் தென்னாசிய நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் தங்கள் நாடுகளில் அதிகரித்துவரும் வறுமைநிலை தொடர்பாக அதிக அக்கறை காட்டாமல் இருப்பதே இந்நாடுகளின் பல்வேறு வகையான சமூகப் பிரச்சினைகளுக்கு காரணமாக இருக்கின்றது என்பது தெட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தெளிவாகத் தெரிகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் வறுமையில் வாழும் மக்கள் அதிகளவில் காணப்படுகின்றனர். ஐக்கிய நாடுகளின் வறுமை தொடர்பான புள்ளி விபரங்கள் இந்தியாவின் வறிய மக்களின் நிலை மொத்த சனத்தொகையில் 53 சதவீதம் என்ற அளவை எட்டியுள்ளதாக குறிப்பிடுகின்றது. இந்த அளவானது நேபாளத்தில் 53 சதவீதமாகவும் வங்காளதேசத்தில் 29 சதவீதமாகவும், பாகிஸ்தானில் 12 சதவீதமாகவும், இலங்கையில் 04 சதவீதமாகவும் உள்ளதாக இவ்வறிக்கை தெரிவிக்கின்றது. ஆயினும் தென்னாசிய நாடுகள் தங்களது நாடுகளில் வறுமையின் நிலையானது ஐக்கிய நாடுகளின் புள்ளிவிபரங்களிலிருந்து சற்று மாறுபடுவதாகத் தெரிவிக்கின்றன. அதன்படி வங்களாதேசத்தில் 48 சதவீதமும், பாகிஸ்தானில் 54 சதவீதமும், இலங்கையில் 22 சதவீத மக்களும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதாகக் காட்டப்பட்டுள்ளது. நேபாளம் மற்றும் இந்தியாவில் இந்த அளவானது ஐக்கிய நாடுகள் அறிக்கை சுட்டிக்காட்டியபடி 53 சதவீதமாகவே காணப்படுகின்றது.

உலகிலேயே தென்னாசிய நாடுகளிலேயே வருமான சமமின்மை அதிகளவில் காணப்படுகின்றது. இந்நாடுகளில் உள்ள செல்வமும், வளங்களும், சக்தியும் ஒரு சிலரிடம் குவிந்து காணப்படும் நிலைமை காணப்படுகின்றது. இப்பிராந்தியத்தின் மொத்த வருமானத்தில் 40 சதவீதத்தினை 20 சதவீதமான செல்வந்தர்களும் உயர் வருமானம் பெறும் வர்க்கத்தினரும் பெறுகின்றனர். அதே சமயம் குறைந்த வருமானம் பெறும் 80 சதவீதமான தென்னாசிய மக்கள் இப்பிராந்தியத்தின் மொத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வருமானத்தில் 10 சதவீதத்தினையே அனுபவிக்கின்றனர். இவ்வாறான ஒரு நிலையில் தென்னாசிய நாடுகளில் வாழும் வறிய மக்கள் பொருளாதார அபிவிருத்தியினால் கிடைக்கும் நன்மைகளை பெரிய அளவில் அனுபவிப்பதில்லை. மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product) இப்பிராந்தியத்தில் 1960 – 1965 வரையிலான காலப்பகுதியில் வருடாந்தம் 2.5 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்ட போதிலும், இந்த அதிகரிப்பின் நன்மைகள் அதிகளவில் செல்வந்தர்களையே சென்றடைந்துள்ளது. இச் செல்வந்தர்கள் வறிய மக்களின் சராசரி வருமானத்தை விட 6 மடங்கு அதிகமான வருமானத்தை பெற்றுக்கொள்கின்றனர். இந்த சமமற்ற வருமான நிலை நேபாள நாட்டில் அதிக இடைவெளியுடன் காணப்படுகின்றது. இங்கு வறிய மக்கள் பெறும் சராசரி வருமானத்தைவிட 10 மடங்கு அதிகமான வருமானத்தை 10 சதவீதமான செல்வந்தர்கள் பெற்றுக்கொள்கின்றனர். இந்த வருமான நிலை பாகிஸ்தானில் வாழும் வறிய மற்றும் செல்வந்தர்களுக்கிடையே 7 மடங்காகவும், இந்தியாவிலும் இலங்கையிலும் 6 மடங்காகவும், வங்காளதேசத்தில் 5 மடங்காகவும் காணப்படுகின்றது.

தென்னாசிய நாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் 200 மில்லியன் வறிய மக்களின் சராசரி வாழும் காலம் 40 வருடங்களுக்கும் குறைவாகக் காணப்படுகின்றது. இந்நிலை இந்நாடுகளில் மோசமான நிலையில் தீவிரமடைந்து செல்லும் குறைவான சுகாதார நிலைமைகளினால் மேலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தன்மைகள் காணப்படுகின்றன. தென்னாசிய நாடுகளில் சராசரி வாழும் கால எதிர்பார்ப்பு 62 வருடங்களாகக் காணப்படுகின்றது. ஆயினும் இலங்கை இதற்கு விதிவிலக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

73 வருடங்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்நிலைமை வளர்ச்சியடைந்த நாடுகளில் உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் வாழும் கால எதிர்பார்ப்பு 77 வருடங்களாகவும் ஜப்பானில் இது 88 வருடங்களாகவும் காணப்படுகின்றது. இப்புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடும்போது தென்னாசியா பாரிய வித்தியாசத்தைக் கொண்டு காணப்படுகின்றமை தெளிவாகின்றது. பொதுவாக தென்னாசிய நாடுகளில் 879 மில்லியன் மக்கள் ஆரோக்கியமான பொதுச் சுகாதார வசதிகளின்றி அவதியுறுகின்றனர். இத்தொகையில் 661 மில்லியன் மக்கள் தனியே இந்தியாவில் காணப்படுகின்றனர். இத்தொகை வங்களாதேசத்தில் 91 மில்லியனாகவும், நேபாளத்தில் 18 மில்லியனாகவும், இலங்கையில் 6 மில்லியனாகவும் காணப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் நிறுவனத்தின் புள்ளிவிபர அறிக்கைகளின் (1999) படி தென்னாசியப் பிராந்தியத்தில் 278 மில்லியன் மக்கள் பாதுகாப்பான குடிநீரைப் பெறமுடியாதவர்களாகக் காணப்படுவதாக தெரியவருகின்றது. இந்தியாவில் 178 மில்லியன் மக்களும், பாகிஸ்தானில் 56 மில்லியன் மக்களும், வங்காளதேசத்தில் 25 மில்லியன் மக்களும், இலங்கையில் 7.7 மில்லியன் மக்களும், நேபாளத்தில் 1 மில்லியன் மக்களும் பாதுகாப்பான குடிநீரைப் பெறமுடியாதவர்களாக உள்ளதாக அந்த அறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

அதே சமயம் இப்பிராந்தியத்தின் மொத்த சனத்தொகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

276 மில்லியன் அல்லது 22 சதவீதமான மக்கள் அடிப்படை சுகாதார வசதிகள் கிடைக்கப்பெறாதவர்களாகக் காணப்படுகின்றனர். வங்காளதேசத்தில் 50 சதவீதமான மக்களும், பாகிஸ்தானில் 45 சதவீதமான மக்களும், இந்தியாவில் 15 சதவீதமான மக்களும், இலங்கையில் 7 சதவீதமான மக்களும் முறையான சுகாதார வசதிகள் கிடைக்கப்பெறாதவர்களாகக் காணப்படுகின்றனர். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் தென்னாசிய நாடுகளில் தொடர்ந்தும் சமூக அமைப்புக்களிடையே வளப் பகிர்வுகளில் திருப்தியற்ற தன்மைகள் காணப்படுவதாகவும் இந்நிலைமைகளில் மாற்றம் காணாதவரை சமூக பொருளாதார அம்சங்களில் மாற்றங்களைக் கொண்டுவருவது கடினமான காரியமாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பூட்டான், மாலைதீவு தவிர்ந்த ஏனைய தென்னாசிய நாடுகள் மொத்தத் தேசிய உற்பத்தியில் (Gross National Product) 2 சதவீத அளவினையே பொதுச் சுகாதார வசதிகளுக்கென செலவிடுகின்றன. இந்த அளவுகள் முறையே இந்தியாவில் 0.7 சதவீதமாகவும், பாகிஸ்தானில் 0.8 சதவீதமாகவும், வங்காளதேசத்தில் 1.2 சதவீதமாகவும், நேபாளத்தில் 1.2 சதவீதமாகவும், இலங்கையில் 1.4 சதவீதமாகவும் காணப்படுகின்றது.

இவ்வாறான குறைவான வசதி வாய்ப்புக்கள் மற்றும் வறிய சமூக நிலை காரணமாக குழந்தைகளின் இறப்பு வீதம் தென்னாசிய நாடுகளில் சராசரியாக 1 இலட்சத்திற்கு 480 ஆகக் காணப்படுகின்றது. இது இந்தியாவில் 437 ஆகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வங்காளதேசத்தில் 800 ஆகவும், நேபாளத்தில் 1500 ஆகவும், பூட்டானில் 1600 ஆகவும் காணப்படுவதாக புள்ளிவிபரங்கள் மூலம் அறிய முடிகின்றது. மேற்கூறப்பட்ட விடயங்களை விட குறைவான மருத்துவ வசதிகள் மற்றும் பொதுச்சுகாதார வசதிகள் காரணமாக தாய்மார்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக 15 தொடக்கம் 49 வயதிற்குட்பட்ட 85 சதவீதமான கற்பிணித்தாய்மார்கள் அனேமியா (Anemia) என்னும் நோயினால் பாதிக்கப்படுகின்றனர். இந்த நோயினால் இந்தியாவில் 88 சதவீத கற்பிணித் தாய்மார்களும், வங்காளதேசத்தில 58 சதவீதமான கற்பிணித் தாய்மார்களும், பூட்டானில் 30 சதவீதமான கற்பிணித் தாய்மார்களும் பாதிக்கப்படுவதாக தெரியவந்துள்ளது. இதனால் குழந்தை இறப்பு வீதம் அதிகரிக்கின்றது. தென்னாசிய நாடுகளில் உள்ள அனேக குழந்தைகள் முறையான போசாக்கற்ற தன்மையினால் இறப்பைச் சந்திக்கின்றனர். இதன் காரணமாக வாழும் குழந்தைகளில் 1000க்கு 95 குழந்தைகள் பாகிஸ்தானில் இறப்பைத் தழுவிக்கொள்கின்றன. இந்த அளவானது நேபாளத்தில் 1000க்கு 75 ஆகவும், இந்தியாவில் 1000க்கு 71 ஆகவும், மாலைதீவில் 1000க்கு 73 ஆகவும், இலங்கையில் 1000க்கு 17 என்ற அளவிலும் காணப்படுகின்றது. இப்பிராந்தியத்தில் வாழும் 79 மில்லியன் குழந்தைகள் முறையான ஊட்டச்சத்துக் கிடைக்காமையினால் துன்பப்படுகின்றனர். இந்தியாவில் மட்டும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 59 மில்லியன் குழந்தைகள் இவ்வாறான பாதிப்புக்கு உட்படுவதாக கணிக்கப்பட்டுள்ளது. இந்நாடுகளில் 1990 களின் முற்பகுதி வரை தலைக்குரிய கல்விக்கான செலவு குறைந்துகொண்டே வந்துள்ளது என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தென்னாசியப் பிராந்தியத்தில் பற்றாக்குறையாகக் காணப்படும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் சேவை காரணமாகவும், பொதுச் சுகாதார சேவைகள் மோசமடைந்து வருகின்றன. தென்னாசிய நாடுகளின் சனத்தொகை மற்றும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கும் இந்நாடுகளில் காணப்படும் மருத்துவர்கள், தாதியர்கள் எண்ணிக்கைக்கும் இடையே பாரிய பொருத்தப்பாடற்ற தன்மை காணப்படுகின்றது. தென்னாசியப் பிராந்தியத்தில் சராசரியாக ஒரு இலட்சம் நோயாளிகளுக்கு 44.34 வைத்தியர்கள் என்ற நிலைமையே காணப்படுகின்றது. இது இந்தியாவில் ஒரு இலட்சத்திற்கு 48 ஆகவும், பாகிஸ்தானில் 52 ஆகவும், வங்காளதேசத்தில் 18 ஆகவும், நேபாளத்தில் 5 ஆகவும், இலங்கையில் 23 ஆகவும், பூட்டானில் 20 ஆகவும், மாலைதீவில் 19 ஆகவும் காணப்படுகின்றது. இந்நிலைமை தாதியர்களைப் பொறுத்தவரையில் ஒரு தாதிக்கு 4078 நோயாளிகள் என்ற நிலைமை காணப்படுகின்றது. வைத்தியர்களைப் பொறுத்தவரையில் ஒரு வைத்தியருக்கு 3684 நோயாளிகள் என்ற நிலைமை தென்னாசிய நாடுகளில் பொதுவான ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. தென்னாசிய நாடுகளில் காணப்படும் மக்கள் தொடர்பான சிறப்பம்சங்களில் குறிப்பிடக்கூடியதொரு விடயமாக 939 பேருக்கு ஒரு பொலிஸ்காரர் என்ற நிலைமை காணப்படுவதை சுட்டிக்காட்டலாம். அதாவது வைத்தியர், மற்றும் தாதியர் அளவை விட 4 மடங்கு அதிகமான பொலிஸ்காரர்கள் தென்னாசிய நாடுகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தென்னாசிய நாடுகளில் காணப்படும் சமூகப் பின்னடைவிற்கு பங்களிப்புச் செய்யும் முக்கிய காரணியாக எழுத்தறிவு வீதம் குறைவாகக் காணப்படுகின்றமையைக் குறிப்பிடலாம். தென்னாசியப் பிராந்தியத்தில் வயது வந்தவர்களில் 395 மில்லியன் மக்கள் எழுத்தறிவு அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். எழுத்தறிவு அற்றவர்களின் வீதம் நேபாளத்தில் 72 சதவீதமாகவும், பாகிஸ்தான், மற்றும் வங்காளதேசத்தில் 62 சதவீதமாகவும், இந்தியாவில் 48 சதவீதமாகவும், இலங்கையில் 10 சதவீதமாகவும், மாலைதீவில் இது 7 சதவீதமாகவும் காணப்படுகின்றது. எழுத்தறிவு இன்மையினால் அதிகம் பாதிக்கப்படுபவர்களாக பெண்களே காணப்படுகின்றனர். தென்னாசியப் பிராந்தியத்தில் எழுத்தறிவு அற்றவர்களில் 243 மில்லியன் அல்லது 64 சதவீதமானவர்கள் பெண்களாகக் காணப்படுகின்றனர். நேபாள நாட்டிலேயே எழுத்தறிவற்ற பெண்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். 86 சதவீதமான பெண்கள் இங்கு எழுத்தறிவு அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். பாகிஸ்தானில் எழுத்தறிவு அற்ற பெண்களின் வீதம் 76 சதவீதமாகவும், வங்காளதேசத்தல் 74 சதவீதமான பெண்களும், பூட்டானில் 72 சதவீதமான பெண்களும், இந்தியாவில் 62 சதவீதமான பெண்களும் எழுத்தறிவு அற்றவர்களாக காணப்படுகின்றமை இப்பிராந்தியத்தில் ஏற்படும் அனேக சமூக சீர்கேடுகளுக்கு ஊக்கமளிக்கும் காரணியாக காணப்படுகின்றது.

தென்னாசியப் பிராந்தியத்தில் ஏறத்தாழ 5 கோடி சிறார்கள் பாடசாலையின் ஆரம்பக் கல்வியைத் தானும் அனுபவிக்காதவர்களாக இருப்பது குறிப்பிடக்கூடியதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விடயமாகக் காணப்படுகின்றது. இந்தியாவில் 3 கோடி 50 இலட்சம் சிறார்கள் எந்தவித கல்வியையும் பெறாதவர்களாகக் காணப்படுகின்றனர். தென்னாசிய நாடுகளில் கல்வி பயிலும் மாணவர்களில் சுமார் 41 சதவீதமான மாணவர்கள் ஆண்டு 5 கல்வியைத் தொடர்வதற்கு முன்னரே பாடசாலையை விட்டு நீங்கியவர்களாகக் காணப்படுகின்றனர். ஆசிரியர் மாணவர் விகிதப் பொருத்தமானது சராசரியாக ஒரு ஆசிரியருக்கு 60 என்ற நிலை தென்னாசியாவில் காணப்படுகின்றது. இந்த அளவானது இந்தியா, வங்காளதேசம் ஆகிய நாடுகளில் இன்னும் கவலைதரும் அளவை எட்டியுள்ளதாக காட்டப்பட்டுள்ளது. இந்நாடுகளில் ஆசிரியர் மாணவர்கள் விகிதப் பொருத்தம் முறையே 64 ஆகவும், 71 ஆகவும், உயர்ந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

தென்னாசிய நாடுகளில் மனிதவள அபிவிருத்தி மற்றும் வறுமை தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட பிரியதர்ஸனா மடுவத்தை(1999) என்பவர் தென்னாசிய நாடுகளின் அரசாங்கங்கள் கல்வியின் தரத்தையும், அதன் நிலையையும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ அல்லது அவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் முறையான சமூக சுற்றுச் சூழலில் விரும்பத்தகுந்த மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதன் மூலம் சமூக நடத்தையில் காணப்படும் உயர்ந்த பண்புகளுடன் கூடிய வாழ்க்கை முறையை உருவாக்குவதிலோ அலட்சியப் போக்கினையே கொண்டுள்ளன எனக் குறிப்பிடுகின்றார். மொத்தத் தேசிய உற்பத்தியில் சராசரியாக 3.2.சதவீதமே கல்வியின் பொருட்டு தென்னாசியாவில் செலவிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதை நாடுகள் ரீதியாக நோக்கும் போது பாகிஸ்தானில் 2.1 சதவீதமாகவும், வங்காளதேசத்தில் 2.3 சதவீதமாகவும், நேபாளத்தில் 2.9 சதவீதமாகவும், இலங்கையில் 3.1 சதவீதமாகவும், இந்தியாவில் 3.5 சதவீதமாகவும் காணப்படுவதை அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். இவ்வாறான அரசின் அசிரத்தையுடன் கூடிய செயற்பாடுகள் சமூகங்களில் இயல்பாக ஏற்படும் சிறந்த செயற்பாடுகளைக் கூட சிதைவடையச் செய்வதுடன் எதிரிடையான விளைவுகளையும் உருவாக்கக் கூடியவையாக அமையும் என்பதை மறுக்கமுடியாது. அத்துடன் இவ்வாறான நடவடிக்கைகளினால் எற்படும் ஆபத்தை உணர்ந்தும் பொருட்படுத்தாத நிலைமை தொடரும் பட்சத்தில் கல்வியைத் தொடர வேண்டிய பிள்ளைகளிடையே ஏமாற்றமும், விரக்தியும் அதிகரித்து அதன் மூலம் சிறுவர் துஸ்பிரயோகங்களும் விபச்சாரத் தொழில் நடவடிக்கைகளும் அதிகரித்து சமூக கலாசார எதிர் நடவடிக்கைகள் தூண்டப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும்.

## தென்னாசியாவில் சமூக பொருளாதார அடிப்படையில் சவால்களை எதிர்கொள்ளும் சிறுவர்களும், பெண்களும்

தென்னாசிய நாடுகளில் காணப்படும் வறுமை நிலை காரணமாக சிறுவர் துஸ்பிரயோகங்களும் சிறுவர்களைத் தொழிலில் சேர்த்துக்கொள்வதற்கான வாய்ப்புக்களும் அதிகரித்து வருகின்றன. சிறுவர்கள் தொடர்பாக உலக ரீதியாக பல்வேறு ஆரோக்கியமான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் தென்னாசியப் பிராந்தியத்தில் சிறுவர்கள் தொடர்பாக கிடைக்கப்பெறும் தகவல்கள் ஆச்சரியப்படத்தக்கதாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதிர்ச்சியூட்டுவதாகவும் அமைந்து காணப்படுகின்றன. 1995 இல் யூனிசெப் நிறுவனத்தினால் சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கைகளின் படி தென்னாசியப் பிராந்தியத்தில் 134 மில்லியன் சிறுவர்கள் சட்டத்திற்கு முரணான வகையில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் 100 மில்லியன் சிறார்கள் இந்தியாவிலேயே காணப்படுவதாகவும் இச் சிறுவர்களின் குடும்பங்களில் காணப்படும் வறுமை நிலை, சிறுவர்களே குடும்பச் சுமையை சுமக்க வேண்டிய சூழ்நிலை என்பவற்றின் காரணமாக அதிகளவான 10 – 14 வயது வரையினலான சிறுவர்கள் அன்றாட வாழ்க்கைக்கான வருமானத்தைத் தேடும் முயற்சியாக தொழில்களை நாடிச் செல்கின்றமையும் தெரியவந்துள்ளது. புள்ளி விபரங்களின்படி இந்த வயதுப்பிரிவினரில் பூட்டானில் 55 சதவீதமானவர்களும், நேபாளத்தில் 44 சதவீதமானவர்களும், வங்காளதேசத்தில் 29 சதவீதமானவர்களும், பாகிஸ்தானில் 17 சதவீதமானவர்களும் இவ்வாறான சிறுவர் தொழில் நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அனேக தென்னாசிய நாடுகளில் சிறுவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு போதியளவில் கிடைக்கப் பெறாமையினால் அனேக சிறுவர்கள் செய்வதற்கு வேறு வழியற்ற நிலையில் தங்களது உடலையே விற்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதனால் தென்னாசிய நாடுகளில் எதிர்காலத்தில் மிகவும் அபாயகரமான, ஒழுக்கம் குறைந்த ஒரு சமூகம் உருவாவதை தவிர்க்க முடியாது போகும் என்பதில் இது தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடுபவர்களிடையே இரு வேறுபட்ட கருத்துக்கள் இருக்கக் கூடிய வாய்ப்பு குறைவாகவே காணப்படுகின்றது. மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேகமாக அதிகரித்துவரும் சிறுவர்கள் தொடர்பான பாலியல் செயற்பாடுகள் மற்றும் சிறுவர்கள் விற்பனை நடவடிக்கைகள் எயிட்ஸ் போன்ற அபாயகரமான வைரசுகளை இலகுவாக பரவச் செய்வதற்கான உபாயமாகக் காணப்படுகின்றது. யூனிசெப் அறிக்கையின் படி தென்னாசிய நாடுகளில் ஏறத்தாழ ஒரு இலட்சம் சிறுவர்கள் இவ்வாறான பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆயினும் இந்த எண்ணிக்கை இதனைவிட அதிகமாக இருக்கலாம் எனவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

சிறுவர்களை பாலியல் விபசாரத்தில் ஈடுபடுத்தும் நடவடிக்கை மிகவும் பணவசதி படைத்த குழுவினராலேயே நன்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 7000 சிறுவர்கள் இந்த விபச்சாரத் தொழிலில் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

தென்னாசிய நாடுகளில் காணப்படும் வளர்ச்சியடைந்த நகரங்களில் உள்ள சிறுவர்களை சில குழுக்கள் கடத்திச் சென்று அவர்களின் உடல் உறுப்புக்களை வெட்டியகற்றுவதன் மூலம் அவர்களை பரிதாபத்துக்குரிய பிச்சைக்காரர்களாக மாற்றி பிச்சையெடுக்க வைப்பதன் மூலம் சிலர் செல்வந்தர்களாகும் நிலை அதிகரித்து வருகின்றது. வறிய நிலையிலும் ஆரோக்கியமான நிலையிலும் உள்ள இவ்வாறான சிறுவர்களின் கால்கள், கைகளை வெட்டி விட்டு அவர்களை தங்களது தொழிலுக்கான மூலதனமாக மாற்றும் நிலை காணப்படுகின்றது. சில சமயங்களில் இவ்வாறான சிறுவர்களின் சிறுநீர்ப்பை கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அகற்றப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. அண்மையில் இந்தியாவில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று வெளியிட்ட தகவலில் வீதியோரச் சிறுவர்களைக்கடத்தி அவர்களின் உறுப்புக்களை ஊனமாக்கி விற்கும் கடத்தல் கும்பல் தொடர்பான செய்தி அதிர்ச்சியூட்டுவதாக அமைந்திருந்தது. ஏனெனில் இவ்வாறான கொடூரச் செயல்களில் புத்தி ஜீவிகளான மருத்துவர்களின் பங்களிப்பும் அதிகமாக உள்ளமை கண்டறியப்பட்டது. பல மருத்துவ மனைகளில் இவ்வாறான செயல்கள் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறான செயல்களைப் புரிவதற்காக வைத்தியர்கள் ரூபா பத்தாயிரம் முதல் நாற்பதாயிரம் (இந்திய ரூபாய்) வரை பெற்றுக்கொள்வதாகவும் இவ்வாறான சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்ட பல வைத்தியர்கள் கைதுசெய்யப்பட்டும் இன்னும் சிலர் தேடப்பட்டும் வருவதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேபாள நாட்டில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று மேற்கொண்ட ஆய்வின்படி சுமார் ஒரு லட்சம் தொடக்கம் இரண்டு இலட்சம் வரையிலான நேபாள நாட்டுப் பெண்கள் அல்லது சிறுமிகள் விபச்சாரிகளாக இந்தியாவில் தொழில் புரிவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நேபாள நாட்டில் காணப்படும் கொடிய வறுமைநிலை, சீதனக்கொடுமைகள், சமூகப் பிரச்சினைகளால் பாதிக்கப்படும் பெண்களும் சிறுமிகளும் மற்றும் உயர்நிலைக் கல்வியைத் தொடரமுடியாத இளம் பெண்களும் சூழ்நிலையின் நிமிர்த்தம் இவ்வாறான சமூக விரோதத் தொழிலைப் புரிவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். வங்காளதேசத்துப் பெண்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போன்ற நாடுகளுக்கும் இந்தியப் பெண்கள் தென்னாசியாவின் ஏனைய நாடுகளுக்கும் இவ்வாறான பாலியல் துர்நடத்தை விபச்சாரத்தின் நிமிர்த்தம் இத் தொழில்களில் ஈடுபடும் செல்வந்தக் குழுக்களினால் விற்கப்படுகின்றனர்.

யுனிசெப் அறிக்கையின்(1999) படி இலங்கையில் சுமார் 30,000 சிறுவர்கள் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் பாலியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும் யுத்தக் கெடுபிடிகள் சுற்றிவளைப்புக்கள் மற்றும் கைது நடவடிக்கை காரணமாக இவ்வாறான ஆபத்துக்களில் இருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்குடன் வேறு மார்க்கமின்றி அப்பிரதேசங்களிலிருந்து வெளியேறி வேறு இடங்களில் பாதுகாப்பற்ற நிலையில் வாழும் சில பெண்களும் சிறுவர்களும் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் நிமிர்த்தம் விரும்பியோ விரும்பாமலோ தங்களது உடலை விற்கும் நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர். இந் நிலைமை உள் நாட்டில் எய்ட்ஸ் போன்ற கொடிய நோய்கள் இலகுவாக பரவுவதற்கு வாய்ப்பளிக்கின்றது. இலங்கையில் வெளிநாட்டு உல்லாசப்பயணிகளைக் கவரும் தன்மை கொண்ட அனேக மையங்களில் இவ்வாறான பாலியல் தொழில்கள் சாதாரண விடயமாகிவிட்ட அம்சமாக மாறி வருகின்றது.

அண்மைக் காலத்தில் நேபாளத்திற்கு நாடு திரும்பும் இந்தியாவில் பாலியற் தொழிலில் ஈடு பட்ட பிரஜைகளில் 65 சத வீதமானவர்களிடையே எய்ட்ஸ் நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இவ்வாறானவர்களை அவர்களின் சமூகமும் உறவினர்களும் மீண்டும் தங்களுடன் இணைத்துக் கொள்வதற்கும் அவர்களை வைத்து பராமரித்து வைத்தியம் செய்வதற்கும் விரும்பாதவர்களாகவும் சில சமயங்களில் நேரடியாகவே மறுப்புத் தெரிவிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

தென்னாசியப் பிராந்தியத்தில் 1992 தொடக்கம் 1996 வரையிலான நான்கு வருட காலத்தில் சிறுவர் துஸ்பிரயோக நடவடிக்கைகள் 31 சத விகித அதிகரிப்பைக் காட்டி நிற்கின்றது. அத்துடன் சிறுவர் துஸ்பிரயோக நடவடிக்கைகள் தொடர்பாக உரிய இடங்களில் 4,000 முறையீடுகளும் செய்யப்பட்டிருந்தது. இதே வேளை பாகிஸ்தானின் பஞ்சாப் பகுதியில் இடம் பெறும் பாலியல் துஸ்பிரயோக நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் அரசு காட்டிய அசிரத்தை காரணமாக ஆரோக்கியமான ஒரு சமூகத்தைப் பாதுகாக்கவோ அல்லது எதிர்காலத்தில் வளம் குன்றிப் போகும் ஒரு சமுதாயம் உருவாவதைத் தடுக்கவோ முடியாத ஒரு சூழ்நிலை உருவாகிவருவதையும் அந்த அறிக்கை எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டியுள்ளது.

கலாசாரம் என்ற பெயரில் உருவாகும் சமூக மாற்றங்களும் தீவிர வறுமைநிலையும் இவ்வாறான கொடிய வன்முறைகளை பெண்களுக்கெதிராகத் தோற்றுவிக்கின்றன. 1993ம் ஆண்டு இந்தியாவில் பெண்களுக் கெதிரான வன்முறைகள் தொடர்பாக 84,000 முறையீடுகள் பொலிஸ் காவல் நிலையங்களிலும் மனித உரிமைக்கான நிலையங்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தத் தொகையானது 1996 இல் 115,723 ஆக அதிகரித்திருந்தது. இலங்கையில் பெண்களுக்கெதிரான வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முறைகளின் பெயரில் 1998 ம் ஆண்டின் முதல் மாதத்தில் மாத்திரம் 26,525 முறைப்பாடுகள் இலங்கைப் பொலிஸ் காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

வங்காளதேசத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் மிக அதிக அளவில் காணப்படுகின்றது. இந் நாட்டில் வாழும் ஒவ்வொரு 1000 பெண்களிலும் 10 பெண்கள் இவ்வாறான பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்படுகின்றனர். பெண்களுக்கெதிரான வன்முறைகள் அவர்கள் வசிக்கும் வீடுகளிலும் அதிகளவில் இடம் பெறுவது ஆய்வுகளின் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளது. வீட்டில் இடம் பெறும் பெண்களுக்கெதிரான வன்முறைகள், பாதுகாப்பற்ற தன்மைகள், ஒதுக்கல்கள், அடிமைமுறை நடவடிக்கைகள் போன்றவை அநேக பெண்கள் நிரந்தர விலைமாதுகளாக மாறுவதற்கு காரணமாக அமைகின்றது. நேபாளத்தில் இடம் பெறும் பெண்களுக்கெதிரான வன்முறைகளில் 50 சதவீதமான குற்றங்கள் குடும்ப உறவினர்களால் அவர்கள் வதியும் இல்லங்களிலேயே ஏற்படுகின்றது. கிடைக்கப் பெறும் தகவல்களின் அடிப்படையில் பாகிஸ்தானில் ஒவ்வொரு மணித்தியாலமும் 2 பெண்கள் இவ்வாறான வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

அநேகமாக வறிய குடும்பங்களில் வாழும் இளம் தென்னாசியப் பெண்கள் எதிர் கொள்ளும் முக்கிய பிரச்சினை சீதனக் கொடுமையாகும். இந்தியா இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் திருமணமாகும் பெண்களில் அநேகமானவர்கள் திருமணம் செய்து கொள்ளும் மணமகனின் பெற்றோரிடம் பணம் அல்லது தங்க ஆபரணங்கள் அல்லது சொத்துக்கள் வீட்டுத்தளபாடங்கள் என ஏதாவது அல்லது முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொடுத்தால்தான் திருமணம் செய்து கொள்ளவோ இன்பகரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவோ முடியும் என்ற நிலையில் உள்ளனர். ஏற்றுக் கொண்ட படி சீதனத்தைக் கொடுக்கத்தவறும் பெண்களுக்கு கணவனால் அல்லது அவனது உறவினர்களால் கொடுக்கப்படும் அருவருக்கத்தக்க கொடுமைகளை அனுபவிக்க வேண்டிய நிலை திருமணமான பெண்களுக்கு உருவாகும். இவ்வாறான கொடுமைகளுக்கு ஆளாகும் அனேக பெண்கள் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் தென்னாசிய நாடுகளில் அதிகரித்து வருகின்றது. சில சந்தர்ப்பங்களில் இவ்வாறான பெண்கள் மீது எரியும் திரவங்களை வீசி கொலை செய்வதற்கான முயற்சிகளையும் உறவினர்கள் மேற்கொள்கின்றனர். இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம் ஆகிய நாடுகளில் சீதனம் தொடர்பான பெண்களுக்கெதிரான வன்முறைகள் அபாயகரமான நிலையை எட்டியுள்ளன. கிடைக்கப் பெற்ற நிச்சயமற்ற தகவல்களினடிப்படையில் இந்தியாவில் 1994 – 1998 காலப்பகுதிக்கிடையில் 23,000 பெண்கள் சீதனம் தொடர்பான பெண்களுக்கெதிரான வன்முறைகளினால் தற்கொலை செய்துள்ளனர் அல்லது மரணத்தைத் தழுவியுள்ளனர் எனத் தெரிய வருகின்றது. இதே சமயம் லாகூரில் சராசரியாக ஒரு மாதத்தில் 16 பெண்கள் இவ்வாறான பெண்களுக்கெதிரான வன்முறைகளினால் தீயிட்டுக் கொழுத்தப்படுவதாகவும், கொடுமைப்படுத்தப்படுவதாகவும் காவல் துறையினரிடம் முறையிடப்படுவதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இவைகூட அநேகமாக வறிய குடும்பங்களிலேயே இடம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உசாத்துணை நூல்கள்


01. Ali Imran (2002), **South Asia XXV (2),** The Historical Lineages of Poverty and Exclusion in Pakistan,
02. ESCAP (1997**), Women in Pakistan** : A Country Profile, United Nation, New York
03. Madawatta P.(1999), Human Development Report shows Worsening Poverty in South Asia, WSWS.org
04. Pakistan Embassy(2005) http://www.pakistan embassy.org
05. Priyadarshana M,(1999) **Human Development Report Shows worsening Poverty in South Asia**, http.: //www.wsws.org
06. UNICEF(1999) Report Cites Deelining Levels of Education and Literacy- World wide
07. Vilani Priris (1999), **UNICEF report cites diclining levels of education and literacy world – wide**
08. **வீரகேசரி தேசிய தினசரி நாழிதழ்** (2006), வீதியோரச்சிறுவர்களைக் கடத்தி ஊனமாக்கி விற்கும் கும்பல், புது டில்லி (01.08.2006), (கொழும்பு)
09. சிவராம் டீ.. 2004, **வீரகேசரி தேசிய தினசரி நாழிதழ்** (04.01.2004), கொழும்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்வி உளவியல் தோற்றமும் அதன் பின்னனியும்

செ. அருள்மொழி
(B.Sc, Agri, PGDE, SLPSI, PGDM, M.Sc (Edu.Mgt) SLEAS)

## 1. அறிமுகம்

உளவியல் துறை கடந்த ஒரு நூற்றாண்டு காலமாகவே விஞ்ஞான ரீதியாக வளர்ச்சி பெற்றது எனினும், மனித இயல்புபற்றிய சிந்தனைகள் நீண்டகாலமாகவே இருந்து வந்துள்ளன. மெய்யியல் உடலியல் போன்ற துறைகளில் பரிசோதனை மூலம் பெறப்பட்ட முடிவுகளில் ஏற்பட்ட வளர்ச்சியும் சாள்ஸ் டாவினின் கருத்துக்களும் உளவியலை ஒரு விஞ்ஞான ரீதியாக நோக்க ஆதாரமாக அமைந்தன. மனிதனின் இயல்பு யாது? என்பது மெய்யியலின் பிரதான பிரச்சினையாக இருந்து வந்துள்ள அதேவேளையில், மெய்மையின் இயல்பு யாது? என்ற இரண்டாவது பிரச்சினையும் அறிவியல் துறையில் ஏற்பட்டன. இவ்விரு பிரச்சனைகளும் இணைந்து மூன்றாவது பிரச்சினைக்கு அடிப்படையாக அமைந்தன அதாவது "மனிதன் மெய்மையை எவ்வாறு அறிகிறான்?" என்பதாகும். இப்பிரச்சினையே அறிவின் தோற்றம் அதன் அடிப்படைபற்றிய பிரச்சினைக்கு விடை காணமுயலுகிறது. ஆரம்ப கால சிந்தனைகளில் மனிதனின் மெய்மை பற்றி இரு வாதங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன. அதாவது சிந்தனைகள் ஒன்றில் இரு பொருள்வாதம் சார்ந்ததாக அல்லது ஒரு பொருள்வாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சார்ந்தாக இருந்தன. இதன் பின்பு உளவியல் பற்றிய கருத்துப்பள்ளிகள் தோன்றியதன் அடிப்படையில் கல்வி உளவியல் தோன்றலாயிற்று. இக்கட்டுரையானது கல்வி உளவியல் எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதை பற்றி வரலாற்று ரீதியாக ஆய்வு செய்கிறது.

## 2. மெய்யியல் கண்ணோட்டம்

### அ). இரு பொருள் வாதம் (Dealism)

இந்த வாதத்தின்படி நாம் இரு உலகங்களில் வாழ்கின்றோம். பொருள் சார்ந்த உலகம் முதலாவதாகவும், எமது நாளாந்த அனுபவங்களைக் கொண்ட உலகம் இரண்டாவதாகவும் கருதப்பட்டன. நாளாந்த அனுபவங்கள் மனங்கள் மூலம் வெளிப்படுவதாகக் கருதப்பட்டன. நாளாந்த அனுபவங்கள் மனங்கள் மூலம் வெளிப்படுவதாகக் கருதப்பட்டன. இதன்படி மெய்மை என்படுவது பொருளையும் மனதையும் உள்ளடக்கியதொன்றாகும். இதனாலேதான் மனிதனுக்கு பிரச்சினை ஏற்படும்போது அதாவது பிரச்சினையைக் கருத்தில் கொள்ளுமிடத்து, இது பொருளையும் மனத்தையும் (ஆன்மா) கொண்ட உடல் (மெய்) ஆகின்றது. இதன்படி, மனத்தையும் உடலையும் உள்ளடக்கிய இரு பொருள் வாதத்தை பிளேட்டோ (கி.மு.427-347) முன்வைத்தார். பிரஞ்சு தத்துவ ஞானியான டெக்காட்டெஸ் (1596-1650) மனிதன் உடலையும் ஆத்மாவையும் கொண்டவன் என்ற இரு பொருள் வாதத்தை முன்வைத்தார். இவரது கருத்துப்படி, மனமும் உடலும் இடைத்தாக்கத்தில் ஏற்படுவதன் மூலம் உடலின் நிகழ்வு மனத்தில் நிகழ்வுகளை ஏற்படுத்தும் அதே வேளையில், மனத்தின் நிகழ்வு உடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிகழ்வுகளை ஏற்படுத்துகின்றன. இதன் மூலம் இடைத்தாக்கம் பற்றிய கோட்பாடு எழுந்தது.

## ஆ) ஒரு பொருள் வாதம் (Monism)

பல தத்துவ ஞானிகள் இடைத்தாக்கம் பற்றிய கருத்துக்கு பல கோணங்களிலும் விடையளிக்க முற்பட்டனர். மெய்மையின் இயல்பு எப்படிப்பட்டதாக இருந்தாலும், ஒத்த மெய்மையின் இரண்டு அம்சங்களே உடலும் (பொருள்) மனமும் (ஆத்மா) ஆகும். இது ஒரு பொருள்வாதம் என அழைக்கப்படுவதுடன், இதை முனைந்தவர்கள் ஒரு பொருள்வாதிகள் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்களிடையே உடலுக்கா, அல்லது மனத்திற்கா முக்கியத்துவம் கொடுப்பது என்பதைப்பற்றி கருத்து வேறுபாடுகளும் இருந்தன. உடலை விடுத்து மனதிற்கு முக்கியத்துவம் கொடுத்தவர்கள் கருத்து முதல்வாதிகள் எனவும், மனதை விடுத்து உடலுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்கள் கருத்து முதல்வாதிகள் எனவும் அழைக்கப்பட்டனர். பொருள் முதல்வாதிகள் கருத்தப்படி மூளை என்ற பொருள்சார்ந்த உறுப்பு இயங்குவதன் மூலமாகவே அநுபவமும் உள்ளுணர்வும் தோன்றி சிந்தனை உருவாகிறது. இதன்படி பிரபஞ்சத்தின் அடிப்படையே பொருள் ஆகும். மனமும் பொருளின் இன்னொரு வடிவமாகும். இதன்படி, இடைத்தாக்க வாதமும் ஒரு பொருள் வாதமும் மனிதனின் இயல்பும் உளச்செயற்பாடும் அறிவைப் பெறுதல் பற்றி வெவ்வேறு கருத்துக்கள் தோன்றக் காரணமாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனிதன் எவ்வாறு அறிவைப் பெறுகிறான் என்பதைப் பற்றி விளக்கவும் விடையளிக்கவும் கருத்து முதல்வாதம் ஆகிய இரு மெய்யியல் கருத்துக்களும் முற்பட்டன. இதற்கு இவ்வாதங்கள் "உள்ளாந்த சிந்தனைகள்" என்ற கருத்தை முன்வைத்தன. உள்ளாந்த சிந்தனையானது மனிதனின் மனதிற்கு முக்கியத்துவம் அளித்ததினால் கருத்து முதல் வாதிகள் இச்சிந்தனையை ஏற்றுக் கொண்டதுடன், இரு பொருள் வாதத்தை முன்வைத்த டெக்காற்டெசும் இதை ஏற்றுக்கொண்டார். உள்ளாந்த சிந்தனையானது மனிதனின் மனதிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனித உணர்வுகளுக்கும் உளச்செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கருத்துக்களை வெளியிட்டவர்தான் மெய்யியலாளரான தோமஸ் ஹெப்ஸ் (1585-1679). ஒரு மனிதனின் அறிவின் மூலாதாரமாக அமைவது உணர்வுகளாகும். மனிதனில் பல உளச்செயற்பாடுகள் உள்ளன. இச்செயற்பாடுகளை சிந்தனையின் சேர்க்கையினூடாக விளங்கிக் கொள்ளலாம் என்பதே இவரது கருத்தாகும். இக்கருத்துக்கள் உடலுக்கு முக்கியத்துவம் கொடுத்ததினால் பொருள் முதல்வாதமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனிதனின் அறிவு பெறும் செயற்பாடானது வெறும் உள்ளாந்த சிந்தனையிலிருந்தது அல்ல என்ற எதிர்வாதத்தை முன் வைத்தவர்தான் ஜோன்லொக் (1632-1704). இவர் உள்ளாந்த சிந்தனை என்ற கருத்தை வன்மையாக எதிர்த்ததுடன், பிள்ளைகளின் உள்ளத்தை வெற்றுத்தாளுடன் ஒப்பிட்டு, மனிதனுக்கு கிடைக்கும் சகல அறிவும் அனுபவத்திலிருந்தே பிறக்கின்றது என்ற கருத்தை முன்வைத்தார். இது பிரித்தானிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அனுபவவாதம் என அழைக்கப்பட்டது. இதிலிருந்து மனம் உளச்செயற்பாடு பற்றிய ஆய்வுச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் பின்பு மனத்தை உணர்வு சார் அனுபவ அடிப்படையில் விளக்குவதற்கு புலக்காட்சி (Perception) மற்றும் புலன் உணர்வுச் செயற்பாடுகளை மெய்யியலாளர்கள் கருத்திற் கொள்ள முயற்சித்தனர்.

### 3. உடலியல் பற்றிய கருத்துக்கள்

உரோம நாட்டு மருத்துவரான கலன் (Galan) என்பவர் ஏறக்குறைய இரண்டாம் நூற்றாண்டு காலப்பகுதியில் புலன்நரம்பு, இயக்க நரம்புகளிடையே தொழிற்பாட்டு ரீதியான வேறுபாடு உண்டெனக் கண்டறிந்தார். இக்கருத்து 19ம் நூற்றாண்டின் ஆரம்பகால உடலியல் ஆய்வுப் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. புலன் உணர்ச்சியானது புலன்நரம்பு, இயக்க நரம்புகளின் வெவ்வேறான செயற்பாட்டினாலேயே தொழிற்படுகின்றன என்று இக் காலத்தில் உறுதிப்படுத்தப்பட்டது. இதன் பின்னர் செய்தியானது நரம்புகளினூடாக ஒரே திசையில் மட்டும் இடம்பெறுவதாகவும், அதாவது புலன் உறுப்பிலிருந்து மூளைக்கு செல்வதாக கண்டறியப்பட்டது. இதன் மூலமாக மனிதன் ஒரு தெறிவினை பண்புடையவன் என்ற கருத்து எழுந்தது. இதன் பின்னாகவே மனித நடத்தையைத் தூண்டி, துலங்கல் தொடர்புகளின் அடிப்படையில் விளக்கும் செயற்பாடுகள் வலுப்பெற்றன. இதிலிருந்து பரிசோதனை அடிப்படை ஆய்வுகளின் காரணமாக மனமானது மூளையில் இருப்பதாக நிறுவப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதன் பின்பு மூளையும் பல்வேறு தொழிற்பாடுகளுக்கேற்றபடி தொழிற்படுகின்றது என்ற கருத்தும் வலுப்பெற்றது. பகுதி பகுதியான ஆய்வுகளின் அடிப்படையில், மூளையின் பல்வேறு பகுதிகள் இனம் காணப்பட்டு பார்த்தல், கேட்டல் போன்ற செயற்பாடுகளுக்கு நடுமூளையும், சுவாசம், இதயத்துடிப்பு,இயைபாக்கம் போன்ற செயற்பாடுகளுக்கு சிறு மூளையும் காரணமாக இருக்கின்றதென உறுதிப்படுத்தப்பட்டன. இவ்வழிமுறையினூடாக மூளையின் பல்வேறு பகுதிகளுக்கும் அவற்றின் தொழிற்பாடுகளுக்கும் இடையிலான பல்தொடர்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. மூளையின் அமைப்பைப் பற்றியும் அதன் தொழிற்பாட்டைப்பற்றியும் அறிந்து கொள்ள உடலியலாளர்கள் பேச்சுக் குறைபாடுடைய நோயாளிகளை தமது பரிசோதனைக்காகப் பயன்படுத்தினர். இவ்வாறான பிள்ளைகளின் மூளையை மேற்பட்டைக்கு மின்னதிர்ச்சியைக் கொடுத்து குறிப்பிட்ட இயக்கத் துலங்கல்கள் ஆராயப்பட்டன. இவ்வகையான பரிசோதனைகள் மூலமாக மூளையின் தொழிற்பாட்டில் காணப்படும் வேறுபாடுகள் அதன் அமைப்பின் வேறுபாடுகளையே சுட்டிக் காட்டுகின்றன என்ற முடிவு பெறப்பட்டு பின்பு நிறுவப்பட்டது. பல நூற்றாண்டுகளாக மெய்யியலாளர்களிடையே காணப்பட்ட மனம்-உடல் பற்றியகருத்துக்கள் பிரச்சினைகள் உடலியலாளர்களினால் தீர்க்கப்பட்டன. இதன் மூலமாகவே உடலியலாளர்கள் அமைப்புக்களுக்கும் (மூளையின் வெவ்வேறு பகுதிகள்) தொழிற்பாட்டிற்கும் (வெவ்வேறு தூண்டல்கள்) இடையிலுள்ள தொடர்பினை நிறுவி இது பற்றிய முக்கிய கருத்துக்களை முன்வைத்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உடலியலாளர் பயன்படுத்திய பரிசோதனை முறையான விஞ்ஞானத்துறையினைக் கையாண்டு தமது வாதங்களுக்கு ஆதாரம் தேட மெய்யிலாளர்களினால் முடியவில்லை நாம் எவ்வாறு வெளி உலகை அறிகின்றோம் என்னும் விடயத்தில் மெய்யிலாளர்கள் கூடிய அக்கறை காட்டத் தொடங்கி இதற்கு விடை காண புலன் உறுப்புக்கள், நரம்புக் கடத்தல் பற்றிய உடலியலாளர் கொண்டிருந்த அறிவைப் பயன்படுத்த முற்பட்டும் அவர்களால் முடியவில்லை.

உடலியலாளர்கள் மூளையின் அமைப்பையும் அதன் தொழிற்பாட்டையும் பற்றி கூடியளவு அறிந்திருப்பினும், தொழிற்பாடுபற்றி பல பிரச்சினைகளை எதிர் நோக்கி அதேவேளையில் அமைப்பைக் கொண்டு மட்டும் தொழிற்பாட்டை விளக்க அவர்களால் முடியாமல் போய்விட்டது. இவ்வேளையில் உடலியளாளர்களும் மெய்யிலாளர்களும் சில பொதுவான பிரச்சினைக்கு விடைகாண முற்பட்ட போதிலும் சரியான விடையைக் காண அவர்களால் முடியவில்லை. இப்பிரச்சினைகளுக்கு பொருத்தமான விடையை காண உடலியலாளர்களாலும் மெய்யிலாளர்களினாலும் முடியாமல் போனதன் காரணமாகவே, உளவியல் என்ற ஒரு துறை தோன்ற வழிவகுக்கப்பட்டது.

மனித இயல்பைப்பற்றி ஆராய்வதற்கு பரிசோதனை முறைகளைப் பயன்படுத்துவதில் உடலியலுக்கும், உளவியலுக்கும் பொதுவான சில அம்சங்கள் உண்டு. தற்பொழுது உளவியல் துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மெய்யியல்துறை ஆய்வுகளிலிருந்து தன்னை விடுவித்து பரிசோதனை முறைகளில் ஆய்வுகளை நடத்திகொண்டிருப்பதனால் இத்துறை விஞ்ஞானம் என்ற அந்தஸ்தை பெற்றுள்ளது.

## 4. உளவியல் பற்றி வரலாறு

உளவியல் ஒரு விஞ்ஞானமாக வளர்ச்சியடையத் தொடங்கியது 19ம் நூற்றாண்டிலாகும். வில்ஹெறாம்வூண்ட் (1832-1920) என்ற உளவியலாளரே முதன் முதலாக உளவியல் ஆராய்ச்சிக்கான ஆய்வுகூடத்தை நிறுவினார். உள்ளுணர்வு மூலமாக அனுபவம் பெறும் தனியாள் ஒருவரின் உடனடி அனுபவத்தை பகுப்பாய்வு செய்வதே இவருடைய முக்கி நோக்கமாக அமைந்திருந்தது. மெய்யியல் சிந்தனையில் உருவாகிய உடலோ, மனமோ இவரின் ஆய்விற்கு ஒரு பிரச்சினையாக அமையவில்லை இதற்கு காரணம் இவர் தூண்டி துலங்கலை அடிப்படையாக வைத்து ஆய்வினை மேற்கொண்டமையினால் மெய்யியற் சிந்தனைகள் தேவையற்றனவாகி விட்டன.

விஞ்ஞானத்தின் கோட்பாடுகளுக்கமைய பல்வகையான தூண்டிகளின் செயற்பாடுகளுக்கேற்ப துலங்கல், அதாவது உள்ளுணர்வின் வெளிப்பாடுகளைப் பற்றி பரிசோதனைக்குட்படுவர் தருகின்ற விளக்கத்தை கொண்டு பகுப்பாய்வு நடத்தப்பட்டன அதாவது தனியாள் பெறுகின்ற உடனடி அனுபவம் இங்கு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது அதாவது தனியாள் பெறும் தூண்டலுக்கேற்றவாறு துலங்கலை வெளிக்காட்ட அக் காட்சி தனியாளினுள் செயற்படுகின்றது. எனவே, இப்பகுப்பாய்வு அகக் காட்சியனூடாகவே நிகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தனியாள் காட்டும் துலங்கல்களான உணர்வுகள், எண்ணங்கள் மெய்பாடுகள் போன்ற கூறுகளின் அடிப்படையிலேயே வூண்ட பகுப்பாய்வினை மேற்கொண்டார். இதன்மூலமாக மெய்யியல், உடலியல் ஆகிய துறைகளிலிருந்து உளவியலின் அடிப்படையை வேறுபடுத்திக்காட்டினார்.

விஞ்ஞான முறை உளவியலின் இன்னொரு கட்டம் ஞாபகம் பற்றிய தோற்றப்பாடாகும். எப்பிங்கொாஸ் (1850-1909) என்பவர் ஞாபகம் பற்றிய முக்கிய விடயங்களை தமது பரிசோதனை ஆய்வின் மூலமாக வெளியிட்டார். கற்றல் நினைவிலிருத்தல் பற்றி இவர் வெளியிட்டகருத்துக்கள் இன்றும் உளவியல் துறையில் மிகவும் பொருத்தமுடையதாகக் காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் எந்தளவு நினைவிலிருத்தப்படும் என்பதை அவர் நிறுவ முற்பட்டு, மனனம் செய்வதற்கும் ஞாபகப்படுத்துவதற்கும் இடையிலுள்ள நேர இடைவெளியை வேறுபடுத்திக் காட்டினார்.

விஞ்ஞான உளவியல் ஆய்வுச் செயற்பாடுகள் 20ம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் பல பாகங்களிலும் பிரபல்யமடைந்தன. இக் காலத்திலேயே ருஷ்யாவில் இயன் பவ்லோவ் (1849-1936) நிபந்தனைப்படுத்தல் பற்றிய ஆய்வுகளை நடத்தினார். பிரான்சில், அல்பிரட் பீனே (1857-1949) நுன்மதியை அளவிடல் பற்றிய ஆய்வினை நடத்தி கொள்கைகளை வெளியிட்டார். அமெரிக்காவைச் சேர்ந்த ஈ.ல். தோண்டைக் (1879-1949) முயன்று தவறிக் கற்றல் பற்றிய பல பரிசோதனைகளைச் செய்து ஆய்வு முடிவுகளைக் வெளியிட்டார். இந்த ஆய்வு முடிவுகள் அனைத்தும் உளவியல் துறை வளர்ச்சியடைவதற்கு மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காரணமாக அமைந்தன. பலவேறுபட்ட உளவியலாளர்கள் அனுபவம் பற்றியும்,அனுபவத்தை பெறுபவனின் இயல்புகள் பற்றியும் வெவ்வேறு ஆதாரங்களுடன் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டதன் விளைவாக உளவியல் கருத்துப் பள்ளிகள் தோன்றி வளர்ச்சியடைந்தன.

## 5. உளவியல் கருத்துப் பள்ளிகள்

### அ). அமைப்பு வாதம்( உள்ளுணர்வு பற்றியது)

வில்ஹெம்வூண்டினுடைய உள்ளுணர்வு பற்றிய உளவியல் அமைப்பு வாதம் பற்றி விளக்கியது. ஒரு இரசாயனவியலாளார் பொருளைத் தனியங்களாகப் பகுப்பாய்வு செய்வது போல் வூண்ட் மனித உள்ளுணர்வு அனுபவத்தை பகுப்பாய்வு செய்தார். இவருடைய அனுகுமுறைச் செயற்பாடுகள் குறுகியதன்மையுடையதாக காணப்பட்டதன் விளைவாக அமைப்பு வாதக் கருத்துப்பள்ளியின் பரப்பும் குறுகிக் காணப்பட்டதுடன் சில குறைபாடுகளும் இருந்தன. அத்துடன் அனுபவத்தைப் பெறும் தனியாளில் இது தங்கியிருப்பதனால் அமைப்பு வாதத்தின்பரப்பு குறுகியதாகவும் ஒரு வரையறைக்குட்பட்டும் காணப்பட்டது. அத்துடன், அனுபவத்தை பெறும் தனியாளில் ஒரு பௌதிகத் தூண்டி ஏற்படுத்தும் தாக்கத்தையே இது முற்றாகக் கருத்திற் கொண்டதாக இருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய பலதரப்பட்ட உளவியற் கருத்துப்பள்ளிகள் இதற்கு எதிராக எழுந்தவையென பலராலும் நம்பப்பட்டது. ஐரோப்பா, அமெரிக்காவின் பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாகங்களிலிருந்தும் மாணவர்கள் லீப்சிக்கில் இருந்த வூண்டின் ஆய்வு கூடத்திற்கு வந்து கற்றனர். பின் தமது நாடுகளுக்குச் சென்று சொந்தமாக பல பரிசோதனைகளை செய்தனர். இவர்களில் ரிச்சனர்(1869-1927) எனும் ஆங்கிலேயர் லீப்சிக்கிற்கு வந்து 1892 இல் தமது கலாநிதிப்பட்டத்தை பெற்றுவிட்டு பின் அமெரிக்காவுக்குச் சென்று கொர்னல் பல்கலைக்கழகத்தில் வேலை செய்யும் போது வூண்டின் கருத்திலோ, அமைப்பிலோ மாற்றங்களை அறிமுகம் செய்யாமல் அவற்றைத் திருத்தி அமைக்க முற்பட்டார்.

ஒரு தனியாளின் வாழ் நாளில் இடம்பெறும் உளச் செயற்பாடுகளின் கூட்டு மொத்தமே மனம் என ரிச்சனர் வரையறை செய்தார். இந்த உளச்செயற்பாடுகள் அனைத்தும் உள்ளுணர்வுகள் என அழைக்கப்பட்டன. உள்ளுணர்வின் உள்ளடக்கம் அகக் காட்சி மூலமாகவோ பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. உளவியல் பற்றி கருத்தில் காரண காரியம் தொடர்பான விளக்கங்களுக்கு இடமில்லை. இவ்வாறான விளக்கத்தை உளவியல் உடலியலிலிருந்தே பெறுகின்றது. காரண காரியம் தொடர்பான விளக்கங்கள் ஒரு தொழிற்பாட்டு அம்சம் எனப் பொருள்படும். மூளையில் ஏற்படும் நரம்புத் தொழிற்பாடுகள் எவ்வாறு உள்ளுணர்வுகளை ஏற்படுத்துகின்றன என்பதைப் பற்றிய அறிவு ரிச்சருக்கு இல்லை. இவர் நரம்புத் தொழிற்பாடுகள் உள்ளுணர்வுகளுக்கு சமாந்தரமானவையே எனக் குறிப்பிட்டார். இவர் அமைப்பின் காரணமாகவே தொழிற்பாடுகள் ஏற்படுகின்றது என எடுத்துக் கூறினார். அதாவது தொழிற்பாட்டை விட அமைப்பே முக்கியமானது எனவும், தொழிற்பாட்டைப்பற்றி விளக்க முன்பு உணர்வின் அமைப்பினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதே இவருடைய கருத்தாகும். ஆய்விற்குட்படுபவர் திறன்களையுடையவராகவும், நன்கு பயிற்றப்பட்டவராகவும் இருந்தால் மட்டுமே அகக் காட்சி முறை தகுதியுடையதாக இருக்கும் என ரிச்சனர் கருதினார். இவ் அகக்காட்சியிலே ஆய்விற்குட்படுபவர் நனவுநிலை அனுபவங்கள் என்பதிலும் பார்க்க உடலுக்குரிய தூண்டிகளை விளக்குவதிலே எப்பொழுதும் சந்தர்ப்பங்கள் உண்டு. அகக் காட்சியில் என்ன அவர் கண்டார் என்பதைவிட எப்படி அவர் கண்டார் என்பதே எதிர் பார்க்கப்படுகின்றது. அகக் காட்சியிலே அவதானிக்கப்பட இருந்த உள்ளுணர்வுகளின் தன்மை எப்பொழுதும் அன்பு, வெறுப்பு, கோபம் போன்ற உணர்ச்சிகளோடு இணைந்து வரும். இத்தகைய உணர்ச்சிகளின் அவதானத்திற்குள் அகக் காட்சிக்குட்படுபவர் தமது மனதை திருப்பும் போது அதற்கு முன்னுள்ள மனதின் நிலை அல்லது உள்ளுணர்வுகள் மறைந்து போகும். அவதானிப்பிற்கு உட்படாது விடுபட்ட ஞாபகங்கள் அகக்காட்சி ரீதியாக விபரிக்கப்படக் கூடியனவாகும்.

## ஆ) பயன்பாட்டு வாதம் (உளச்செயற்பாடு பற்றியது)

ரிச்சனருக்கு அமெரிக்காவில் அனேகமான மாணவர்கள் இருந்த போதிலும், இவருடைய அமைப்பு வாதத்தை அமெரிக்கா நன்கு ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் அமைப்பு வாதம் முழுமையாகக் கைவிடப்பட்டது. இதனால் அமெரிக்க நாட்டு உளவியற் பள்ளிகள் காலப்போக்கில் பயன்பாட்டு வாதம் என முன்னுரிமைப்படுத்தப்பட்டது.

ஜோன் டூஇ (1859-1952) வில்லியம் ஜேம்ஸ் (1842-1910) ஆகிய மெய்யிலாளர்கள் பயன்பாட்டு வாதத்திற்கு அதிகளவு பங்களிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்தவர்களாவார். பயன்பாட்டு வாதத்திற்கு அடிப்படையாக இருக்கின்ற தத்துவமானது சார்ஸ் டார்வினுடைய (1809-1882) பரிணாமக் கொள்கையின் செல்வாக்கிற்கும் உட்பட்டதாக இருக்கின்றது. அமெரிக்காவில் டார்வினினுடைய கொள்கை நன்கு ஏற்றுக்கொண்டதன் காரணமாக பயன்பாட்டு வாதம் வரவேற்கப்பட்டது. சாள்ஸ் டார்வின் மனிதனிலும் விலங்கிலும் மன வெழுச்சி வெளிப்பாடுகளை மிக அக்கறையுடன் ஆராய்ந்து மனித உளவியல் விருத்தி பற்றிய முக்கிய ஆய்வுகளில் ஈடுபட்டு இயற்கைத் தேர்வு, உயிர்களின் பரிணாமம் என்ற கொள்கையை முன்வைத்தார்.

வூண்ட் என்பவருடைய மற்றொரு அமெரிக்க நாட்டு மாணவரான ஜேம்ஸ் மக்சீன் காட்டெல் (1860-1944) அமெரிக்காவின் உளவியற் பள்ளிகளில் அதிகம் ஆய்வுகளைச் செய்தவராவார். தனியாள் வேறுபாடுகளைப் பற்றி ஆய்வு செய்து உளவியலின் அளவுசார் முறைகளின் விருத்திக்கு உதவியவர்களில் மிகவும் முக்கியமானவராவார். சூழலுக்கேற்ப சீராக்கம் பெறும் தனியாளுடைய முயற்சியில் தனியாளுடைய உணர்வுகளின் நிலையில் அமைப்பு வாதிகள் ஆர்வம் காட்டவில்லை. உண்மையிலேயே உள்ளுணர்வு என்றால் என்ன? என்பதைவிட எவ்வாறு உள்ளுணர்வு செயற்படுகின்றது அல்லது உள்ளுணர்வின் ஆற்றல்கள் என்பவற்றைப் பற்றியே இந்த பயன்பாட்டுவாதிகள் கருத்திற் கொண்டனர். ஆனால் உள்ளுணர்வு என்றால் என்ன? எனும் விடயத்திலே அமைப்புவாதிகள் அக்கறை செலுத்தினர். இதன் விளைவாக மனித நடத்தைபற்றிய விளக்கத்திற்கு ( உள்ளுணர்வின் ஆற்றல், செயற்பாடு ) அமெரிக்க உளவியலாளருடைய அமைப்புவாதம் திருப்திகரமற்றதாகக் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பயன்பாட்டு வாதக் கருத்தியலின் தந்தையாகக் கருதப்பட்ட வில்லியம் ஜேம்ஸ் காலத்தில் ஜோன் டுஇ அமைப்பு வாதச் சிந்தனை கருத்துப் பள்ளியை சிக்காக்கோவில் தொடங்கி வைத்தார். இதனால் வில்லியம் ஜேம்ஸ் இரண்டு சிந்தனைக் கருத்துப்பள்ளியையும் வேறுபடுத்துவதற்கு "அமைப்புசார்", "பயன்பாடுகள்" என்ற இரு சொற் பிரயோகத்தைப் பிரயோகித்தார். இதன்படி, அமைப்புசார் உளவியல் கருத்துப்புள்ளியில் உள அம்சங்கள் பற்றிய துறை என்றும், இதே விடயத்தைப் பயன்பாடுசார் உளவியல் கருத்துபள்ளியியல் உளச்செயற்பாட்டுதுறை என்றும் கருதப்பட்டது.

பயன்பாட்டுவாதம் நெகிழ்ச்சித் தன்மையுடையனவாகவும். நிலைமைகளுக்கேற்ப நடத்தைகளைக் கருத்திற் கொண்டவையாகவும் இருந்தமையினால் நன்கு ஒழுங்கு படுத்தப்பட்டதாக அமையவில்லை. நிலைமைகளுக்கேற்ப நடத்தையை நோக்கி அவருடைய கவனம் திருப்பப்பட்டமை காரணமாக பயன்பாட்டுவாதிகள் பெருமளவிற்கு கற்றல் சம்பந்தமான பிரச்சினைகளிலும் நடத்தையின் மாற்றத்தகு தன்மையிலும் கவனம் செலுத்தினர்.

### இ). நடத்தை வாதம் ( மனித நடத்தை பற்றியது)

பயன்பாட்டு வாதத்திலிருந்து நடத்தை வாதம் தோன்றியதாகும். எனினும் நடத்தைவாதக் கருத்துப்புள்ளியைத் தோற்றுவித்த ஜே.பி. வாட்சன் (1878-1958) அமைப்பு வாதமும், பயன்பாட்டுவாதமும் மனதைப்பற்றியே ஆராய்ந்தபடியினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனித நடத்தைக்கு சரியான விளக்கம் தரவில்லை என எடுத்துக் கூறினார். இவர் வெளியிட்ட கருத்துக்களாவன,

- விலங்குகளை ஆராய்ந்ததன் விளைவாக நடத்தை மாற்றங்களை விளக்குவதற்கு அகக் காட்சியைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை.
- நடத்தை மாற்றங்களை விளக்க உணர்வுகள், எண்ணங்கள், உள்ளுணர்வுகள் ஆகிய உளம் சார்ந்த எண்ணக்கருக்கள் தேவையற்றன.
- உளவியல் ஒரு விஞ்ஞானமாக வேண்டுமாயின் புறவயமான உண்மையான விஞ்ஞான முறைகள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்
- விஞ்ஞான பூர்வமான உளவியலினூடாக பல விதிகள் உருவாக்கப்படல் வேண்டும்.
- தூண்டியொன்று இருக்குமிடத்து துலங்கல் பற்றி எதிர்வு கூறக்கூடியதாக இருக்கும் அதே வேளையில், துலங்கலைக் கொண்டு தூண்டியை எதிர்வு கூறக்கூடியதாக இருக்க வேண்டும்.

எனவே, நடத்தைவாதமானது பழக்கங்களை உருவாக்குதல் பற்றியதாகும். பவ்லோவின் நிபந்தனைப்படுத்தலை வாட்சன் தமது எண்ணக்கருவாக அமைத்துக் கொண்டார். பரம்பரை பற்றிய சகல கருத்துக்களையும் நிராகரித்த அவர், சூழலின் செல்வாக்கே மனித நடத்தைக்கு முக்கிமானதென எடுத்துக் கூறினார். இதுவரை காலமும் உளவியலாளர்கள் கூறிய உடல்- மனம், அமைப்பு-பயன்பாடு பற்றிய சகல கருத்துக்களையும் நிராகரித்து இப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார். உளவியல் என்பது முன்பிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிலமைகளுக்கும் தொடர்ந்து வரும் நடத்தைக்கும் இடையிலுள்ள தொடர்பினைக் கண்டறிய முற்படுவதாகும். அதாவது, முன்பின்னுள்ள நிலமைகள் நடத்தையுடன் மட்டுமே தொடர்புடையவை. மனதைப் பற்றிய கருத்தை இவர் நிராகரித்து விட்டார். தூண்டி – துலங்கல் பற்றிய தொடர்புகளில் மட்டுமே கவனம் செலுத்தினார்.

உளவியலை ஒரு விஞ்ஞானமாக ஆக்குவதில் கூடிய கவனம் செலுத்தியவர் வாட்சன் ஆவார். பௌதீகவியல், இரசாயனவியல் துறைகளில் பயன்படுத்திய ஆய்வு முறைகளை உளவியல் அறிமுகம் செய்வதற்கு கடும் முயற்சியெடுத்து வெற்றியும் கண்டார். தமது குறிப்பிட்ட உலகில் உடல்நலமுள்ள பிள்ளைகளைத் தம்மிடம் தந்தால் நான் நினைத்தவாறு வளர்ப்பதற்கு தம்மால் பயிற்சியளிக்க முடியும் என்று கூறினார். அவர்களை இவ்வாறு நடத்தை பற்றிய அவரது விளக்கம் மிகக் கூடியளவு புறவயமானதாகவும் இயக்கம் சார்ந்ததாகவும் அமைந்திருந்தது.

### ஈ) கெஸ்ரோல்ட் உளவாதம் (அனுபவம் பற்றியது)

வூண்டின் அமைப்பு வாதத்திற்கு எதிராக ஜேர்மனியில் தோன்றிய கெஸ்ரோல்ட் உளவியல் ஒரு அனுபவத்தை ஒழுங்கமைப்பு செய்வதிலேயே கவனம் செலுத்தப்பட்டது. Gestalt என்பது Form, Shape, Organization, Whole (தமிழில் முறையே அமைப்பு, வடிவம், ஒழுங்கமைப்பு, முழுமை) ஆகிய சொற்களைக் குறித்து நிற்கின்றன. கெஸ்ரோல்ட் உளவியலாளர்கள் ஒரு அனுபவத்தை செய்வதிலே கவனம் செலுத்தி உள்ளுணர்வின் முழுமையை கருத்திற் கொண்டனர். இவை உள்ளுணர்வின் பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அம்சங்களின் ஒழுங்கமைப்பினுடைய விளைவாகும். இவர்களது கருத்துப்படி உளவியல் ஆய்விற்கு பகுதிகளை விட முழுமைகளே பொருத்தமானது என வலியுறுத்தினர்.

கெஸ்ரோல்ட் உளவியலாளர்களில் மாக்ஸ் வேதிமர் (1880-1943) மிகவும் முக்கியமானவர். ஒரு திரைப்படத்தைப் போன்று மிகவும் துரிதமாக கட்புலத் தூண்டியின் அசைவினைப் பற்றி அமைப்பு வாத கருத்துப்பள்ளி சரியான விளக்கத்தைக் கொடுக்கவில்லை என எடுத்துக் காட்டினார். இவரின் கருத்துப்படி புலக்காட்சிச் செயல்முறைகளே உளவியலின் மையப் பொருளாக அமைய வேண்டும் எனக் கொண்டார். ஏனெனில் எமது புலக்காட்சித் தூண்டலின் அமைப்பிலேயே தங்கியிருக்கின்றன. அவை அமைப்பு வாதிகள் கூறியது போல உடற் பரிமாணத்தின் தொழிற்பாட்டில் தங்கியிருக்கவில்லை.

வேதிமரின் தொடர் ஆய்வினை கூற்(Kurt), கொவ்கா (Koffka) (1886-1941), வூல்பாங் (Wolfang) (1887-1965) ஆகியோர் மேற்கொண்டு புலக்காட்சி ஒழுங்கமைப்புக் கோட்பாடுகளை நிறுவுவதில் முன்னின்று செயற்பட்டனர். இவர்கள் அமைப்பு வாதிகளுடன் ஒத்துச் செல்லாத அதேவேளையில், நடத்தை வாதிகளுக்கு ஆதாரம் தேடவும் இல்லை. உளவியலின் உள்ளடக்கம் இருக்கின்ற தோற்றப்பாட்டை ஆராய்வதே இவர்களது நோக்கமாக இருந்ததுடன் உளவியலுக்கு "அனுபவத்தைப் பெறுபவர்கள்" மீண்டும் அறிமுகப்படுத்தினார்கள். அமைப்பு வாதிகள் கூறியவாறு அக் கோட்பாட்டை பகுப்பாய்வு செய்வதை அல்லது வேறு வடிவங்களாக மாற்றுவதை இவர்கள் விரும்பவில்லை. இவர்களுடைய கருத்தின் படி மெய்மை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒருவர் பெறும் புலக்காட்சியாகும். அதாவது நிகழ்வுகளை அல்லது தோற்றப்பாடுகளை நம்பினர். ஒரு பொருள் தன்னுடைய அளவில் எப்படியிருந்த போதிலும் அது எமது உள்ளுணர்வுகளுக்கு எத்தகைய தோற்றப்பாடாகத் தெரிகின்றதோ அதனையே நம்பினர்.

கெஸ்ரோல்ட் உளவியலாளர்களின் கருத்துப்படி நரம்பு நிகழ்வுகளுக்கும் (உடல்), புலக்காட்சி நிகழ்வுகளுக்கும் (மனம்) இடையே ஒரு உள்ளார்ந்த ஒற்றுமை இருப்பதை கருத்தாக வெளியிட்டனர். இதன் மூலம் மனம் - உடல் பற்றிய பிரச்சினையைத் தீர்த்துவைத்தனர். கெஸ்ரோல்ட் உளவியலில் புலக்காட்சி ஒழுங்கமைப்பின் விதிகள் மற்றும் புலக்காட்சிச் செயன்முறை என்பவற்றையே முக்கியமாக ஆராய்கின்றது. புலக்காட்சி, கற்றல், சிந்தனை, பிரச்சினையை தீர்த்தல் ஆகியவற்றில் இவர்களது கொள்கை அதிகளவில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

இவர்களது ஆய்வு முறையைப் பின்பற்றி மனித நடத்தை பற்றிய மண்டலக் கொள்கையை ஜேர்மன் நாட்டு உளவியலாளர் கேற் லீவின்ட் (1890 -1947) உருவாக்கினார். இவர் 1932 இல் ஐக்கிய அமெரிக்காவில் இது தொடர்பான ஆய்வினை மேற்கொண்டு ஊக்கல் பிரச்சினைகளில் அதிக அக்கறையையும் செலுத்தினார். இவர் அமெரிக்க உளவியலில் அதிக செல்வாக்கு செலுத்தியதன் விளைவாக இன்று உளவியலில் முக்கியகருத்துப் பள்ளிகளாக நடத்தை வாதமும் கெஸ்ரோல்ட் உளவாதமும் பிரபல்யமாகியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உ) உளப்பகுப்பாய்வுக் கொள்கை

மெய்யியல், விஞ்ஞான அடிப்படையிலான கருத்துக்களை கொண்டதாக இருந்த உளவியல் கருத்துப் பள்ளியை வித்தியாசமான முறையில் சிந்திக்க வைத்ததுதான் உளப்பகுப்பாய்வுக் கொள்கையாகும். வியன்னாவில் நரம்பியல் துறையில் சிறப்பு அறிவு பெற்றிருந்த மருத்துவரான சிக்மன் புரொய்ட் (1856- 1939) வீறுகோ என்னும் நோய்க்கு சிகிச்சையளித்த நோயாளிகளிடம் சில உடல்சார் அறிகுறிகளைக் கண்டார். இந் நோயாளிகள் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது பல பழைய சம்பவங்களை நினைவு கூறினர். இவை அவர்களது நனவு நிலையில் வெளிவருவதில்லை என்பதைக் கண்டறிந்த அவர் நோயாளிகளின் இவ் ஆற்றலையிட்டு மிகவும் கவரப்பட்டு தமது நோயாளிகளைப் பரிசோதித்து அவர்களுக்கு சிகிச்சையளிக்க உளப்பகுப்பாய்வு முறைமையைக் கையாண்டனர். நோயாளிகளுடன் நெருங்கிப் பழகி அவர்களுடைய கனவுகளை ஆய்வு செய்வதன் மூலம் நோயாளிகளின் பிரச்சினைகளை அவரால் அறியக் கூடியதாக இருந்தது.

அமைப்பு வாதம் நனவுநிலை பற்றி ஒரு விஞ்ஞானத்துறை என்ற வகையில் உளச் செயற்பாட்டின் பெரும்பகுதியைக் கருத்திற் கொள்ளவில்லை எனவும் மாறாக நனவு நிலை அனுபவத்தின் மீது கூடிய கவனத்தைச் செலுத்தியது எனவும் பிராயிட் கருதினார். மேலும் நோயாளிகளை அடக்கி வைத்தல் காரணமாக நனவு நிலையில் பலவற்றை மறந்து விடுகின்றனர். இதற்குக் காரணம் உள வாழ்க்கையின் நனவு நிலை அம்சங்கள் நனவு நிலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எட்டியவையாக இல்லை என்பதை அவர் அறிந்து கொண்டார். ஆனால் அவை நனவிலி நிலையில் இருக்கும் நோயாளிகளுடன் தொடர்பு கொள்ளும் செயற்பாட்டின் மூலம் நினைவு கூறப்படலாம். இச் சம்பவம் பற்றி நோயாளி அறிந்திருப்பதில்லையாயினும் இவை பல்வேறு நரம்பியல் நடத்தைகளுக்கும் காரணமாக அமைகின்றது என்றார். நனவிலி நிலையை அறிமுகப்படுத்திய பிராயிட் தான் கண்டவற்றைக் கொண்டு சில கொள்கைகளையும் எண்ணக்கருக்களையும் உருவாக்கினார். இவரது உளப் பகுப்பாய்வுக் கொள்கை மூன்று விடயங்களைக் கருத்திற் கொள்கின்றது.

- ஆளுமையின் அமைப்பு உள- பாலியல் விருத்தி என்பவற்றுக்கு விளக்கத்தைக் கொடுக்கின்றது.
- நரம்பியல் நோய்களுக்கான ஒரு சிகிச்சை முறையை வழங்குகின்றது.
- விஞ்ஞான ரீதியான தரவுகளைச் சேகரிப்பதற்கான ஒரு வழிமுறையை வழங்குகின்றது.

மனிதனின் உடன் பிறந்த அடிப்படைத் தேவைகளைக் கொண்டே பிராய்ட்டின் கொள்கை அமைந்திருந்தது. மனிதனில் பால் மற்றும் இயல்பூக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள் எவ்வாறு நிறைவு செய்யப்படுகின்றன என்பவற்றைக் கருத்திற் கொண்டு கொள்கையை அவர் உருவாக்கினார். ஆளுமையின் அமைப்பை அடக்கம், அதியகம் ஆகிய முக்கிய எண்ணக்கருக்களை வைத்து விளக்கினார். நனவடி, நனவிலி ஆகிய எண்ணக்கருக்களை வைத்து நனவு நிலையை விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தனியார் சமூகத்துடன் தன்னை சீராக்கிக் கொள்ள முயற்சிக்கின்றான் என்பதே தொழிற்பாட்டு வாதிகளின் கருத்தாக இருக்கின்ற அதே வேளையில், பிராயிட்டின் கருத்துப் படி தனியாள் சமூகத்துடன் போராடுகின்றான் என்பதாகும். ஏனெனில் மனிதன் தனது இயல்பூக்க உந்துதல்களை நிறைவு செய்ய முயற்சிக்கும் போதெல்லாம் சமுதாயத்தில் விதிகளும் கட்டுப்பாடுகளும் அவனது முயற்சிகளை முறியடிக்கின்றன. இதனால் "இட்" இற்கும் "அகம்" இற்குமிடையே முரண்பாடுகள் தோன்றுகின்றன. அதாவது மனிதனில் உள அமைப்பிலுள்ள மகிழ்ச்சியைத் தேடும் அம்சத்திற்கும் (இட்) மெய்மை அம்சத்திற்கும் (அகம்) இடையே முரண்பாடுகள் தோன்றுகின்றன. இந் நிலையில் தனியாள் ஒரு புறம் தனது இயல்பூக்கங்களை திருப்திப்படுத்தவே விரும்புகின்றான் மறுபுறம் சமூகக் கட்டுப்பாடுகளுக்கு அடங்க வேண்டிய தேவைகளும் இருக்கின்றது. இவை இரண்டுக்கும் இடையேயிருந்து மனிதன் தத்தளிக்கின்றான். இதனால் எழுகின்ற புதிய நிலைமைகளை ஒடுக்குவதனால் மட்டுமே கட்டுப்படுத்த முடியும். இத்தகைய முரண்பட்ட இடைத்தாக்கம் நனவிலி நிலையின் உள்ளடக்கமாக அமைகின்றது. ஒடுக்கலினூடாக அனுபவங்கள் மறுக்கப்படலாம் என்பது உண்மையாயினும் முரண்பாடுகள் நீடித்து நிலவி நரம்புக்குரிய நடத்தைகளை உருவாக்குகின்றன.

பிராயிட்டின் உளவியல் கருத்துக்கள் குழந்தை உளவியலில் முக்கிய செல்வாக்கு செலுத்தியதுடன் அவருடைய பல்வேறு கருதுகோளும் கொள்கைகளும் பெருமளவிலான ஆராய்ச்சிகளை ஆரம்பித்து வைத்தன. தற்காலத்தில் இவரது உளப் பகுப்பாய்வுக் கொள்கை உளவியலில் ஒரு முக்கிய சக்தியாக நீடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிலவுகின்றது.

அமைப்பு வாதிகளும் பயன்பாட்டு வாதிகளும் உள்ளுணர்வுகளுக்கு அமைப்பு ஒன்றுண்டு என நம்பினர். எனினும் அமைப்பு வாதிகள் அகக் காட்சியிலேயே தங்கியிருந்தனர். ஆனால் பயன்பாட்டு வாதிகள் அகக் காட்சியில் ஓரளவிற்கே தங்கியிருந்தனர். நடத்தை வாதிகள் மனதைக் கருத்திற் கொள்ளவில்லை. இவர்கள் அகக் காட்சி முறையை முற்றாகக் கைவிட்டு வெளிப்படையாக அவதானிக்க் கூடிய நடத்தையும் அதற்குக் காரணமாக அமையும் தூண்டியுமே முக்கியமானவை எனக் கூறினார். கெஸ்ரோல்ட் வாதிகள் மனமும் உடலும் ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்ட பொருள் எனக் கூறி பிரச்சினைக்கு தீர்வைக் கண்டனர். உளப் பகுப்பாய்வு வாதிகள் நனவு நிலை மனதிற்கு அப்பாற் சென்று நனவிலி மனதை பகுப்பாய்வு செய்தனர். பகுத்தறிவுக்கு ஒவ்வாத அச்சம் அல்லது பயம் என்பவற்றை ஆராய முற்பட்டனர். இவர்கள் அடக்கப்பட்ட நிகழ்ச்சிகள், அவை இன்னொரு வடிவத்தில் நனவு மனதிற்கு மீண்டும் வந்து சேர்வதையும் ஆராய்ந்தனர்.

பொது உளவியல் கருத்துப் பள்ளிகள் ஒவ்வொன்றும் ஆய்வுப் பொருளைப் பொறுத்தவரையில் ஒவ்வொன்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தன. பிற்காலத்தில் உளவியலில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாக உளவியல் கருத்துப் பள்ளிகள் மறைந்து புதிய கொள்கைகள் உருவாகின. இதற்கு உதாரணமாக கற்றல் கொள்கைகள், புலக்காட்சிக் கொள்கைகள், ஆளுமை பற்றிய கொள்கைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதன் வழியாக பல உப கொள்கைகளான புலக்காட்சி, கற்றல், ஊக்கல் போன்றவை உருவாகின. இதன் பின்னாகவே ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

துறைசார்ந்த பிரிவுகள் ஆரம்பமாகின. கல்வி உளவியல் தனித்துவ வளர்ச்சி பெற்ற பழைய துறைகளில் ஒன்றாகும்.

### 6. கல்வி உளவியல்

கல்வி உளவியலின் முக்கிய நோக்கம் உளவியல் எண்ணக் கருக்களையும் ஆய்வு முறைகளையும் கொண்டு கற்றல், கற்பித்தல் பிரச்சினைகளை ஆராய்வதாகும். இது மற்றைய துறைகளில் இருந்து வேறுபடுவதற்கு காரணம் அதன் உள்ளடக்கமும் ஆய்வு முறைகளுமேயாகும். அதாவது கல்வி உளவியல் என்பது பொது உளவியலைக் கொண்டு கல்விப் பிரச்சினைகளை ஆராய்வதாகும். கல்வி உளவியல் திறமையான கற்றலுக்கு தேவையான பொருத்தமான நிலமைகளை உருவாக்க முற்படுகின்றது.

ரூசோவின் காலத்திலிருந்து கல்வி பற்றிய இயற்கை வாதச் சிந்தனை வளர்ச்சி பெற்று கல்விச் செயற்பாட்டில் ஆசிரியரையோ பாடசாலையையோ பாடநூல்களையோ அல்லது பாட விடயத்தையோ மையமாக கொள்ளாது பிள்ளைகளுக்கு முக்கியத்துவம் அளித்தது. இவருக்குப் பின் பெஸ்ரலோசி, ஹேர்பேட், புறோபல் போன்றோர் ரூசோவின் சிந்தனைகளை நடைமுறைப் படுத்தினர். குளவிப் பூங்கா இயக்கம் வளர்ச்சியடையத் தொடங்கியதும் கல்வித் துறையில் உளவியல் நன்கு முன்னேற்றங்களைக் கண்டது.

உளவியல் துறைகளில் கல்வியயலாளர்களினால் மனித நடத்தை பற்றிய அடிப்படை வினாக்களுக்கு விடைகாண வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதாரணமாக

- கல்வியின் நோக்கங்களும் இலக்குகளும் யாவை?
- நாம் உருவாக்க வேண்டிய விரும்பத்தக்க நடத்தைகள் யாவை?
- இந்த விரும்பத்தக்க நடத்தைகளுள் எவற்றைப் பாடசாலையும், சமூகமும், பெற்றோரும் உருவாக்க வேண்டும்.
- இந்த நடத்தை மாற்றங்களை பிள்ளைகளில் ஏற்படுத்த வேண்டுமாயின் பிள்ளைகளின் ஆற்றல்கள் யாவை?
- பிள்ளைகளில் காணப்படும் தனியாள் வேறுபாடுகள் யாவை?
- விரும்பத்தக்க நடத்தை மாற்றங்களை திறமையாகவும் சிக்கனமாகவும் ஏற்படுத்த எத்தகைய உத்திகளைக் கையாள வேண்டும்,

இவ் வினாக்கள் இரு பிரதான பிரச்சினைகளுடன் தொடர்புபட்டன.

அ) அடிப்படை மனித நடத்தை, அடிப்படை மனித ஆற்றல் என்பவற்றுடனும் தனியாள் வேறுபாடுகளுடனும் தொடர்புபட்டவை.

ஆ) கற்றலுடன் திறன்களையும் அறிவையும் பெற்றுக் கொள்வதுடன் தொடர்புபட்டவை

எனவே, கல்வி உளவியலின் பங்கினை ஆராய்வதன் மூலம் அத் துறையின் உள்ளடக்கத்தை வரையறை செய்கின்றன. கல்வி உளவியலானது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- கற்றலின் தன்மை
- எத்தகைய நிலைமைகளின் கீழ் கற்றல் நடைபெறுகின்றது
- கற்றலின் மதிப்பீடு

• செல்வாக்கு செலுத்தும் காரணிகள் (பிள்ளையின் விருத்திப் பண்புகள், நுண்ணறிவு ஆற்றல், அறிவுசார் அமைப்பு, ஊக்கல், புலக்காட்சி, ஆளுமை, கற்பித்தல் சாதனங்கள், சமுதாயம், ஆசிரியர்) போன்ற சகல காரணிகள் பற்றியும் ஆராய்கின்றது. கல்வி உளவியலாளர்கள் குறிப்பாக கற்றல் கற்பித்தல் பிரச்சினைகளில் கூடிய அக்கறை செலுத்தினர். அதிலும் சாதாரணமான பிள்ளைகளின் பிரச்சினைகளிலேயே முக்கியமாக அக்கறை செலுத்தப்பட்டது. அத்துடன் மீத்திறனுள்ள பிள்ளைகள், உளப்பாதிப்படைந்த பிள்ளைகள் ஆகியோரிலும் சமமான அக்கறை செலுத்தினர். அவருடைய சீராக்கப் பிரச்சினைகளுள் கல்வி மற்றும் தொழில் சார்பான பிரச்சினைகள், ஆர்வம், ஊக்கம் மற்றும் உளப் பாங்குகளில் காணப்படும் வேறுபாடுகள் போன்ற விடயங்களில் அக்கறை செலுத்தினர். அத்துடன் மனித ஆற்றல் அவற்றில் காணப்படும் தனியாள் வேறுபாடுகள் என்பவற்றிலும் கல்வி உளவியலாளர்கள் அக்கறை செலுத்தினர்.

**உசாத்துணை நூல்கள்**

Goodenough, F.,and Tyler,L., (1959) Development Psychology, Apleton –Century – Crofts, London.

Hall,C.S and Lindzey, G., (1950) Theories of Personality, Wiley, The Plamer Press, London.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Watson, J.B., (1924) Behiviourism, New york: Peoples's Institute.

# நவீனத் தமிழின் இரு ஆளுமைகளும் இலங்கையின் நவீன இலக்கியமும்

செ.யோகராசா

நவீனத் தமிழின் முக்கியமான இரு ஆளுமைகளான பாரதியார், புதுமைப்பித்தன், ஆகியோர் இலங்கையின் நவீன தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி அவ்விருவரும் இலக்கிய ஆர்வலரால் நினைவு கூறப்படுகின்ற இவ்வேளையில் சிந்தித்துப் பார்ப்பது பயனுடையது.

- 1 -

முதலில் பாரதியார் பற்றி அவதானிப்போம்.

உண்மையில் பாரதியாரை விளங்கிக் கொள்ளல் என்பது நவீன தமிழ் இலக்கியம் என்பதனை – தமிழின் நவீனத்தன்மை (Modernity) என்பதனை - விளங்கிக் கொள்வதற்குச் சமமானது. இத்தகைய ஆளுமை கொண்டவரான பாரதியார் பொதுவாக இலங்கையின் நவீன தமிழ் இலக்கிய உருவாக்கத்திற்கும் சிறப்பாக நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சிக்குமான பிரதான உந்து சக்தியாக இருந்துள்ளார் என்பது இன்று பின்நோக்கிப் பார்க்கின்றபோதுதான் தெளிவாகப் புலப்படுகின்றது.

இவ்வேளை இலங்கையின் நவீன தமிழிலக்கிய உருவாக்கப் பின்புலம் பற்றி சற்று அறிவது அவசியமாகிறது. இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நவீன இலக்கிய உருவாக்கத்திற்கு வழிவகுத்த காரணிகளுள் யாழ்ப்பாணத்தில் 1942ல் உருவான மறுமலர்ச்சி எழுத்தாளர் சங்கமும் அது வெளியிட்ட மறுமலர்ச்சி என்ற சஞ்சிகையும் (1946-1948) முதன்மை இடம் பெறுபவை.

மேலும், தமிழகம் 1950கள் தொடக்கம் நன்கறிந்து வந்துள்ள, இலங்கையின் மாக்சிய நோக்குடைய ஆரம்பகால படைப்பாளரும் மொழிபெயர்ப்பாளருமான கே.கணேஷ் அவர்களை இணை ஆசிரியராகக் கொண்டு பாரதியார் பெயரில் வெளிவந்த பாரதி என்ற சஞ்சிகையும் (1946) கவனத்திற்குரியதே.

இவற்றோடு மட்டக்களப்பிலே இருந்து வெளிவந்த 'பாரதி' என்ற மற்றொரு சஞ்சிகையும் (1948/49) நினைவு கூரப்பட வேண்டியதே.

முற்குறித்த மறுமலர்ச்சி சஞ்சிகையூடாக நாற்பதுகளளவில் இலங்கையின் நவீன தமிழ்க் கவிதையின் பிரதானமான ஒரு கிளை ஊற்றெடுத்தது. மஹாகவி, சாரதா, நாவற்குழியூர் நடராசன் முதலானோர் அதன் கிளைகளாகப் புறப்பட்டனர். மேலும் இம் மறுமலர்ச்சி சார்ந்த எழுத்தாளர் குழு ஊடாகவே (எ-டு. அ.செ. முருகானந்தன், கு.பெரியதம்பி) ஏலவே தொடங்கிய இலங்கைச் சிறுகதையின் ஓட்டம் இலங்கை மண்ணுடன் சுவறியது. நவீன விமர்சனமும் துளிர்விட்டது. இவ்வாறு முதன்மை பெறும் மறுமலர்ச்சிக் குழுவினரின் நவீனத் தன்மை பற்றிய புரிதல் - அதனை அவர்கள் மறுமலர்ச்சி என்று இனங்கண்டாலும்கூட – (பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை கூட நவீனத்தன்மையை மறுமலர்ச்சியாகவே இனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கண்டிருந்தார்) பாரதியாரை அடியொற்றிக் கிளம்பியது என்பதே கவனத்திற்குரியது. மறுமலர்ச்சி ஆசிரியத் தலையங்கங்களும், கட்டுரைகளும் இதற்கு ஆதாரங்களாகின்றன. எடுத்துக்காட்டாக, சி.குலரத்தினம் என்பவர் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி பின்வருமாறு.[2]

> 'பாரதியாருடைய ஒவ்வொரு கவிதையிலும் மறுமலர்ச்சி யின் தோற்றம் தெரிகிறது. இன்று அவருடைய கவிதைகளைப் பின்பற்றி எண்ணற்ற பாடல்கள் தோன்றிவிட்டன.
> அவர் பாடியது மறுமலர்ச்சிக் காலத்தின் அறிகுறியே............"

'மறுமலர்ச்சி' சஞ்சிகை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த அதேவேளையில் பாரதி சஞ்சிகையோ கொழும்பிலிருந்து வெளியாகியது. 'பாரதி' சஞ்சிகையின் முகப்பு வாசகமும் பாரதியாரின் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற பாடலடிகள்தாம். 'மறுமலர்ச்சி'யை விட, 'பாரதி' சஞ்சிகை, பாரதியாருக்கு மிக அருகிலே சென்று அவரைச் சிக்கென பிடித்துக் கொண்டமை கவனத்திற்குரியது.

அதன் முதல் இதழ் இவ்வாறு குறிப்பிடுகின்றது.[3]

> 'பாரதி அணுசக்தி யுகத்தின் சிருஷ்டி. விஞ்ஞான முடிவுகளில் புரட்சி ஏற்படுத்திய அணுசக்திபோல், தமிழ்மொழிக்குப் புதுமைப் போக்களித்த மகாகவி பாரதியாரின் பெயர்தாங்கி வருகிறது. அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தமிழுக்கு

புதுவழி காட்டியது போலவே 'பாரதி'யும் கண்ட தும் காதல் கதைகள் மலிந்த இன்றைய தமிழ் இலக்கியப் போக்கிற்குப் புதுவழிகாட்டும். தமிழுக்காகவே என்ற தம் கூட்டத்திற்குள்ளே யே மொழியைச் சிறைப்படுத்திக் கொண்ட பண்டி தர்களின் இரும்புப் பிடியினின்று அதனை மீட்டு மக்கள் சொத்தாக்கினார் பாரதியார். இன்று 'பாரதியார்

பரம்பரையில் வந்தோம்' என்று ஜம்பமடிக்கும் எழுத்தாளர் கோஷ்டி 'கலை கலைக்காகவே' என்று

அப் பண்டிதர் பல்லவியையே வேறு ராகத்தில் பாடுகிறது. தமிழைச் சிறைமீட்ட பாரதியார் செய்த சேவையை பாரதியின் இலட்சியமும், ஏகாதிபத்தியத்தை அழிக்கப் பாடிய பாரதியார் முப்பது கோடி ஜனங்களின் சங்க முழுமைக்கும் பொதுவுடைமையான ஒப்பில்லாத சமுதாயத்தை ஆக்கவும் கவி பாடினார். அவர் காட்டும் பாதை யில் 'பாரதி' யாத்திரை தொடங்குகிறது.

முற்குறித்த மறுமலர்ச்சிச் சஞ்சிகை சார்ந்த இயக்கத்தினரின் செல்வாக்கு ஏறத்தாழ வட இலங்கைக்குள் வரையறுக்கப்பட்டு நிற்க, கொழும்பிலிருந்து வெளிவந்த 'பாரதி' முற்று முழுதான இலங்கை நிலைப்பட்ட சமூக, இலக்கிய மாற்றங்களைக் கோரி நின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'பாரதி' சஞ்சிகையின் முகப்பு வாசகமும், பாரதியாரின் "சாதிச் சண்டை போச்சோ- உங்கள் சமயச் சண்டை போச்சோ" என்ற அடிகள்தாம். இந்த 'பாரதி'யை முற்கூறிய 'மறுமலர்ச்சி', 'பாரதி' சஞ்சிகைகளுடன் ஒப்பிடும்போது இச்சஞ்சிகையில் சமகாலச் சமூக, அரசியற் பிரச்சினைகளே கூடுதலாக வெளிப்பட்டதாகக் கருத முடிகின்றது. முகப்பு வாசகமும் அதனையே வெளிப்படுத்தி நிற்கின்றது). இச்சஞ்சிகையின் முக்கிய பகுதிகளிலெல்லாம் (எ-டு: பாலர் பகுதி, மாதர் பகுதி) பாரதியாரின் பாடலடிகள் பிரசுரிக்கப்பட்டமை ஒருபுறமிருக்க, எழுதப்பட்ட கட்டுரைகளிலும் ஆங்காங்கு பாரதியார் பாடலடிகள் இடம் பெற்றிருப்பதும் விதந்துரைக்கப்பட வேண்டியதாகின்றது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, 'பாரதி, பாரதியாரைச் சமூக விடுதலையின் ஆதர்ஸ புருஷராகக் கொண்டுள்ளமை புலப்படுகின்றது. (இப்பாரதியில் பாரதியார் பற்றிய பிற தகவல்களும் அவ்வப்போது வெளிவந்துள்ளன. எ-டு: மெய்யப்பச் செட்டியார் பாரதி பாடல் உரிமையைச் சர்க்காருக்கு விற்றமை).

ஆக, மறுமலர்ச்சி எழுத்தாளர் குழுவினருக்கும், 'பாரதி' அணியினருக்கும் (மட்டக்களப்பு) பாரதி சஞ்சிகையாளருக்கும் நவீன சிந்தனைகள் துலக்கமுற (ஆதர்ஸ புருஷராகி) உத்வேகமளித்தவர் பாரதியார் என்பதே எமது கவனத்திற்குரியது!

நிற்க, ஈழத்து நவீன கவிதையின் தோற்றம் பற்றி மீண்டும் நினைவு கூர்வோம். 1940களில் முற்குறித்த இலக்கியச் சூழலில் இலங்கையில் நவீன கவிதை பிறப்பெடுத்தாலும் அதற்கான ஊற்றுக்கள், ஏற்கனவே பல்வேறு காலப் பகுதிகளில் – பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மட்டங்களில் - வெளிப்பட்டிருந்தன. அத்தகைய ஊற்றுக்களுள் 1930களில் மேற்கிளம்பிய இரு ஊற்றுக்கள் முதன்மையானவை. அவற்றுளொன்று, 'ஈழகேசரி' பத்திரிகையை மையமாகக் கொண்டு உருவானது.

இலங்கையின் நவீன இலக்கிய உருவாக்கத்தில் சிறப்பாக, சிறுகதை, விமர்சனம், மொழிபெயர்ப்பு இலக்கிய வளர்ச்சியிலே முக்கிய இடம் பெறும் ஈழகேசரிப் பத்திரிகை, நவீன கவிதை ஓரளவு ஊற்றெடுப்பதற்கு வழிவகுத்தது என்ற விதத்திலும் கவனிப்பிற்குரிய இடத்தினைப் பெற்றுள்ளது). ஈழகேசரிப் பத்திரிகையின் முகப்பு பகுதியிலே பாரதியாரின் கவிதைகள் மறுபிரசுரம் செய்யப்பட்டன. ஏற்கனவே 1920 தொடக்கம் சுவாமி விபுலானந்தர் மேடைப் பேச்சுக்களூடாகவும் கட்டுரைகளூடாகவும் இலங்கையில் பாரதியார் புகழ் பரப்பிய முன்னோடியாகச் செயற்பட்டிருந்தார். எவ்வாறாயினும் இவ்விடத்தில் கவனிக்க வேண்டியதொன்றுண்டு. இவ்வாறு இக்காலப் பகுதியிலே இலங்கையிலே பாரதியாரின் புகழ் பரப்பப்பட்டதென்பது பாரதியாரின் மேதைமை காரணமாக மட்டுமன்றி இலங்கையில் அவ்வேளை ஓரளவு முகிழ்த்து வந்த தேசியம் பற்றிய சிந்தனையுள் இலங்கைக் கவிஞர்களை ஈடுபடச் செய்வதற்குமாகும். அதாவது தேசியம் சார்ந்த விடயங்களைக் கவிப்பொருளாக்குவதிலே (வேந்தனார், அல்வையூர் செல்லையா, யாழ்ப்பாணன், அகிலேஸ்வரசர்மா, ப.கு.சரவணபவன், பீதாம்பரம், மு.நல்லதம்பி முதலிய) இலங்கைக் கவிஞர்களுக்கு அன்றைய சூழலில் பாரதியாரே 'வாராது போல வந்த மாமணி' யானார்: முதலும் முடிவுமானார். எடுத்துக்காட்டாக, கவிஞரொருவரது கவிதையொன்று இவ்வாறு ஆரம்பிப்பதனைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழமாதா திருப்பள்ளி எழுச்சி
"காலமெ னுந்தேர் பாவமாம் பள்ளங்
கடுகியே யோடுது கண்மூடித் துயிலாய்
பாலர்கள் பசிகொண்டு பால்மொழி கூறிப்
பரிதவித் துன்முகம் பார்த்தல் பாராய்
மாலுறுத் தும் பஞ்சப் பேய்விரித் தாட
மார்க்கமொன் றறியாம லேக்கமுங் கொண்டாய்
ஏலமட் டும் இன்னல் உற்றனம் வாழோம்
ஈழமா தாபள்ளி எழுந்தரு ளாயே!

- ப.கு.சரவணபவன்

மேற்கூறியவற்றுடன் 'பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி என்ற கவிதையை நோக்குவதும் அவற்றில் வெளிப்படும் பாரதியார் பாடல்களின் தாக்கம் எத்தகையது என்பதனை நுணுகிக் கண்டுகொள்வதும் பயனுடைய முயற்சியே.

முன்னர் குறிப்பிட்டது போன்று இலங்கை நவீன கவிதைக்கான ஊற்றுக்களுள் மற்றொரு கிளை 1930களிலே மலையகப் பிரதேசம் சார்ந்து வெளிப்பட்டது. ஈழத்தின் முதற் பெண்கவிஞரென்று கருதத்தக்க மீனாட்சியம்மாள் நடேசய்யர் (தொழிற்சங்கவாதியும் பத்திரிகை ஆசிரியருமான தனது கணவர் கோ நடேசய்யருடன் இணைந்து) மலையகப் பிரதேசத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் மத்தியிலே பாரதியார் பாடல்களை இசையோடு பாடிப் பரப்பினர். அத்துடன் பாரதியார் தமது பாடல்களில் மெட்டுக்களைப் பயன்படுத்திக் காட்டிய வழியிலே பாரதியார் பாடல் மெட்டுக்களை தமது பாடல்களிலே பயன்படுத்தி தாமும் பாடல்களியற்றி தொழிலாளர் மத்தியிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போராட்ட உணர்ச்சியை விதைக்கலானார்.

மீனாட்சியம்மாள் நடேசய்யரின் முயற்சியினால் மலையகப் பிரதேசக் கவிதை வளர்ச்சியிலே இன்னொரு மாற்றமும் முகிழ்கிறது. அதாவது, மலையகத் தோட்டத் தொழிலாளர் மத்தியிலிருந்து கோவிந்தசாமித் தேவர், பெரியசாமிப்பிள்ளை, ஜில் முதலான மக்கள் கவிஞர்கள் உருவாகத் தொடங்கினார். தமிழக ஆய்வாளர் வெங்கடாசலபதியின் வார்த்தையில் கூறினால் 'முச்சந்தி இலக்கிய' வாரிசுகள் என்று அவர்களை இனங் காணலாம்.

இலங்கையின் மலையகப் பிரதேசத் தொழிலாளர் அவலங்களை முதன்முதலாக வெளியுலகத்திற்கு இனங்காட்டியவர் மக்கள் கவிமணி எனப்படும் சி.வி.வேலுப்பிள்ளை. அவரது In Ceylon's Tea Garden என்ற ஆங்கில நெடுங்கவிதை உருவாக்கத்திற்கு பாரதியாரின் 'கரும்புத் தோட்டத்திலே' மறைமுக உந்து சக்தியாக இருந்துள்ளது என்பதிலே தவறில்லை. ஏனெனில், சி.வி.வேலுப்பிள்ளையும் ஏலவே இலங்கையில் பாரதிபுகழ் பரப்பிய முன்னோடிகளுள் ஒருவராயிருந்தவர்.

சி.வி.வேலுப்பிள்ளையின் மேற்கூறிய ஆங்கில நெடுங்கவிதையைத் தமிழிலே (தேயிலைத் தோட்டத்திலே என்ற பெயருடன்) மொழிபெயர்த்த மற்றொரு மலையகக் கவிஞர் சக்தீ.அ.பாலையா பற்றியும் இவ்விடத்திலே நினைவு கூர்வதவசியம். மலையக நவீன தமிழ்க் கவிதை முன்னோடிகளுள் முதன்மையானவர் சக்தீ.அ.பாலையா.. இவரது 'சொந்த நாட்டிலே (தேசியகீதங்கள்) என்ற முதற்கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைகள் பலவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தவிர்க்கவியலாதவாறு ஏதோ ஒருவிதத்தில் பாரதியார் கவிதைகளை நினைவுபடுத்துவது மனங்கொள்ளத்தக்கது. உதாரணமாக, பாரதியாரின் 'வருகின்ற பாரதத்தை வாழ்த்தும்' கவிதையை நினைவுபடுத்துகின்றவாறுள்ள சக்தீ பாலையாவின் கவிதையிலிருந்து ஒரு பகுதி.

'களி படைத்த செயல்கள் கோடி
காண வைப்பாய் வா, வா, வா
ஒளி படைத்த வாழ்வு இங்கு
ஓங்கச் செய்வாய் வா, வா, வா"

இலங்கை சுதந்திரம் பெற்ற 1950களில் இலங்கையின் தேசிய ஒற்றுமை குறித்துப் பாடிய (மு.நல்லதம்பி, சோமசுந்தரப் புலவர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை முதலான) கவிஞர்களது தோன்றாத் துணையும் பாரதியாரே ஆவார்.

1950களில் இலங்கையின் முக்கியமான முஸ்லீம் கவிஞர்களுள் ஒருவராக முகிழ்த்திருந்த புரட்சிக்கமால் பாரதி குறித்து தமது கவிதையூடாக எழுப்பிய முக்கிய கேள்வியொன்றுண்டு. 'வான்புலமை தேம்பாதோ? என்ற அவரது கவிதை அவ்வழி நோக்கத்தக்கது அதன் முக்கிய பகுதி பின்வருமாறு.

'திக்கை வணங்கும்
துருக்க ரென் றேன் மொழிந்தார்?
தக்க பதி லெனக்குத்
தரவேண்டும் இக் கணத்தே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உடனிருந்து, செந்தமிழால்
உறவிருந்து, வாழ்வாரைக்
கெட நினைந்து பாரதியார்
கிளத்தியிரார் என்றாலும்
சுடுதணலாய் உள்ளத்தில்
சூழ்கிறதே இக்கூற்று....!"

1950களின் மற்றொரு முக்கியமான இலங்கை கவிஞர் இ.முருகையன். நவீன கவிதையில் பாரதி ஏற்படுத்திய முக்கிய மாற்றங்களுள் ஒன்று தமிழ்க் கவிதையை சமூகத்துடன் உறவாடும் கருவியாக மாற்றியமையாகும். இவ்வழி பாரதியாரைப் பின்பற்றிய இலங்கைக் கவிஞர்களுள் தலையானவர் இம் முருகையன்.

தவிர, 1960கள் வரை இலங்கைக் கவிஞர்கள் பலரும் பல்வேறு கோணங்களிலே பாரதியாரை இனங்கண்டு கவிதை பாடும் வழக்கத்தினைப் பின்பற்றி வந்துள்ளனர். இவை பாரதியாரைப் போற்றுவதோடு பாரதி கவிதை பற்றிய விமர்சனமாகவும் அவ்வவ்போது வெளிப்பட்டன. இவ்வாறு பாடியோரது நீண்ட பட்டியலிலும் இ.முருகையன் கவனத்தைக் கோருகின்ற கவிஞராகின்றார்.

மேலும் 1960களில் 'பாரதி கவிதைச் சமர்' என்ற தொடரில் இலங்கையின் முக்கிய கவிஞர்கள் (சில்லையூர் செல்வராசன், இ.முருகையன், மஹாகவி, மு.பொன்னம்பலம், ராஜபாரதி முதலான) பலரும் பாரதியார் கவிதை நோக்குப் பற்றிய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அங்கதப் பண்பு விரவிய கவிதைவழி இலக்கியச் சர்ச்சையொன்றிலே ஈடுபட்டிருந்தமையும், இவ்வேளை விதந்துரைக்கப்பட வேண்டியதொன்றே.[5]

பாரதியார் கவிதை நூல் வெளியீட்டு முறைமை காரணமாக, இலங்கைக் கவிதைப் போக்கில் உருவான பாதகமான விளைவொன்றும் இவ்வேளை நினைவிற்கு வருகின்றது. அதாவது, ஆரம்பகாலத்திலே, பாரதி கவிதை வெளியீட்டாளர்கள் சிலர் பாரதியார் கவிதைகளை தேசியம், சமூகம், தத்துவம், முப்பெரும் பாடல்கள் முதலான தலைப்புகளிலே வகைப்படுத்தி வெளியிட்டிருந்தனர். 1950கள் வரை இலங்கையில் வெளிவந்த பல கவிதைத் தொகுப்புகள்கூட அவ்வாறு வகைப்படுத்தப்பட்டு வெளியாகியுள்ளன. பிரச்சினை அது மட்டுமன்று இலங்கைக் கவிஞர்கள் பலர் அவ்வாறான தலைப்புகளிலே கவிதை எழுத மறைமுகமாகத் தூண்டப்பட்டும் வந்துள்ளனர் என்பதே சிந்திக்கப்பட வேண்டியது.

எவ்வாறாயினும், 1950களின் பிற்பகுதியிலிருந்து இலங்கையின் அரசியல் பின்புலத்திலே தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி எழுந்த மொழி உணர்ச்சிப் பிரவாகமானது இலங்கையிலே பாரதியார் கவிதைகளுக்கிருந்த முக்கியமான இடத்தினை – தேவையை – பாரதியாரின் தாசனுக்கு வழங்கத் தொடங்கியது. இத்தகைய மொழியுணர்ச்சிக் கவிதை ஓட்டம் ஏறத்தாழ 1960கள் வரை தொடர்கிறது. அதேவேளையில், 1960களின் பிற்பகுதியிலிருந்து இலங்கைக் கவிதைப் போக்கிலே வடிவ ரீதியான மாற்றம் - புதுக்கவிதை ஆதிக்கம் ஏற்பட, தமிழக 'எழுத்து'ச் சஞ்சிகை கால்கோளிலிடுகின்றது. பின்னர் 1970களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வானம்பாடி குழுவினரின் செல்வாக்கு ஓங்கி, காலஓட்டத்தில் மேத்தா, வைரமுத்து பரம்பரையினர் உருவாகும் ஆரோக்கியமற்ற நிலை இலங்கையில் உருவாகின்றது. இத்தகு ஆரோக்கியமற்ற சூழ்நிலையிலேதான் 1960களில் நு.்.மான், சண்முகம், சிவலிங்கம், தா.இராமலிங்கம், மு.பொன்னம்பலம், பின்னர் 1970களில் சு.வில்வரத்தினம், சிவசேகரம், வ.ஐ.ச.ஜெயபாலன் என்கின்ற புதிய தலைமுறைக் கவிஞர் குழாமொன்று புறப்பட்டு இலங்கையின் நவீன கவிதைப் போக்கினை இன்னொரு தளத்திற்குக் கொண்டு செல்கின்றனர். 1980களில் முகிழ்த்த போராட்டக் கவிதை தொடர்பாக பாரதியாரும், தாசனும் அல்ல, பலஸ்தீனக் கவிஞர்களும் ஆபிரிக்கக் கவிஞர்களுமே இலங்கைக் கவிஞர்கள் பலரையும் ஆகர்ஷித்துக் கொள்கின்றனர்.

மேற்குறிப்பிடப்பட்டோர் வரிசையில் வித்தியாசமானவரான வில்வரத்தினம் நவீன தமிழ்க் கவிஞர்களுள் தனித்துவம் மிக்கவர், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், ஆழ்வார் பாடல்கள், கம்பராமாயணம், தனிப்பாடல்கள் முதலான தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் பாடலடிகளை மேற்கோளாகவோ பின் புலமாகவோ படிமமாகவோ உருவகமாகவோ உவமையாகவோ உத்தியாகவோ தமது கவிதைகளில் கையாள்வது அவரது தனித்துவ பண்புகளுள் தலையானது. (அதற்கு முக்கியமான காரணங்களுமுள்ளன. எனினும் அவைபற்றி எடுத்துரைக்க உரிய இடம் இதுவன்று). இவ்விதத்தில் பாரதியார் கவிதைகளும் அவரால் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'விடுதலைக் குருவியும் வீட்டு முன்றிலும்' என்ற அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.

'பாரதி

விடுதலை அவாவிய நின்
சிட்டுக்குருவி
எங்கள் வீட்டு முற்றத்திலும்
மேய்தல் கண்டேன்
விடுதலைத் தாக்கத்தின் துடிப்புன் குரலென்றால்
அதன் இதழ்களிலும்
'விடு விடு' என்ற அதே துடிப்புத்தான்.

தலையை உருட்டுதலில்,
சிறகைக் கோதுதலில்
காற்று வெளியில் 'ஜிவ்' வென்ற சிறகுதைப்பில்
அதே துடிப்பு ! சதா துடிப்பு
நீ நேசித்த தேசத்திலும் அதன்
ஒவ்வோர் அங்கங்களிலும்
பெண்மையில், ஆண்மையில், பிணைக்கின்ற
காதலில்
மொழியில், இசையில், கவிதையில்,
உரைநடையில்
அரசியலில், தொழிலில், ஆன்மீகத்தில்
இதே துடிப்பை நீ உடுக்கொலித்தாய்.

'குடுகுடு குடு நல்ல காலம் வருகுது' என்று
நாட்டுக்கு நல்ல குறி சொல்ல
தூக்கிய நின் உடுக்கின் ஒவ்வொரு முழக்கிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விடுதலைக் குருவியின் வீச்சு நிகழ்ந்தது.
கொட்டு முரசின் அதிர்விலும் அதே
விட்டு விடுதலையாகும் வீச்சேதான்.

சிட்டுக்குருவி !
எட்டுத் திக்கும் பறந்தொரு சேதிசொல்
விட்டு விடுதலையானோம் நம்
கட்டுகள் யாவும் அறுந்தன வாமென்று
குறி சொன்னானே அந்தக்
குடுகுடுப்பைக்காரன்
அவன்
காதிலும் மெல்ல இச்சேதியைப் போடு!"

-2-

இனி, புதுமைப்பித்தன் பற்றிக் கவனிப்போம்.

புதுமைப்பித்தன் மணிக்கொடிக் குழு சார்ந்தவர். தமிழ் நாட்டிலே மணிக்கொடிக் குழுவினரின் வரவுடன் சிறுகதை வரலாற்றிலே இரண்டாவது காலகட்டம் உருவான வேளையிலேதான் ஈழத்திலே ஆரம்பகாலம் முகிழ்க்கின்றது. இக்காலச் சிறுகதை முன்னோடிகள் பலரும் மணிக்கொடி வாசகர்களாக விளங்கியுள்ளனர் என்று கூறுவதில் தவறில்லை. ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளுளொருவரான இலங்கையர்கோனின் ஏழு சிறுகதைகள் மணிக்கொடியில் பிரசுரமாகியுள்ளமையும் இவ்வேளை நினைவு கூறப்பட வேண்டியதொன்றாகிறது. எனினும் இவர்கள் புதுமைப் பித்தனின் வாசகர்களானாரே தவிர தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுகதையுலகினுள் அன்னாரைப் பிரவேசிக்கவிட்டாரல்லர். அவ்வாறெனில், இதற்குக் காரணங்கள் எவையாவதுள்ளனவா என்பது பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது அவசியமானது.

மேற்கூறியவாறு சிந்திக்கும்போது எமது சிறுகதை முன்னோடிகள் எத்தகைய நோக்குடன் சிறுகதை எழுத முற்பட்டனர் என்பது பற்றிக் கவனிக்க வேண்டியவர்களாகின்றோம். உண்மைதான். எமது ஆரம்பகால முன்னோடிகள் பலரும் சமூக நோக்குடனோ கலை, இலக்கிய நோக்குடனோ சிறுகதை எழுத முற்படவில்லை. பெரும்பாலோனோர் புகழார்வம் காரணமாகவும் ஒரு சிலர் இலட்சிய நோக்கினாலும் (எ.டு: சம்பந்தன்) சிறுகதை எழுத விழைந்தனர் ! (புதுமைப்பித்தன் யதார்த்தத்தின் உச்சங்களைத் தொட்டவரென்பதும், மறுதலையாக சம்பந்தன் யதார்த்தவாதக் கொள்கையைப் புறக்கணித்தவரென்பதும் சுவாரஸ்யமான விடயங்களே). இத்தகையயோருக்கு புதுமைப்பித்தனோ மணிக்கொடியோ வழிகாட்ட முடியாமை இயல்பானதே இவ்விடத்தில்தான். தமிழ்நாட்டிலே மணிக்கொடி வெளிவந்த சமகாலத்திலே வெளிவந்துகொண்டிருந்த கலைமகள் கவனத்திற்குரியதாகின்றது. 'கலைமகள்' கடாட்சத்தை எமது முன்னோடிகள் வேண்டி நிற்கின்றனர். கலைமகளுக்கு சுவையான கதைகள் தேவைப்பட்டன. இதனால் ஈழத்து வரலாற்றுடன் தொடர்புபட்ட சம்பவங்களை வைத்துக் கதைகள் புனைவதில் எமது எழுத்தாளர் ஆர்வம் காட்டினர். இவர்களது கதைகளுள் கணிசமானவை இத்தியாதி விடயங்களைக் கொண்டிருந்தமையின் தாற்பரியமிதுதான் (எ-டு: குவேனி, அனுலா, காசியப்பன், துட்டககாமினி, பூதத்தேவன் கோட்டை) இன்னொரு விதமாகக் கூறின், இவ்வாறான கதைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புதுமைச்சுவை – புதிய சுவை - தமிழ்நாட்டு வாசகர்களுள் ஒரு சாராரைக் கவர்ந்திழுத்தமையும் இதனால் எமது முன்னோடிகள் அவற்றில் ஈடுபாடு கொண்டமையும் கலைமகள் அவற்றை விரும்பிப் பிரசுரித்தமையும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட விடயங்களாகின்றன என்பது கவனத்திற்குரியதாகின்றது.

எனினும், முன்னோடிகளது சிறுகதைகள் அனைத்தும் ஈழத்து வரலாற்றினையோ இதிகாச புராணச் சம்பவங்களையோ பொருளாகக் கொண்டிருந்தன என்பதற்கில்லை. ஆண்-பெண் உறவு, விதவைப் பெண்களது நிலை முதலானவை சார்ந்த விடயங்களையும் அவ்வப்போது எழுதி வந்துள்ளனர். அவ்வேளை அத்தகைய எழுத்தாளருக்கு புதுமைப்பித்தனை விட மணிக்கொடியின் மற்றொரு எழுத்தாளரான கு.ப.ரா.தான் கைகொடுத்துதவுகின்றார் என்பதும் கவனத்திற்குரியது.

ஆயினும், 1940களின் பிற்பகுதியிலே ஈழத்துச் சிறுகதையுலகினுள் நுழைந்த ‘பித்தன்’ இவ்வேளை எமக்கு மிக வேண்டப்படுகின்றார். மீரா ஷா என்ற இயற்பெயருடைய ‘பித்தன்’ புதுமைப்பித்தன் மீதான மோகம் காரணமாகவே தனது பெயரை ‘பித்தன்’ என்று வரித்துக் கொண்டவர். தான் 1940 ஜனவரியளவிலே புதுமைப் பித்தனை நேரிலே கண்ட அனுபவத்தை இவ்வாறு நினைவு கூர்கின்றார் பித்தன்.[6]

> ‘இந்தியாவில் ஸ்ரார் பிரசுரத்தில் பி.எஸ்.ராமையாவை சந்தித்த போது புதுமைப்பித்தனும் இருப்பதாகக் கூறினார். பார்க்க வேண்டுமே என்றேன் பக்கத்தில் படுத்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒருவரிடம் உன்னைப் பார்க்க இலங்கையர் ஒருவர் வந்திருக்கிறார் என்றார், ராமையா நான் பக்கத்தில் அமர்ந்தேன். இலங்கைச் சீமையில் இருந்தா? நானும் ராமையாவும் மணி ஓடரைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நான்தான் புதுமைப்பித்தன் என்றார் சாதாரணமாக".

அதுமட்டுமன்று, 1942ல் எனது மதிப்பிற்குரிய எழுத்தாளர் புதுமைப்பித்தன் அமராகி விட்டார் எனும் செய்தி என்னை மிகவும் வேதனைப்படுத்தியது. எனது மன உளச்சலை 'கலைஞனின் தியாகம்' எனும் சிறுகதையாக்கினேன் .............. என்றும் நினைவு கூர்கின்றார் பித்தன் (தினகரனில் அவ்வேளை பிரசுரமான அச்சிறுகதை 'பித்தன் கதைகள்' தொகுப்பிலே இடம்பெறாதமை துரதிஷ்டவசமானதே.

மேற்கூறிய விதங்களிலே மட்டும் பித்தன் எமது கவனத்தை ஈர்த்தாரல்லர். அப்பால் தமது சிறுகதைகளுடாகவும் பித்தன் எமக்கு வேண்டியவராகின்றார். இலங்கையின் ஆரம்பகாலச் சிறுகதை முன்னோடிகள் 1930களிலே முற்கூறியவாறான சிறுகதைகள் எழுத, அவர்களைவிட ஒருபடி தாண்டி 1945களிலே மறுமலர்ச்சிக் குழுவினர் இலங்கைச் சிறுகதையை இலங்கை மண்ணுடன் ஓரளவு சுவறச் செய்கின்றனர். எனினும் 1950கள் வரையான ஆரம்ப காலச் சிறுகதை ஓட்டத்தினை முழுமை பெறச் செய்தவர் பித்தனே. இலங்கையில் அவரது சிறுகதைகளே முதன்முதலாக விளிம்பு நிலை மக்களை – ஹோட்டல் சமையற்காரனான முருகப்பன், வண்ணாரப்பெண் வதனி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேலைக்காரி சுபைதா, அனாதை தானியேல், சமையல்காரி செல்லம்மாள் மயானக்குழி தோண்டும் கணபதி, மூட்டை தூக்குகின்ற கந்தசாமி முதலானோரை சுற்றிப் படர்ந்தன. மற்றொரு புறத்தில், ஹாஜியார்களது திரைமறைவு வாழ்க்கையினை - பாலியற் சுரண்டலினை- துணிவோடு அம்பலமாக்கின. ஆக, இவ்வாறான புதிய தடங்களிலே பித்தன் பயணிக்க ஆற்றுப்படுத்தியதில் புதுமைப்பித்தனுக்குக் கணிசமான பங்குள்ளது என்பதே எமக்கு வேண்டிய விடயமாகின்றது. இன்னொரு விதமாகக் கூறின், பித்தனது அத்தகைய ஆளுமை உருவாக்கத்திலே புதுமைப்பித்தனுக்குக் கணிசமான பங்குள்ளது என்பதில் ஐயமில்லை.

மேலும், 1950களவிலேதான் இலங்கையில் பிரதேச (அல்லது வட்டார) மணங்கமழும் சிறுகதைப் போக்கு முகிழ்க்கத் தொடங்கியது. இவ்விதத்தில் முன்னோடிப் படைப்பாளி, மூதூரைச் சேர்ந்த வ.அ.இராசரெத்தினமே (வ.அ.இ). இவருக்கு இதற்கான உத்வேகமளித்தவருள் முதன்மையானவர் புதுமைப்பித்தனே. இவற்றை "வ.அ.இ.வின் கூற்றினூடாக அவதானிப்பது பயனுடையது: அவர் கூறுவதாவது.

> "... அவன் மூலமாக நான் தென்பாண்டி நாட்டுத் திருநெல்வேலிச் சீமைக்காரர்களான புதுமைப்பித்தன் ரகுநாதன், வல்லிக்கண்ணன் ஆகியோரின் கதைகளைப் படிக்கத் தொடங்கினேன். 'புதுமைப்பித்தன் கதைகள் என்ற நூலைக் கரைத்துக் குடித்தேன். அதிலுள்ள கதைகள் எனக்கு மனனமாகி விட்டன. புதுமைப்பித்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கதைகளில் வரும் தாமிரவர்ணி ஆறு என்னுள்ளும் ஓடத் தொடங்கியது. டெனியாயாவை ஊடறுத்தோடும் ஜின் கங்கையிற் குளிக்கையில் எனக்குத் தாமிர வருணியிற் குளிப்பது போன்ற உணர்வு தோன்றும் ....... திருநெல்வேலிச் சீமைக்காரர்களை விழுந்து விழுந்து படித்ததினால் என்கதைகளில் அவர்களின் தாக்கம், என்னையறியாமலே ஏற்பட்டது சாகித்ய மண்டலப் பரிசு பெற்ற எனது 'தோணி' என்ற சிறுகதைத் தொகுதியின் கடைசியாக உள்ள 'ஏமாற்றம்' என்பதிலுள்ள நான்கு சிறுகதைகளும் புதுமைப்பித்தன் கதைகள் என்ற தொகுதியின் கடைசியில் வரும் 'மனக்குகை ஓவியங்கள்' என்ற கதையை போன்றவை. 'குடிமகன்' என்ற கதையின் களமான தம்பலகாமம் இரண்டு விஷயங்களிற் புகழுடையது.... இந்த இரண்டு பெருமைகளிலும் மெய்மறந்து தம்பலகாமம் நீண்டகாலம் தூங்கிற்று. ஊருக்கு மேற்கே ஒன்றே முக்கால் மைல் தூரத்தில் ஓடும் வெள்ளைக்காரன் புகைவண்டி கூட அதன் நீண்ட தூக்கத்தைக் கலைக்கவில்லை என்று ஆரம்பித்திருக்கின்றேனல்லவா? புதுமைப் பித்தன் ஏதோ ஒரு கதையை திருநெல்வேலி பல விடயங்களிற் பெருமை பெற்றது. தென்றல் பிறந்தது இங்கு தமிழ் பிறந்தது இங்கு என்று தொடங்கி யிருப்பதன் தாக்கந்தான் அது..... இப்படியாக நான் என்னையறியாமலே திருநெல்வேலிக் காரனானேன். திருநெல்வேலிக்காரர் தங்கள் வட்டார மக்கள் வாழ்வையும் தாமிரவர்ணியையும் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கதைகளில் கொண்டு வந்தது போல் நானும் என் கதைகளில் எனது வட்டார மக்கள் வாழ்வையும் மகாவலி நதியையும் கொண்டுவர முயன்றேன். முற்போக்கு எழுத்தாளர்கள் மண்வாசனை, தேசிய இலக்கியம் என்று பேசும் முன்னரே அத்தகைய கதைகளை எழுதினேன்.......”

மேற்கோள் சற்று நீண்டு விட்டதாயினும் ‘வ.அ.இ.ல் புதுமைப்பித்தன் ஏற்படுத்திய தாக்கத்தை (அவ்வழி, வ.அ.இ. இலங்கை வளர்ச்சிப்போக்கில் ஏற்படுத்திய தாக்கத்தை) நன்கு புரிந்து கொள்ள முடிகின்றது எனலாம்.

1950கள் அளவிலே இலங்கைப் பல்கலைக் கழகத்திலே ‘புதுமைப்பித்தன் சிறுகதைகள்’ பாடநூலான பின்புலத்திலே 1960களில் அப்பல்கலைக்கழகச் சூழலிலே உருவான புதிய தலைமுறை எழுத்தாளர் சிலரும் புதுமைப்பித்தனால் பாதிக்கப்பட்டனர் என்று கூறத் தோன்றுகிறது. குறிப்பாக, புதுமைப்பித்தனின் ‘அகல்யை’ இவ்வேளை இலங்கை எழுத்தாளர்களைக் கவரலாயிற்று. தொன்மங்களை மறுவாசிப்புச் செய்கின்ற போக்கு 1960கள் அளவிலே இலங்கையில் முகிழ்த்தபோது அதற்குப் புதுமைப்பித்தனின் அகல்யை பேருதவி புரிந்தது. 1960களில் மு.தளையசிங்கம் தொடக்கம் அண்மைக்கால இராகவன் வரையிலே பலர் அகல்யையைத் தொடர்ந்து சென்றிருப்பது கண்கூடு.[8] இலங்கைப் படைப்பாளர்கள் தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் போலன்றி தொன்மங்களை மறுவாசிப்புச் செய்வதிலே நாட்டங் குன்றியவர்கள். எனினும் இவர்களுள் சிலர் அகல்யை கதையை மட்டுமே மறுவாசிப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்துள்ளனர். இவ்விதத்தில் புதுமைப்பித்தனது அகலிகைக்குக் கடமைப்பட்டவர்கள். இவர்கள் பலரதும் அகலிகை பற்றிய நாட்டம் இராமாயணத்தினூடாகவன்றி புதுமைப்பித்தனூடாக உருவாகியிருந்தது என்றே கூற வேண்டும்.

நிற்க, முற்குறிப்பிட்டதுபோல, மணிக்கொடி வெளிவந்த சம காலப்பகுதியில் வெளியான 'கலைமகள்' இலங்கை எழுத்தாளர்கள் மீது ஏற்படுத்திய பாதிப்பு கால ஓட்டத்தில் குன்ற, ஏறத்தாழ 1940களளவிலே இலங்கையில் தி.மு.க. எழுத்தாளர்களது செல்வாக்கு ஏற்படுகின்றது. அதனை விஞ்சும் வண்ணம் 1950களளவிலே எழுத்தாளர் 'கல்கி' யின் பாதிப்பு நிகழ்கின்றது. 1950களின் பிற்பகுதியளவில் இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் குழாம் உருவானபோது சோவியத் எழுத்தாளர்களும் பிரேம்சந், முல்க்ராஜ் ஆனந் முதலான இந்திய எழுத்தாளர்களுமே அவர்களுக்கு வழிகாட்டிகளாகினர். இத்தகைய இலக்கியச் சூழலிலே புதுமைப்பித்தன் 'காணாமற் போனமை' தவிர்க்கவியலாததாயிற்று. அவரைக் கண்டுகொள்வதிலே அக்கால இலங்கை விமர்சகர்களும் அக்கறை கொண்டாரல்லர்.

புதுமைப்பித்தனது சிறுகதைகளை மட்டுமன்றி, கவிதைகளையும் கிரகிக்கின்ற வாசகர் குழாமொன்று இலங்கையில் 1940களளவில் இருந்துள்ளதாகக் கூற போதிய ஆதாரமுண்டு. 'ஓடாதீர்' என்ற தலைப்பிலே புதுமைப்பித்தன் கிராம ஊழியனில் (1944ல்) ஒரு கவிதை எழுதியிருந்தார். 'ஓடாதீர்' என்ற பாடலைப் படித்த ஒரு எழுத்தாளர் மளிகைக்கடை மாணிக்கம் செட்டியார் என்ற புனைபெயரில் 'ஓடும் ஓய், உம்மால் ஒரு மண்ணும் ஆகாது'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்று புதுமைப்பித்தன் பாடலுக்கு ஒரு 'எதிர்வெட்டுப் பாடல்' எழுதி 'கலாமோஹினி' என்ற பத்திரிகையில் வெளியிட்டார். அந்தச் செட்டியாருக்கு மீண்டும் 'கிராம ஊழியன்' மூலம் புதுமைப்பித்தன் அளித்த பதிலே 'உருக்கமுள்ள வித்தகரே' என்ற பாடல். இந்நிலையில் அன்றைய (இலங்கை) மறுமலர்ச்சிக் குழுக் கவிஞர் 'சாரதா'வும் அந்த மளிகைக் கடை மாணிக்கச் செட்டியாருக்கு எதிர்வெட்டுப் பாடலொன்றை எழுதி கிராம ஊழியனில் வெளியிட்டார். விரிவஞ்சி முன்னையோர் கவிதைகளை இங்கு எடுத்தாள்வதைத் தவிர்த்து, சாராதாவின் கவிதையின் ஒரு பகுதியை மட்டும் தருகின்றேன்.

## எச்சரிகை

(ஓடாதீர்! .... என்று சொல்லிக் கொண்டு வந்த புலவனை 'ஓடும் ஓய்! ' என்று நையாண்டி பண்ணுகிறான் மளிகைக் கடை மாணிக்கச் செட்டி. பார்த்துக் கொண்டிருந்த முத்துக் கறுப்பண்ணனுக்கு அது பெரிய ஆத்திரத்தை மூட்டி விடுகிறது).

ஓய் காணும் ! வர்த்தகரே
உமக்கேனித் தலைக்கிறுக்கு?
நாய் போலக் குரைக்கின்றீர்
நல்லவரோ நீர் சொல்லும்?
நல்லதிஸ்ட வசத்தாலே
நாலு பணம் பெற்று விட்டீர்
கொள்ளையிட் டேழைகளைக்
குடி கெடுக்கும் மகாப்பிரபு!
வாழவழி சொல்லுகிறீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வர்த்தகரே, வாயடக்கும்
போலிகளுக் கானைவிலை
போட்டு விற்கும் புண்ணியரே

புதுமைப்பித்தன் முற்குறிப்பிட்ட எதிர்வேட்டுப்பாடல், கவிதை எழுதுவதற்கும் செட்டியாரது வாணிபத்திற்குமிடையிலான தொடர்பின்மையைச் சுட்டிக்காட்டி, செட்டியாரை 'பெட்டியடிச் சொர்க்கத்தில் புகுந்துவிடும்' படி நையாண்டிபண்ண, மேற்குறிப்பிட்ட சாராதாவின் கவிதை செட்டியார் எவ்வாறு வர்த்தகராக உயர்ந்தார் என்பதையும் அவரது வர்த்தகம் நீண்டகாலம் நிலைத்து நிற்காது என்பதையும் எடுத்துரைப்பது மனங்கொள்ளத்தக்கது!

இன்னொரு சுவாரஸ்யமான விடயத்தையும் இறுதியாகக் குறிப்பிடலாம். ஈழத்து நவீன இலக்கிய உருவாக்கத்தில் 1940களில் 'மறுமலர்ச்சிக் குழு' வினருக்கு முக்கிய இடமிருந்தமை இலக்கிய ஆர்வலர் பலமருமறிந்த விடயமாகும். இக்குழுவினர் பலருக்கும் புதுமைப்பித்தனே ஆதர்ஸ புருஸராக விளங்கியவரென்பது சிலரறிந்த விடயமாகும். இக்குழுவினர், தமது சங்கத்திற்கு 'மறுமலர்ச்சிச் சங்கம்' என்ற பெரினைச் சூட்டுவதற்கு முன்னர் 'புதுமைப்பித்தர்கள் சங்கம்' என்ற பெயரினைச் சூட்டத் தீர்மானித்திருந்தனர் என்பது மிகச் சிலரே அறிந்த விடயமாகின்றது. சுருங்கக்கூறின், இருபதாம் நூற்றாண்டின் முக்கியமான ஆளுமைகளுள் முதன்மையிடம் பெறுகின்ற பாரதியார் இலங்கை நவீன இலக்கியத்தில் - சிறப்பாக நவீன கவிதையில் ஏற்படுத்திய பாதிப்புடன் ஒப்பிடும்போது, புதுமைப்பித்தன் என்ற ஆளுமை ஏற்படுத்திய பாதிப்பு ஒப்பீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ரீதியில் குறைவானது என்பதும் அதேவேளையில் அது புறக்கணிக்கக் கூடியதல்லவென்பதும் இதுவரை கூறியவற்றிலிருந்து புலப்படுகின்றதெனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. பாரதியாருக்கு 125ம் ஆண்டு

1. பாரதியாருக்கு 125வது நினைவு தினமும் புதுமைப்பித்தனுக்கு 100வது நினைவு தினமும் சுந்தரராமசாமிக்கு 75வது நினைவு தினமும் சென்ற வருடம் தமிழ்நாட்டில் கொண்டாடப்பட்டன. அவ்வேளை அதனை ஒட்டி உலக இலக்கியக் கருத்தரங்கு ஒன்றும் காலச்சுவடு அறக்கட்டளையினால் நடத்தப்பட்டது. அத்தருணம் இவ்ஆய்வாளரால் அங்கு வாசிக்கப்பட்டு நூலுருப் பெறாத கட்டுரையே (சுந்தரராமசாமி நீங்கலாக) இங்கு இடம்பெற்றுள்ளது.
2. மறுமலர்ச்சி, யாழ்ப்பாணம், 1946 யூன்- யூலை ப.12.
3. பாரதி, கொழும்பு, 1946 ஜனவரி, ப.2.
4. பாரதி, மண்டூபு 1948 வைகாசி - ஆனி, ப.1.
5. பாரதி கவிதைச்சுவர். தொகுப்பு கமலினி செல்வராசன் தேசியகலை இலக்கியப்பேரவை, சவுத் விஜன், சென்னை,2000.
6. படி, மட்டக்களப்பு, 1994 மே, ப.3
7. மே.கு சஞ்சிகை.
8. விரிவான விளக்கத்திற்குப் பார்க்க : இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செ.யோகராசா, குறிஞ்சி நிலா பதிப்பகம், 2003.

# இந்துக்களின் கணித வானியற்புலமை மரபில் பிரம்மகுப்தர் - ஒரு நோக்கு

சயனொளிபவன் முகுந்தன் BA (Hons)MA
இந்துநாகரிகப்பிரிவு கிழக்குப்பல்கலைக்கழகம்

இன்றைய காலகட்டத்தில் எத்துறைசார் அறிவும் விஞ்ஞானபூர்வமான அணுகு முறையினையும் அறிவியற்கருத்துக்களின் செழுமையினையும் கொண்டு அமைய வேண்டியது எதிர்பார்ப்புக்குரியது. இந்து நாகரிக மரபில் அண்டவியல், வானியல், இயற்பியல், இரசாயனவியல், மருத்துவம் போன்ற முறைசார் அறிவியற் புலங்களும், இரசவாதம், சோதிடம், குண்டலினியோகம், காயசித்தி, உபாயங்கள் போன்ற முறைசாரா அறிவியற் புலங்களும் காலாதிகாலமாகக் காத்திரமான வளர்ச்சியைப்பெற்று வந்துள்ளன. அந்த வகையில் இந்துப்பண்பாட்டு வரலாற்றில் வானியல் கணிதம் ஆகிய துறைகளின் வளர்ச்சிப்போக்கை கி.பி.6ம் நூற்றாண்டில் பிறந்த பிரம்மகுப்தா என்ற பண்டைய கணித வானியல் வல்லுனரின் படைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்துக்கள் எண்கணிதம், அட்சரகணிதம், திரிகோணகணிதம் ஆகியவற்றுடன் வானியல், சோதிடம் ஆகியவற்றிலும் கணிப்பீட்டு முறைகளை உபயோகித்து வந்துள்ளார்கள் என்பதனை வரலாறு பேசுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனிதனின் அறிவு வளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டம் அவன் எண்களின் தேவையை உணர்ந்ததாகும். இந்துக்களைப் பொறுத்தவரையில் இலக்கங்களை பயன்படுத்த அறிந்தமை மட்டுமன்றி பூச்சியத்தின் பெறுமதி அதன் பிரயோகமுறைகள் பற்றியும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே சிந்தித்துள்ளமை இன்றைய அறிவியலாளர்களையும் வியந்து பாராட்டவைக்கிறது. இந்த சூனியக்குறியீடே(0) தசமதான முறைக்கு வழிவகுத்தது.

எண்களிற்கு இடமதிப்பை உண்டாக்கிய இந்த தசமான முறைமை (Decimal System) இந்துக்கள் கண்டறிந்த கணிதவியல் உத்தி என்பதனை பல்வேறு கணித அறிஞர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அந்தவகையில் டீ.டீ.Dutta இதனைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"The Hindus adopted the decimal scale very early. The numerical language of no other nation is so scientific and has attained a state of Perfection as that of the ancient Hindus. In symboilism they succeeded with ten signs to express any number most elegantly and simply. It is this beauty of the Hindu numerical notation which attracted the attention of all the civilized people of the world and charmed them to adopt it."[1]

**வைதீக இலக்கிய மரபு**

இந்துக்களின் பண்டைய கணித வானியலறிவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆரம்பநிலைப்போக்குகளை வேத இலக்கியங்களில் அடையாளங்காண முடிகிறது. குறிப்பாக சுல்பசூத்திரங்கள் யாககுண்டங்களை அமைக்கும் விதிகளைக் குறிப்பிடுகின்ற போது பல்வேறு அளவுப்பிரமாணங்கள் பற்றியும் வடிவங்கள் பற்றியும் விவரித்துள்ளன. எடுத்துக்காட்டாக மகாவேதி என்பது 972 சதுர அங்குலங்களைக் கொண்ட ஒரு சரிவகம், அது 36 அங்குல உயரமும் 24, 30 அங்குல நீளமும் உடைய இணைப்பக்கங்களையும் கொண்டது என்றும் அஸ்வமேதிக வேதிகையானது மகாவேதிகையைப்போல இருமடங்கு பரப்புடையது என்றும் சுல்பசூத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. சதுரம், வட்டம் ஆகிய எளிய யாகவேதிகை அமைப்புக்களைத் தவிர இவற்றை வெவ்வேறு வகையில் சேர்த்து பலவகை வடிவங்களில் வேதிகைகளை அமைக்கவல்ல அறிவையும் வேதகால மக்கள் பெற்றிருந்தனர்.

இதற்காக கேத்திர கணிதத்தில் தேர்ச்சி பெற்ற அக்கால கணிதவல்லுனர்கள் கீழ்வரும் கணிப்பீட்டு உத்திகளை அறிந்திருந்தனர்.

1. ஒரு சமகோணத்தைத் தவறில்லாமல் அமைத்தல்.
2. சதுரத்திற்குச் சமனான வட்டத்தையும், வட்டத்திற்கு சமனான சதுரத்தையும் அமைத்தல்.
3. விகித பரப்பளவைக் கொண்ட ஒரு ஒழுங்கான பல்கோணி (Polygon) அமைப்பை உண்டாக்குதல்.
4. இரண்டின் வர்க்கமூலம் (2) முதலானவற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கண்டு பிடித்தல்.

மேலும் பலிபீடங்களைச் சரியான திசை நோக்கி அமைப்பதற்காகத் திருத்தமான சமகோண அமைப்புச் செவ்வகத்தின் தன்மை கண்டறியப்பட்டது. ஒரு செவ்வகத்தின் மூலைவிட்டத்திற்கும் அடுத்துள்ள இருபக்கங்களுக்கும் ( 5, 4, 3), ( 13, 12, 5), ( 17, 15, 8), ( 25, 24, 7), ( 37, 35, 12) என அளவுகள் இருக்கலாம் என்று சுல்பசூத்திரங்கள் கூறுகின்றன. 2 இவற்றையே பைதகரஸ் எண்கள் என மேலைநாட்டுக் கணிதம் எடுத்தாள்வதும் கவனிக்கத்தக்கது. யசுர்வேத சம்வறிதை, தைத்திரிய சம்வறிதை வாஜசனெயி சம்வவறிதை போன்றவை மிகப்பெரிய எண்களைப் பதின்மான முறைப்படி 10ன் மடங்குகளாகக் கூறின.

| | |
|---|---|
| 10 | தச |
| $10^2$ | சத |
| $10^3$ | சகஸ்ர |
| $10^4$ | அயுத்த (Ayutha) |
| 105 | நியூத (Niyuta) |

இவ்வாறாக $10^{19}$ வரை குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்வறிதை இலக்கியங்களில் பின்னங்கள் பற்றியும் குறிப்புக்கள் உண்டு.

அ-து ½ ஸ்ரீ அர்த்த
¼ ஸ்ரீ பாத
1/8 ஸ்ரீ சபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வானியலைப் பொறுத்தவரையிலும் வேதங்களில் ஆழமான ஆய்வுச் சிந்தனைப் போக்குகளை அவதானிக்க முடியும். குறிப்பாக ரிக்வேத 1ம் மண்டலம் 140 - 164 வரையிலான சூத்தங்கள் இந்துவானியல் மரபில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உடையன. குறிப்பாக இதன் இறுதிச் சூத்தமான அஸ்யவாமஸ்ய சூத்தத்தை வேதகால வானியலின் அத்திவாரம் என்று பேராசிரியர் ஆர்.வி.வைத்யா கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது. [3]

மேலும் அதர்வ வேதத்தில் ஔை.8.2ல் நட்சத்திரங்கள் 28(அஷ்டவிம்சா) எனக்குறிப்பிட்டமை கவனிக்கத்தக்கது. இவை மனித வாழ்வியலில் செல்வாக்குச் செலுத்துவன என்ற சோதிடவியல் உண்மையை

" நல்ல சக்தி வாய்ந்த இருபத்தெட்டே எண்ணை இலாபமடையச் செய்வாயாக"

என அதர்வ வேதச் சுலோகம் அடையாளங்காட்டி நிற்கிறது.

இந்திய வானியலின் மிகப்பழைய அறிவியற் பிரமாணமாகக் கருதப்படும் ஜோதிடம் (வேதாங்கம்) கி.மு 1150 அளவில் இலகத ரிஷியினால் இயற்றப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

பபிலோனிய இராசி முறைமை சூரியனை அடிப்படையாகக் கொண்டு (Zodiac system) அமைக்கப்பட்டமை போன்றே வேதகால இந்துக்கள் சந்திரனை அடிப்படையாக கொண்டு இராசி முறையை அமைத்தனர். வேத காலத்தில் சந்திரனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அடிப்படையாக வைத்து மாதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டன. இதனால் சந்திரனுக்கு **"மாசக்கிருத்தா"**(மாதங்களை உருவாக்குபவர்) என்ற பெயரும் வழங்கப்பட்டது.

மேலும் கோள்கள் பற்றிய பெயரீடுகளையும் அவற்றின் விபரங்களையும் வேத காலந்தொட்டே இந்துக்கள் நன்கறிந்திருந்தனர். எடுத்துக்காட்டாக தைத்திரிய பிராமணத்தில்

"வியாழன் உதிக்கும் போது பூச நட்சத்திரத்திற்கு முன்புறம் இருந்தார்"

(தைத்திரிய பிராமணம் 1.1.5 ) எனக் கூறப்பட்டமை கவனிக்கத்தக்கது. உபநிடதங்களிலும் செவ்வாய், புதன்,வியாழன்,சுக்கிரன் ஆகிய கோள்கள் முறையே ஜீரண சக்திக்கும் , நரம்பு மண்டல இயக்கத்திற்கும் புத்திக்கும் ,சந்தான விருத்திக்கும் காரணமாக அமையக் கூடியவை என்ற சோதிட விஞ்ஞான உடற்கூற்றியல் உண்மை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## சித்தாந்த கால கட்டம்

வைதீக இலக்கியங்களைத் தொடர்ந்து இந்துக்களின் கணித வானியற் புலமை மரபு செழுமையுற்ற காலப்பகுதியாக சித்தாந்த காலகட்டம் அமைகின்றது. வட இந்தியாவில் கி.பி 4 - கி.பி 13 ம் நூற்றாண்டு வரை இக் கால கட்டம் நீள்கின்றது. இக் கால கட்டத்துள் தோன்றிய கணித வானியல் தொடர்பான சித்தாந்தங்களாகப் பின்வருவன கருதப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வராஹிமிஹிரரின் பஞ்சசித்தாந்திகா என அழைக்கப்படுகின்ற

1) பைதாகம சித்தாந்தம்
2) ரோமக சித்தாந்தம்
3) பௌலிச சித்தாந்தம்
4) வசிட்ட சித்தாந்தம்
5) சௌர சித்தாந்தம் ஆகிய நூல்கள்

ப்ருஹத் சம்ஹிதை 1ம் ஆரியப்பட்டருடைய (5ம் நூற்றாண்டு) ஆரிய சித்தாந்தம் (ஆரிய பட்டீயம்) பிரம குப்பதரின் பிரம்மஸ் பூட சித்தாந்தம் (கி.பி 7), கந்த கடிய்கா பாஸ்கராச்சாரியருடைய (கி.பி12) கிரகக் கணிதம், கோளத்தியாய லீலாவதி போன்ற நூல்களை இவ்வகையில் குறிப்பிடலாம். வராஹிமிஹிரர் 1ம் ஆரியப்பட்டா ஆகியோரது படைப்புக்கள் தொன்மையானவை. சுருக்கமான சுலோகங்களில் விடயங்களை செறிந்துரைப்பவை இவர்களை அடுத்து இந்துக் கணித வானியற் புலமை மரபின் முக்கிய திருப்பு முனையாக மிளிர்பவர் பிரம குப்தரேயாவார். நவீன அறிவியலாளர்களால் பெரிதும் மதிக்கப்படுவதுடன் ஆங்கிலம் ,அரபு உள்ளிட்ட அனேக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட கணித வானியற் படைப்புக்களுக்கு சொந்தக்காரர் இவரேயாவார்.

## பிரம்ம குப்தர்

பிரம குப்தர் குஜராத்தின் அன்றைய புகழ் பெற்ற நகரான Bhillmalaவில் பிறந்தார். இவருடைய பிறப்பு கி.பி.598 என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொதுவாகக் கருதப்படுகின்றது.

இவருடைய தந்தையாரான ஜெயினுகுப்தாவும் அக்காலத்தில் ஓரளவு புகழ்பெற்ற வானசாஸ்திரியாக விளங்கினார் என்பதை அறிய முடிகின்றது.

பிரம குப்தாவும் மிக இளவயதில் இருந்தே கணிதத்திலும் ,வானியலிலும் மிகுந்த ஈடுபாடும் புலமையும் கொண்டிருந்தார். அக்காலத்தில் புகழ் பெற்ற வட இந்திய தலை நகரான உஜ்ஜைனியில் (அவந்தி) நிறுவப்பட்டிருந்த கணித, வானியல் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவராகவும் இவர் நெடுங்காலம் பதவி வகித்துள்ளார்.[4]

இந்தியாவில் நிறுவப்பட்ட வானியலை ஆராய்ச்சி நிலையங்களுள் காலத்தால் முற்பட்டதும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமான ஒன்றாக மேற்படி நிலையம் வரலாற்றாசிரியர்களால் கருதப்படுகின்றது. மேற்படி ஆராய்ச்சி மையத்திலேயே பிரம்ம குப்தாவுக்கு காலத்தால் முற்பட்டவரும் இந்திய கணிதவியல் மற்றும் வானியறிவியல் மரபின் முன்னோடிகளுள் ஒருவருமான வராஹிமிஹிரரும் தலைவராகப் பணியாற்றியிருந்தார் என்பதும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

## பிரம்ம குப்தாவின் படைப்புக்கள்

இவருடைய இரண்டு பிரதான நூல்கள் இந்துக்களுடைய கணித வானியல் மரபிற்குச் செழுமை சேர்க்கின்றன.

அவையாவன 1) Brahmasphuta siddhnta



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதன் வட மொழிப் பொருளமைதி – பிரபஞ்சத்தின் திறப்பு என அமையும்.

2) Khandakhadyaka

கந்த காடிகா

**Brahmasphuta siddhmta** (பிரபஞ்சத்தின் திறப்பு)

பிரம குப்தரின் முக்கிய படைப்பாகக் கருதப்படுகின்ற இந்நூல் கி.பி 628 ல் இயற்றப்பட்டதாக அறியப்படுகின்றது. இந்நூலானது 25 அத்தியாயங்களை உடையது இவற்றுள் முதல் 10 அத்தியாயங்களும் இந்திய வானியலாராய்ச்சியைப் பொறுத்தவரையில் முதல் நிலை ஆராய்ச்சியாகவே கருதப்படுகிறது. .

மேற்படி பத்து அத்தியாயங்களும் அக்கால இந்தியக் கணித வானியற் புலமை மரபுக்கமைவாக 10 தலைப்புக்களாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அவையாவன,

1) கிரகங்களின் இடைய நெட்டாங்குகள் (Mean Longitudes)
2) உண்மை நெட்டாங்குகள் (True Longitudes)
3) கோள்களின் சுற்றுப்பாதையின் 3 சிக்கல்கள் ∴ பிரச்சினைகள் (Three Problems of diural rotation)
4) சந்திர கிரகணங்கள் (Lunar eclipses)
5) சூரிய கிரகணங்கள் (Solar eclipses)
6) உதயமும் அஸ்தமனமும் (Risings and settings)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

7) சந்திரக் கலை (The moons crescent)

8) சந்திரனின் நிழல் (The moons Shadow)

9) கோள்களின் பரஸ்பர சந்திப்பு (Conjuction of the planets with each other)

10) நிலையான நட்சத்திரங்களுக்கும் கிரகங்களுக்கும் இடையிலான சந்திப்பு (Conjunctions of the planets with the fixed stars)[5]

ஏனைய 15 அத்தியாயங்களும் முன்னைய விடயங்களுக்கான பிற்சேர்க்கைகளாக உள்ளன.

11 வது அத்தியாயம் வானியல் தொடர்பான தமக்கு முந்திய காலச் சிந்தனைகளின் தொகுப்பாக அமைகின்றது.

திறப்பு என்ற முற்கூறிய நூலில் பல்வேறு கணித செயன்முறைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ஒரு எண்ணிலிருந்து அதே பெறுமானத்தைக் கழிப்பதால் வருவது பூச்சியம் எனக் குறிப்பிட்டுள்ளதுடன் பூச்சியம் தொடர்பான சில விதி முறைகளை அவர் அன்றே துணிந்து குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.
அதாவது,

1) பூச்சியத்தை ஒரு எண்ணுடன் கூட்டினால் அல்லது ஒரு எண்ணிலிருந்து கழித்தால் அந்த எண் மாறாது இருக்கும்.

2) பூச்சியத்தை ஒரு எண்ணால் பெருக்கினால் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பூச்சியமாகும்.

12 வது அத்தியாயம் இதே மாதிரியாகக் கணிதம் தொடர்பான விடயங்களின் தொகுப்பு முயற்சியாக அமைகின்றது.

அடுத்து வரும் 5 அத்தியாயங்களும் 7வது அத்தியாயத்தின் பிற்சேர்க்கைகளாக அமைந்துள்ளன.

18வது அத்தியாயமானது அட்சர கணித முறைகளும் அத்துடன் தொடர்புடைய சமன்பாடுகளைப் பற்றியும் விபரிப்பதாக உள்ளது. 19 வது அத்தியாயம் நேரக்கணிப்பீடு,காலதத்துவம் பற்றி ஆராய்கின்றது.

20 வது அத்தியாயத்தில் நீட்டலளவை முறைகள் பற்றிய விபரங்கள் உள்ளன.

21 வது அத்தியாயம் கோள்கள் பற்றி மேலோட்டமாக விபரிக்கின்றது.

22 வது அத்தியாயத்தில் கணிப்பீட்டுச் செயன் முறைகளுக்கு உபயோகிக்கக் கூடிய கருவிகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

23 வது அத்தியாயம் ஒரு சாராம்ச விளக்கத்தை (வானியல், கணிதம்) கொண்டிருக்கின்றது.

24,25 ம் அத்தியாயங்களில் கணிதத்திலும் வானியலிலும் பயன்படுகின்ற தரவு அட்டவணைகள் இடம் பெற்றுள்ளன.

"இந் நூலில் குறிப்பாகப் 12வது அத்தியாயமான **"Ganitadhyauah"**(கணிதாத்தியாய) விலும் 18வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தியாயமான **Kuttadhayah** விலும் முறையே பேசப்படுகின்ற எண்கணிதம் மற்றும் அட்சர கணித முறைகள் நவீன கணித முறைமைகளுக்கான முன்னோடி வழிகாட்டிகள் என்பதில் ஐயமில்லை".[6]

பிரம்ம குப்தாவின் எண்கள் பற்றிய விளக்கமும் தனது சமகால கணித வல்லுனர்களை விடவும் விஞ்சியதாகவே உள்ளது. இவர் தனது பிரபஞ்சத்தின் மேலும் இவர் எண்கணிதத்தில் நேர், மறை எண்கள் அவற்றின் செயல் முறைகள் பற்றியும் பூச்சியத்துடன் அவை இடைவினை செய்யும் போது ஏற்படும் பெறுமானங்கள் பற்றியும் அன்றே சிந்தித்துள்ளார்.

குறிப்பாக ஒரு எண்ணிலிருந்து அதே பெறுமானத்தைக் கழிப்பதால் வருவது பூச்சியம் எனக் குறிப்பிட்டுள்ளதுடன் பூச்சியம் தொடர்பான சில விதி முறைகளை அவர் அன்றே துணிந்து குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.
அதாவது,

1) பூச்சியத்தை ஒரு எண்ணுடன் கூட்டினால் அல்லது ஒரு எண்ணுலிருந்து கழித்தால் அந்த எண் மாறாது இருக்கும்.
2) பூச்சியத்தை ஒரு எண்ணால் பெருக்கினால் அது பூச்சியமாகும்.

மேலும் இவர் எண்கணிதத்தில் நேர், மறை எண்கள் அவற்றின் செயல் முறைகள் பற்றியும் பூச்சியத்துடன் அவை இடைவினை செய்யும் போது ஏற்படும் பெறுமானங்கள் பற்றியும் அன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிந்தித்துள்ளார்.

அந்த வகையில் நேர் எண்களை செல்வம்/ அதிஸ்டம் என்றும்(Fortune) மறைப்பெறுமானத்தை கடன் ஏழ்மை(Debt) என்றும் குறிப்பிட்டுள்ள பிரம குப்தர் அவை தொடர்பாகப் பின்வரும் விதிமுறைகளை குறிப்பிட்டுள்ளார். அவருடைய வடமொழி சுலோகங்களைப் புகழ் பெற்ற கணிதப் பேராசிரியரான Mac Tutor பின்வருமாறு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

- A debt minus zero is a debt
- A Fortune minus zero is a fortune
- Zero minus zero is a zero
- A debt Subtracted from zero is a fortune
- A fortune subtracted from zero is debt
- The product of zero multiplied by a debt or fortune is zero
- The product or quotient of a debt and a fortune is debt.
- The product or quotient of a fortune and a debt is a debt.[7]

அதாவது,

1) ஒரு கடனிலிருந்து (மறை) பூச்சியத்தைக் கழித்தால் மறை(கடன்) எஞ்சும்
2) ஒரு செல்வம் / அதிஸ்டத்தில் இருந்து (நேர்) பூச்சியத்தைக் கழித்தால் செல்வம் (நேர்) எஞ்சும்.
3) பூச்சியத்திலிருந்து பூச்சியத்தை கழித்தால் பூச்சியம் எஞ்சும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

4) பூச்சியத்திலிருந்து கடனை (மறை கழித்தால் செல்வம் /அதிஸ்டம்)

நேர் எஞ்சும்.

0 – (-) = +

5) பூச்சியத்திலிருந்து செல்வத்தை கழித்தால் கடன் எஞ்சும்

0 – (+) = (-)

6) ஒரு கடனை (மறை) அல்லது ஒரு செல்வத்தை பூச்சியத்தால் பெருக்கினால் வருவது(நேர்) பூச்சியம்

7) இரண்டு செல்வங்களின் பெருக்குத் தொகையும் செல்வமே (நேர்)

8) இரண்டு கடன்களின் (மறை ) பெருக்குத் தொகை செல்வமாகும் (நேர்)

**(-) X (-) = (+)**

9) ஒரு செல்வத்தையும் ஒரு கடனையும் பெருக்கினால் வருவது கடனே

**(+) X (-) = (-)**

பிரம குப்தர் எண் கணிதத்தில் பூச்சியத்தால் பிரிப்பது பற்றியும் விளக்க எத்தனித்துள்ளார்.

"அதாவது நேர் அல்லது மறை எண்கள் பூச்சியத்தால் பிரிக்கப்படும் போது பெறப்படுவது பூச்சியத்தைப் பகுதி எண்ணாக கொண்ட பின்னமாகும். பூச்சியத்தை மறை அல்லது நேர் எண்ணால் பிரிக்கப்படும் போது பெறப்படுவது பூச்சியம் அல்லது பூச்சியத்தைத் தொகுதி எண்ணாகவும் பிரிக்கின்ற எண்ணைப் பகுதி எண்ணாகவும் கொண்ட பின்னமாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பூச்சியத்தை பூச்சியத்தால் பிரிக்கும் போது வருவது பூச்சியமே"
{"Positive or negative numbers when divided by zero is a fraction the zero as denominator"
Zero divided by negative or positive numbers is either zero or is expressed as fraction with zero as number ator and the finite quantity as denominator"
"Zero divided by zero is zero"}

ஆயினும் பூச்சியத்தைப் பூச்சியத்தால் பிரிக்கும் பொழுது கிடைப்பது பூச்சியமே எனக் குறிப்பிடும் இடத்தில் இவர் தவறு செய்கின்றார். ஆயினும் அன்றைய காலகட்டத்தில் எண் கணிதத் துறையைப் பொறுத்தவரையில் இலக்கங்களுக்கிடையிலான நேர் மறை பெறுமானங்கள் தொடர்பான இவரது ஆய்வு முயற்சிகளும் பூச்சியம் பற்றிய இவருடைய சில கணிப்பீடுகளும் பாராட்டுதற்குரிய ஒரு முன்னோடி முயற்சியே எனலாம்.[8]

இவருடைய பெருக்கல் செயன் முறைகளினை நோக்கும் போது அன்றே இவர் இலக்கச்சுட்டி முறைமையை (1ம் இடம்,10 இடம் ,100 இடம்) தற்காலக் கணிதவியல் நடைமுறையைப் போன்றே முழு நிலையில் கையாண்டுள்ளார். "பிரபஞ்சத்தின் திறப்பு" என்ற நூலில் இவர் கையாண்ட 3 வழிமுறைகள் பின் வருமாறு.

**முதலாவது வழி முறை : -**

இம் முறை பிரம குப்தரால் **Gomutrika** எனக் காட்டப்பட்டது. 235 ஒ 264 என்ற பெருக்கல் செயன்முறையை முதலாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வழிமுறையில் பிரமகுப்தர் பின்வருமாறு தீர்கின்றார்.

2 2 3 5
6 2 3 5
4 2 3 5

2 → 2 3 5
6 2 3 5
4 2 3 5

4 7 0

2 2 3 5
6 → 2 3 5
4 2 3 5

4 7 0
1 4 1 0

2 2 3 5
6 2 3 5
4 → 2 3 5

4 7 0
1 4 1 0
9 4 0

2 8 2 0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2 3 5 ← 4

2 3 5 6 ↓

2 3 5 2

---

9 4 0

**இரண்டாம் செயன் முறை :-**

2 3 5 4

2 3 5 ← 6 ↓

2 3 5 2

---

9 4 0

1 4 1 0

2 3 5 4

2 3 5 6 ↓

2 3 5 ← 2

---

9 4 0

1 4 1 0

4 7 0

---

2 8 2 0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | | | |
|---|---|---|---|---|
| | 2 | 3 | 5 | |
| | 9 | 4 | 0 | 4 |
| 1 | 4 | 1 | 0 | 6 |
| | 4 | 7 | 0 | 2 |
| 2 | 8 | 2 | 0 | |

**மூன்றாவது செயன் முறை :-**

பிரம்ம குப்தரால் எடுத்துக்காட்டப்பட்ட இன்னொரு எண்கணித முறைமையானது வர்க்க மூலம் காண்பதற்கான வழிமுறையாகும். இவருடைய அச் செயன்முறையானது Newton- Raphson உடைய Interative Formula விற்கு சமமானது என்று இன்றைய கணிதவியலாளர்களால் மெச்சப்படுகின்றது.[10]

மேலும் இவர் இருபடிச் சமன்பாடுகளைத் தீர்த்தல் பற்றி அறிந்துள்ளமை மட்டுமின்றி Indeterminate பற்றி அறிந்துள்ளமை மட்டுமின்றி Indeterminate Equations அதாவது முதல் நிலை முடிவுபெறாச் சமன்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் சிந்தித்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதாரணம் :- $ax + c = by$

இதனை பிரம்ம குப்தா தொடரான பின்னங்களைப் பாவித்து முழுமையாகத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை கண்டறிந்தார்.

மு.மஜீம்தார் தனது கட்டுரை ஒன்றில் பிரம்மகுப்தாவினுடைய **Brahmasphuta- siddhanta** (பிரபஞ்சத்தின் திறப்பு) என்ற நூலில் கூறப்பட்ட சமஸ்கிரத வடிவத்தை அதன் இன்றைய ஆங்கில மொழி பெயர்ப்பிலும் அட்சர கணித குறியீடுகளிலும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்.அவர் கருத்துப்படி

பிரம்ம குப்தா

$$ax^2 + c = y^2$$

$$ax^2 - c = y^2$$

போன்ற இருபடிச் சமன்பாடுகளைத் தீர்த்துள்ளதுடன் $8x^2 + 1 = y^2$ என்ற சமன்பாடுகளைத் தீர்த்து அதன் தீர்வுகளாக $(x, y) = (1,3), (6,17), (35, 99), (204,577), (1,189, 3,363)$ எனத்தந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இது போன்றே $11x^2 + 1 = y^2$ என்ற சமன்பாட்டிற்கு பிரம்ம குப்தா பின்வரும் தீர்வுகளைப் பெற்றார்

$$(x, y) = (3,10)\ (161/5, 534/5)$$

மேலும் $61x^2 + 1 = y^2$ என்ற சமன்பாட்டை தீர்த்து

$x = 226153980$,

$y = 1766319049$ என்பவையே இதன் குறைந்த பெறுமானம் எனத் துணிந்துள்ளார்.[11] பிரம்ம குப்தா அண்டவியல் தொடர்பாகவும் தனது சிந்தனைகளை முன்வைத்துள்ளார். பிரம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குப்தர் நிலையான புவிக்கோளத்தின் இருப்பை நம்பியதுடன் ஒரு வருடம் என்பது 365 நாட்கள் 6 மணித்தியாலங்கள் 5 நிமிடங்கள் 19 விநாடிகள் கொண்டது எனத் தனது "பிரபஞ்சத்தின் திறப்பு" என்ற நூலில் கணித்துள்ளமை கவனிக்கத்தக்கது. இவருடைய இரண்டாவது நூலான **கந்த காடிகா (Khandakhadyaka)** என்ற கணித வானியல் நூல் இவ்விடங்களை ஆழமாக விளக்குகின்றது. இந்நூலானது கி.பி 665 ல் எழுதப்பட்டது என்றும் அப்போது பிரம்ம குப்தர் அறுபத்தேழு வயது நிரம்பியவராக இருந்தார் என்றும் அறியப்படுகின்றது. கந்தகாடிகா என்ற மேற்படி படைப்பானது எட்டு அத்தியாயங்களை உடையது இந்நூலிலும் கோள்களின் நிலையங்கள் சுற்றுப்பாதைகளில் ஏற்படும் பிரச்சினைகள், சந்திர கிரகணம், சூரிய கிரகணம், சூரிய உதயம் ,அஸ்தமனம், சந்திரக் கலைகள், கோள்களின் சந்திப்புக்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. மேலும் இந்நூலில் பிரமகுப்தா சைன்களின் பெறுமானத்தைத் துணிவதற்காக பயன்படுத்திய சூத்திரம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது. எனினும் இதனை இடைச் செருகல் கருதுவாரும் உளர்.[12]

பிரம்ம குப்தருடைய பிரபஞ்சத்தின் திறப்பு, கந்த காடிகா ஆகிய இரண்டு நூல்களும் முறையே சிந்த்ஹித், அர்கந் என்ற பெயர்களுடன் அரேபிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. மேலும் இவருடைய நூல்களை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் ஸ்ரீபதி என்பவர் **"சித்தாந்த சேகரா"**என்ற வானியல் சாஸ்த்திரமொன்றையும் வெளியிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இவ்வாறாகத் தனக்கு முற்பட்டகாலக் கணிதவானியற் புலமை மரபுகளை நல்லவையகத்திட்டு நவைபுறத்திட்டுப் பேணியது மட்டுமன்றி இத்துறைகளில் பல புதிய இலக்குகளை அடைவதற்கான வழிமுறைகளை தனது படைப்புக்களினூடாக எதிர்கால சந்ததியினர்க்கு அடையாளங் காட்டியவர் என்றவகையிலும் பிரம்மகுப்தர் நினைவுகூரப்படவேண்டியவரே.

**உசாவியவை – அடிக்குறிப்புக்கள்**


1) Dutta ,B.B, **Indian Historical Quarterly ,Vol -3** New Delhi , °.530 – 540

2) சுந்தரம்,இராம (பதிப்பாசிரியர்கள்), கிருட்டின மூர்த்தி ,சா **காலந்தோறும் அறிவியல் தொழில் நுட்பம்**
அனைத்திந்திய அறிவியல் தமிழ் கழகம், தஞ்சாவூர் ,1998 ,பக் 52

3) சற்குணதாஸ் ,சாமி, **புராதன இந்தியாவின் அறிவியல் மேதைகள்**
தமிழ்க்கடல் பதிப்பகம் ,சென்னை , 1998 ,பக் 71

4) **Biography in Encyclopaedia Britannica(Available on the web)**

5) Prakash Savasvathi ,S.S
**A Critical Study of Brahmagupta and his works : The most distinguished Indian astronomer and mathematician of the sixth century A.D** Delhi , c 1986 ,Page – 30 – 32

6) Araya, S.P
**On the Brahmagupta- Bhas kara equation,** math. Ed 8(1), 1991, Page 23-27




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

7) Mac, Tutor,
History of mathematics.
http://www-history. Mcs-st-andrews,
ac.u.k/biographies/Brahmagapta.html
8) 'O'Connor J.J, & Robertson , E.F, **Brahmagubta (web)**
9) I frah;G;
**A, Universal history of numbers :**
**From pre history to the invention of the computer ,**
London , 1998
10) Majumder ;P.K.
A Rational of Brahmaguptha's method of solving ax + C = by
Indian(J) ,History of Science(16) 1981 , P – III – 117
11) Majumbar ; P.K ,Ibd.
12) Gupta ; R.C
**Munivara's Modification of Brahmagupta's rule for Second order interpolation , Indian ,J History of Science 14(1) ,** 1979 , 66 – 72


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அம்மன் வழிபாடு சார்ந்த வாழ்வியலினடியாக இயங்கும் இலக்கியப் பாரம்பரியமும் - அதன் சமூக முக்கியத்துவமும்

த.சேரலாதன்
உதவி விரிவுரையாளர் - மொழித்துறை

இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் நீண்ட காலமாகவே எழுத்து இலக்கியப் பாரம்பரியத்துக்கே முதன்மையளித்து வந்துள்ளனர். அதேவேளையில் எழுத்து இலக்கிய பாரம்பரியத்தை விட தொன்மையானதும் சிறப்பு மிக்கதுமான இலக்கியப் (வாய்மொழி) பாரம்பரியம் நிலவி வந்துள்ளமையும் அதன் முக்கியத்துவம் அண்மைக்காலமாய் உணரப்பட்டு வந்துள்ளமையும் அண்மைய ஆராய்ச்சிப் போக்குகள் தெளிவாகக் காட்டுகின்றன.

வாய்மொழி இலக்கிய மரபு என்பது எழுதப்படாமல் வாய்மொழியாக தனியொருவரால் அல்லது குழுவினரால் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டு வரும் இலக்கியச் செயற்பாடுகளாகும். இவை அளிக்கை முறையுடன் தொடர்புபட்டவை. இவற்றில் முக்கிய பங்கு வகிப்பது வாய்மொழிப் பாடல்களாகும். வாய்மொழிப் பாடல்கள் தாலாட்டு, ஒப்பாரி, தொழிற்பாடல், விளையாட்டுப்பாடல் போன்ற பல வகையுடையதாய் விளங்குகின்றது.

வாய்மொழிப் பாடல்கள் ஆசிரியர் பெயர் தெரியாதவை. பொதுமையான வழக்கினால் குழுநிலையிலோ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தனிப்பட்ட முறையிலோ பயில் நிலையில் இருப்பவை. உதாரணமாக தாலாட்டுப் பாடலைக் கூறலாம். குழந்தையைத் தூங்க வைக்கவேண்டிய தேவைகருதி ஒரு தாய் பாடும் பாடலே தாலாட்டுப் பாடலாகும். ஒருவித தாளக்கட்டுமானம், இசை என்பவற்றுடன் இவை பாடப்படும். (அம்மன் சடங்குகளில் பாடப்படும் தாலாட்டுப் பாடல் இதிலிருந்து வேறுபட்டது)

"ஆராரோ ஆரிரரோ
ஆரடித்து நீயழுதாய்
அடித்தாரைச் சொல்லியழு...." எனப்பாடும் போது சந்தம், தாளம், இசை என்பவற்றுடன் பாடல் வெளிப்படும்.

வாய்மொழிப் பாடல்கள் பல தளங்களில் செயற்பட்டு வருவதனை அவதானிக்கலாம். ஆசிரியர் பெயர் தெரியாத தாலாட்டுப் பாடல்கள் என்பது ஒருவகை. ஆசிரியர் பெயர் தெரிந்த (அக்கரைப்பற்று மொட்டை வேலாப்போடியாரின்) பாடல்கள் மற்றொரு வகை. ஆசிரியர் பெயர் தெரிந்தும் தெரியாமலும் பொதுமக்களுக்காக பாடப்படுவதான சமயச் சடங்குப் பாடல்கள் இவற்றுள் இன்னொரு வகையாகும். இச்சமயச் சடங்குப் பாடல்களில் அம்மன் சடங்குப் பாடல்கள் மிகுந்த முக்கியத்துவம் உடையதாகவும் கணிப்பிற்குரியதாகவும் விளங்குவன. இப்பாடல்கள் பற்றி அறிமுகம் செய்வதும் அது முக்கியமாவதற்கான சமூகக்காரணிகள் பற்றிய சிந்தனையைத் தூண்டுவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழில் கவனிக்கப்படாத இலக்கிய வகையான எழுத்து நிலைபெற்ற வாய்மொழிப் பாடல் மரபு (Semi oral) பற்றி கா.சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "எம்மிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எழுதப்பட்ட வாய்மொழியாக கையளிக்கப்படுகின்ற சில பாடல்கள் உள்ளன. எழுதப்பட்டு அச்சடிக்கப்பட்டு ஆனால் இவற்றினுடைய பயில் நிலையில் அவை பெரும்பாலும் வாய் மொழியாக கையளிக்கப்படுகின்றன. அல்லது துண்டுப் பிரசுரங்களாக விற்கப்படுகின்றன.." (சிவத்தம்பி. கா, தமிழில் கவனிக்கப்படாத ஒரு இலக்கிய வகை - எழுத்து நிலை பெற்ற வாய்மொழிப் பாடல்மரபு, 2002, ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு , தொகுப்பாசிரியர் - செ.யோகராசா)

இதனை மூன்றாவது வகையான இலக்கியப் பாரம்பரியம் என குறிப்பிடும் செ.யோகராசா, வாய்மொழிக்கும் எழுத்துக்குமிடைப்பட்ட பாரம்பரியமாக நிலவி வந்த வாய்மொழிப் பாடல்களை தொகுத்துள்ளார்.

தென்னாசியமரபில் வாய்மொழிக்கும் எழுத்துக்குமிடைப்பட்ட பாடல்கள் இயங்கி வருகின்றமையை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். வாய்மொழி இலக்கியத்திற்கும்(oral) செந்நெறி இலக்கியத்திற்கும்(literature) இடைப்பட்ட இம்மரபை, orature என அவர்கள் அடையாளப்படுத்தியுள்ளனர். இவ்வகையான ஆய்வு முறைகளை துணைக்கொண்டு அம்மன் சடங்குப் பாடல்களை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

அம்மன் சடங்குப் பாடல்கள் சில ஏடுகளிலிருந்து பதிப்பிக்கப்பட்டுள்ளன. சில - பதிப்பிக்கப்படாமல் கையெழுத்துப் பிரதிகளாக உள்ளன. ஆனால் இவை பெரும்பாலும் வாய்மொழியாகவே கையளிக்கப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அம்மன் சடங்குப் பாடல்கள் என்று அடையாளப்படுத்தப்படுபவை கண்ணகி, மாரி, கடல்நாச்சி, காளி, பேச்சி, திரௌபதை அம்மன் சடங்குகளின்போது பாடப்படும் பாடல்களைக் குறிக்கும். பிரார்த்தனைப் பாடல்கள், அகவல், தவநிலைப் பாடல்கள், தாலாட்டு, ஊஞ்சல், உலா, திருக்குளுத்தி, அம்மானை, வாழி, பள்ளு, துதி, புலம்பல் எனும் பலவகைப்பட்ட பாடல்களும் இவற்றுள் அடங்குகின்றன. இவை சடங்கு வேளைகளில் உடுக்கு அடித்து ஒருவித தாளலயத்துடன் பாடப்படுவதனையும் காணலாம். உதாரணமாகக் காவியப் பாடல்கள்

" தந்தனத நாதனத நாதனத நானா
தனனாத நாதந்த நாதந்த நானா
தந்தனத நாதனத நாதனத நானா
தனனாத நாதந்த நாதந்த நானா "

எனும் தாளத்திற்கு அமைவாக உடுக்கடித்து பாடப்படுவதனைக் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மகமாரிதேவி திவ்விய காரணி எனும் பெயரில் ச.கணபதிப்பிள்ளை தொகுத்து வெளியிட்ட சடங்குப் பாடல்களில் கண்ணகியம்மன் வழிபாட்டுக்குரிய 10 பாடல்களும் ஏனைய தெய்வங்களைப் பற்றிய 87 பாடல்களும் காணப்படுகின்றன. (கணபதிப்பிள்ளை.சி, 1971, மகமாரித்தேவி திவ்வியகரணி)

கண்ணகியம்மன் கோயில்களில் பாடப்படும் கண்ணகி வழக்குரை, திரௌபதையம்மன் கோயில்களில் பாடப்படும் பாரத அம்மானை என்பனவும் அம்மன் சடங்குடன் தொடர்புபட்ட பாடல்களாகக் கொள்ளப்படத்தக்கன. கண்ணகி வழக்குரை வி.சி.கந்தையா(1968) அவர்களாலும் பாரத அம்மானை சா.இ.கமலநாதன்(2002) அவர்களாலும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

வி.சி.கந்தையா அவர்களால் தொகுக்கப்பட்ட 'கண்ணகியம்மன் குளுத்திப்பாடல்கள் முதலிய நான்கு நூல்கள்'(1958) என்பது அம்மன் சடங்குப் பாடல்கள் என வெளிவந்த முதலாவது நூலாகும். இதுவரை அச்சில் வெளிவந்த பாடல்களைக் கொண்டு கண்ணகி இலக்கியங்களாக பதினைந்து பாடல்களை வ.சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார். அவை கண்ணகியம்மன் பிராத்தனை, தம்பிலுவில் கண்ணகியம்மன் காவியம், கண்ணகியம்மன் அகவல், அங்கணாமைக்கடவை கண்ணகியம்மன் காவியம், வற்றாப்பளை கண்ணகியம்மன் தோத்திரம், வற்றாப்பளை கண்ணகி காவியம், பட்டிமேட்டுக் கண்ணகியம்மன் காவியம், பட்டிநகர் கண்ணகியம்மன் மழைக்காவியம், பொற்புறாவந்த காவியம், தாண்டவன்வெளி கண்ணகியம்மன் காவியம், கண்ணகியம்மன் குளுத்திப்பாடல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஊர்சுற்று காவியம், கண்ணகி மழைக்காவியம், கண்ணகி ஊஞ்சல், கண்ணகி வழக்குரை என்பன.

(சிவசுப்பிரமணியம்.வ, பக்-45-46, 2004, கண்ணகி இலக்கிய மரபுகள், வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக, பதிப்பாசிரியர் - சித்திரலேகா மௌனகுரு)

வற்றாப்பளை, அங்கணாமைக் கடவை என்பன மட்டக்களப்பு மாநிலத்துக்கு வெளியே உள்ள இடங்களாகும்.
அவ்வகையில் மகமாரிதேவி திவியகரணியை அடிப்படையாகக் கொண்டு மாரியம்மன் இலக்கியமாக பின்வருவனவற்றை நாம் கொள்ளமுடியும். மாரியம்மன் தவநிலை, மாரியம்மன் அகவல், மாரியம்மன் காவியம், முத்துமாரி காவியம், சிங்காரபுர மாரியம்மன் காவியம், கல்லாற்று மாரியம்மன் காவியம், பூங்காவனத்தாய் தாலாட்டு, சிவமுத்துமாரி தாலாட்டு, மாரியம்மன் ஊஞ்சல், மாரியம்மன் திருக்குளுத்தி, மாரியம்மன் அம்மானைப்பாடல், மாரியம்மன் குளிந்தருளல், மாரியம்மன் வாழிப்பாடல் முதலிய 14 பாடல்களை மாரியம்மன் இலக்கியமெனலாம்.

காளியம்மன் இலக்கியமாக பராசக்தி அகவல், அங்காள பரமேஸ்வரி தோத்திரம், பத்திரகாளி அகவல், காளியம்மன் காவியம், காளியம்மன் பஞ்சகம், காளியம்மன் தாலாட்டு ஆகிய 6 பாடல்களைக் கூறலாம்.

திரௌபதி இலக்கியமாக திரௌபதியம்மன் துதி, திரௌபதியம்மன் தாலாட்டு, திரௌபதியம்மன் புலம்பல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திரௌபதியம்மன் காவியம் என்பவற்றைக் கூறலாம்.

கடல்நாச்சி இலக்கியமாக கடல்நாச்சி காவியம், கடல்நாச்சியம்மன் பள்ளு, கடல்நாச்சியம்மன் குளுத்தி, கடல்நாச்சியம்மன் உலா, கடல்நாச்சியம்மன் குளிந்தருளல் என்பனவும் இவற்றுடன் கறுப்பாகி அம்மன் தோத்திரம், மீனாட்சியம்மன் தோத்திரம், நவகோடிசக்தி தோத்திரம் என்பனவும் பேச்சியம்மன் துதி, பேச்சியம்மன் அகவல்கள் இரண்டு, பேச்சியம்மன் காவியம், பேச்சியம்மன் தாலாட்டு என்பனவும் மகமாரிதேவி திவிய கரணியில் வெளிவந்த அம்மன் சடங்குப் பாடல்களாகும். இவற்றுடன் இன்னும் பல அம்மன் சடங்குப் பாடல்கள் உள்ளமையும் அவை பதிப்பிக்கப்படாமலிருப்பதும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். படுவான்கரையின் அம்மன் சடங்கு நிகழிடங்களில் பாடப்படும் கணிசமான பாடல்கள் அவற்றுள் பெரும்பகுதியாகும்.

அம்மன் சடங்குப் பாடல்கள் மிகுந்த முக்கியத்துவமுடையதாக எம்மால் உணரப்பட்டுள்ளது. இவை அம்மன் சடங்கு வேளைகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில், சந்தங்களில் பாடப்பட்டு வருவதனைக் காணமுடியும். இதன் முக்கியத்துவத்தினை நோக்குவதற்கு இவை பாடப்படும் சந்தர்ப்பங்களுடன் இணைத்துப் பார்ப்பது பொருத்தமாகும்.

அம்மன் சடங்கு வேளைகளில் பாடப்படும் இப்பாடல்களை படித்து அனுபவித்து பார்க்கின்ற போது சக்தி வழிபாட்டினுடைய மகத்துவமும் சமூகவியல் முக்கியத்துவமும் புலனாகின்றது. உருவேற்றல், ஊர்வலம், திருக்குளுத்தி, தவநிலை போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



சந்தர்ப்பங்களில் அம்மன் சடங்கு வேளைகளில் பாடப்படுகின்ற இப்பாடல்கள் மிக முக்கியமானதாகவிருப்பதை அச் சூழலுடனும் சமூக அசைவியக்கத்துடனும் தொடர்புபடுத்தி விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

சந்தங்களோடு, தாள லயங்களோடு அமையப் பெற்ற இப்பாடல்கள் உடுக்கு, சிலம்பு, அம்மானைக் காய் ஒலிகளோடு இசைத்துப் பாடப்படுகின்றது.

சக்தி ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் வெவ்வேறு அம்மன் தெய்வங்களுக்கு ஏற்றவாறு அந்தந்தப் பெயரை தாங்கி நிற்கின்ற வகையில் இப்பாடல்கள் அமைந்திருப்பது மற்றுமொரு சிறப்பம்சம் ஆகும்.

வேவ்வேறு பெயர்களைச் சூடி நிற்கின்ற அம்மன் வழிபாட்டு ஆலயங்களில் அந்தந்த பெண் தெய்வங்களுக்குரிய வரலாறு, பெருமை, வழிபாட்டு முறை என்பவற்றை தெளிவாகப் பொறித்து இப்பாடல்கள் ஊர்சுற்று காவியமாகவும், உருவேற்றும் பாடல்களாகவும், அம்மன் சடங்கு வேளைகளில் பாடப்படும் அகவல்களாகவும், தவநிலைப் பாடல்களாகவும், குளுத்திப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாடல்களாகவும் வடிவமைக்கப்பட்டு அவற்றுக்கென்று இசைவடிவமும் கையாளப்பட்டு வருகின்றது.

இவ்வாறான பாடல்களுடன் தனித்தனியே ஒவ்வொரு அம்மனுக்குமுரியவாறு காவடிச் சிந்துப் பாடல்களும், கும்மிப் பாடல்களும், கரகப் பாடல்களும் காலத்துக்குக் காலம் இயற்றப்பட்டும் பாடப்பட்டும் வருகின்றது. பொதுவாக நோக்குகையில் கிராமப் புறங்களில் முற்றுமுழுதாக அம்மன் வழிபாட்டினையே கிராம மக்கள் உயிரோட்டமாக அனுபவிக்கும் சடங்குகளாக கொண்டிருக்கும் தன்மையானது அம்மன் வழிபாட்டில் மக்களின் முழுப் பங்குபற்றலையும் அதற்குத் துணை நிற்கும் பாடல்களின் முக்கியத்துவத்தினையும் உணர வைக்கின்றது.

உடுக்கையொலி, சிலம்பொலி, அம்மானைக்காயொலியுடனும் பாடப்படும் இப் பாடல்களின் நயம், தமிழின் சுவை என்பன பக்தி மார்க்கத்தில் மக்கள் மிகவும் லாவகமாக ஈடுபடத் துணை செய்கின்றன. அம்மன் சடங்குகால வேளைகளில் பூசை தவிர்ந்த ஏனைய நேரங்களில் திரௌபதையம்மனுக்குரிய வரலாறு விரிவான அம்மானைப் பாடலாகவும், கண்ணகியம்மனுக்குரிய வரலாறு வழக்குரைக் காவியமாகவும் பாடப்ப டுகின்றது. இத்துடன் மாரியம்மன் உற்பத்தியையும் குறிப்பிடலாம்.

அம்மன் சடங்குப் பாடல்களில் திரௌபதி இலக்கியம் மகா பாரதத்துடனும், கண்ணகி இலக்கியம் சிலப்பதிகாரத்துடனும் தொடர்பு பட்டுள்ளது. இப் பாடல்கள் பெண் தெய்வ ஆளுமைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வெளிப்படும் பாடல்களாக அமைந்துள்ளன. மகாபாரதம், சிலப்பதிகாரம் எனும் இலக்கியங்களில் சொல்லப்பட்ட கதைகளை அடியொற்றியும் வேறு சில தத்துவங்களுடனும் இவை பாடப்பட்டுள்ளமையைக் காணலாம்.

திரௌபதையம்மன் காவியத்தில் பெண் தெய்வ ஆளுமைகள் பின்வருமாறு வெளிப்படுகின்றது –

"...கார்மேவு கூந்தலைக் கன்னியவள் நெஞ்சிற்
கால்மிதித் தேயிரு கரங்கொடு முடித்தாள்"

"...காதல்செறி கீசகனி னுயிர்வதைத் தாயே
காசினியி லைவர்மனை யாகவந் தாயே".
கோதுகுழல் நெஞ்சில்மிதித் தேமுடித் தாயே
கோதையே நாரணன் தங்கையா னவளே"

"...நீறணிபு யத்திநீ மாயனது தங்கையே
நெருப்பினி லுதித்திடும் யாகபத் தினியே"
(கணபதிப்பிள்ளை.சி, பக்-136-137, 1971, மகமாரித்தேவி திவ்வியகரணி)

மாரியம்மன் காவியத்தில் பெண்தெய்வ ஆளுமைகள் பின்வருமாறு வெளிப்படுகிறது

"..கனகமக மேருதனை வில்லாய் வளைத்த நீ
காமனொடு தக்கன் சிரந்தனை ஒடித்த நீ...
முன்னமே வந்த நீ முப்புர மெரித்த நீ...
மூவர் தொழு மூர்த்தி நீ மூவுலகை யாண்ட நீ
பன்னுமறை வேதம் நீ...."
(கணபதிப்பிள்ளை.சி, பக்-20, 1971, மகமாரித்தேவி திவ்வியகரணி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அம்மன் வழிபாட்டில் மக்கள் பூரண நம்பிக்கை கொண்டிருப்பதுவும் மக்களுக்கு இப்பாடல்களுடன் அண்மித்த நெருக்க நிலையினை ஏற்படுத்துகிறது. பாடல்களைப் பாடும்போது (அம்மன் சடங்கு கால வேளைகளில் இவை ஒலிக்கும் போது) பேய் பிசாசுகள் (நோய் பிணிகளாலும் உளவியல் பிரச்சினைகளாலும் தாக்கப்பட்டவர்களை பேய்பிடித்தவர் எனக்கூறுவர்) விலக்கப்பட்டு கிராமங்களின் எல்லைப்புறங்களுக்கு விரட்டப்படுவதும் தங்களுடைய இன்னல்கள் அகன்று இன்பமாக வாழ்வை அனுபவிக்கத் தக்கதானதாக நம்பிக்கை தோன்றுவதாகவும் இம்மக்கள் உணருகின்றனர். இந்த அடிப்படையில் மக்கள் வாழ்வு இன்பமானதாய் அமைந்து விடுகின்றது.

ஆகமம் சார் வழிபாட்டு முறையில் காணப்படும் குருக்கள் எனும் முகவர் நிலைப்பட்ட வழிபாட்டு முறையிலிருந்து வேறுபட்டதும் மக்களின் கூடுதலான பங்குபற்றலுடன் தொடர்புபட்டதுமான தமிழரின் தனித்துவமான மரபுசார் வழிபாட்டு முறையாக சடங்கு வழிபாடு அமைந்திருப்பதுடன், சமஷ்கிருத மந்திரங்கள் கொண்டுள்ள தொடர்பாடல் அந்நியத்தைப் புறந்தள்ளும் தமிழ்ப் பாடல்களாக அம்மன் சடங்குப் பாடல்கள் உள்ளமையும் கவனிக்கவேண்டிய முக்கியமான விடயமாகும்.

இப்பாடல்கள் பெறும் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள அம்மன் நோய் பற்றிய விடயங்களையும் இணைத்து நோக்கலாம். மாரியம்மனால் பதினெட்டு முத்து வகைகள் மக்கள் (கெடுதி புரிந்தவர்கள்) மீது வீசப்படுவதாக மாரியம்மன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அகவலில் பாடப்பட்டுள்ளது. முத்துக்கள் எறியப்பட வேண்டியவர்கள் பற்றிக் கூறும்போது கெட்ட செயல்களைத் தடுக்க வேண்டும் எனும் நோக்கம் மறைமுகமாக வலியுறுத்தப்படுகிறது.

'...வம்புகளுரைத்தோர்கள் வாழ்வினைக்கெடுத்தோர்கள்
துன்பங்கள் செய்தோர்கள் துஞ்ச நஞ்சையிட்டோர்கள்
கற்பையழித்தோர்கள் காமம்சேர் நெஞ்சுடையோர்
வட்டிகொடுத்து வாங்கு மகாபாவிகட்கும்
பொல்லாத முத்துகளைப் போயெறி நீ பத்தினியே...'
(கணபதிப்பிள்ளை.சி, பக்-18, 1971, மகமாரித்தேவி திவ்வியகரணி)

அம்மன் நோய் ஏற்பட்டபோது செய்யப்படும் பலவகைச் சடங்குகளுள் ஒன்றாக மாரியம்மன் தாலாட்டு பாடுதல் இடம்பெறும். அம்மன் நோய் பீடிக்கப்பட்டவரது வீடு துப்பரவாக மச்சம், மாமிசம் அகற்றி வேப்பிலையை வாசல் கதவில் தொங்கவிட்டு, தேங்காய் எண்ணெயில் விளக்கெரித்து, அம்மனுக்கு கும்பம் வைத்து அம்மன் நோயால் பீடிக்கப்பட்டவரை புதுப்பாயில் வெள்ளை விரித்து வேப்பங்குழைகளை (வேப்பங்குழையானது நோய்க்கிருமிகளை தங்கவிடாது தடுக்கும் தொற்று நீக்கியாகும்) பாயின் மேல் போட்டு அதில் அவரைக் கிடத்தி தாலாட்டுப் பாடல் பாடுவார்கள். படிப்படியாக கொடிய அம்மன் நோயால் பாதிக்கப்பட்டவரின் உளக்கொதிப்பு மாறி அம்மன் நோய் அடங்கிப் போவது கண்கூடு. ஏனெனில் அம்மன் நோய் பீடிக்கப்பட்ட ஒருவர் எந்தவொரு உணவோ, நீராகாரமோ அருந்த முடியாத மிகவும் துன்பப்பட்ட நிலையில் காணப்படுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அந்த அகோரமான வேளையில் அவருக்கு உணவாகவும், நீராகவும் கிடைத்து மன உழைச்சலையும் உடல் உழைச்சலையும் தவிர்ப்பது இந்த மாரியம்மன் தாலாட்டுப் பாடலாகும்.

சாதாரண வேப்பங்குழைகளும் தாலாட்டுப் பாடல்களும் நோயைக் குறைத்து ஆறுதலைக் கொடுக்கிறது என்பது உளநல மருத்துவத்துடன் தொடர்புடையது. இந்து மதத்தவர்களுக்கு மாத்திரமல்ல பிற மதத்தவர்களுக்கும் இத்தாலாட்டுப் பாடல்கள் நோயைக் குணப்படுத்தியிருப்பது செவிவழிச் செய்திகளிலிருந்து தெரியவருகின்றது.

மாரியம்மன் தாலாட்டு ஆரம்பத்தில் விநாயகர் துதி, காப்பு, சரஸ்வதி துதி என்பன பாடப்பட்டு பின்னர் பின்வருமாறு தொடங்கும்,

"மாயி மகமாயி மணிமந்திர சேகரியே
ஆயியுமையவளே ஆதிசிவன் தேவியரே
மாரித்தாய் வல்லியரே மகராசி வாருமம்மா
மாயன் சகோதரியே மாரிமுத்து வாருமம்மா.."
( மாரியம்மன் தாலாட்டு, துண்டுப்பிரசுரம் )

இது போன்ற வரிகள் மூலம் இப்பாடலில் எழும் இனிய, கனிந்த, உணர்வு நோயாளிகளைச் சாந்தப்படுத்தும். (மாரியம்மன் தாலாட்டு என திவ்வியகரணியில் பதிப்பிக்கப்பட்ட பாடல் இதிலிருந்து வேறுபட்டதும் அம்மன் சடங்கில் பாடப்படுவதுமாகும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அம்மன் சடங்குப் பாடல்களின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ள அம்மன் சடங்குடன் தொடர்புபட்ட காவடி எடுத்தலையும் நாம் நோக்குதல் வேண்டும். காவடி எடுக்கும் அடியார்களின் வலியைக் குணப்படுத்தும் மனோ திடத்தை அதிகரித்து முழுமனதையும் அம்மன் மேல் செலுத்துவதற்கு ஏற்ற வகையில் காவடிச் சிந்துப் பாடல்கள் அமைந்துள்ளன.



காவடி தூக்கி வரும் அடியார்கள் தங்களுடைய முதுகுப் புறமாக 16 முட் கம்பிகளைப் பாய்ச்சி, வாயில் ஒரு முட் கம்பியை ஏற்றி, வாயலகணிந்து, ஒருவர் பின்புறமாக கம்பிகளில் கயிறு போட்டு இழுக்கவே ஆடி வருவர். அதே போல் தூக்கு காவடி எடுப்பவர்களும் சாதாரண காவடி எடுப்பதை விட கூடுத லான முட் கம்பிகள் ஏற்றப்பட்டு, அந்தரத்தில் தொங்கிக் கொண்டு ஆடிவருவார்கள். இவ்வேளைகளில் காவடிச் சிந்துப் பாடல்கள் ஆறுதலைக் கொடுக்கின்றது. நம்பிக்கையை ஊட்டும் வண்ணம் அம்மனை நோக்கி ஒருமுகப்படுத்தி வலியிலிருந்து விடுதலை பெற வைப்பதாக இப்பாடல்கள் அமைந்திருக்கும்.

உதாரணமாக க.தணிகாசலம் எழுதிய பழுகாமம் திரௌபதியம்மன் காவடிச்சிந்துப் பாடல்களைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவை எண்சீர் விருத்தப்பாக்கள் பத்து ஆகும். இவற்றில் திரௌபதியம்மனின் பெருமை, அற்புதச் செயல்கள் ஆளுமைகள் மற்றும் பழுகாமத்துப் பெருமையும் கூறப்படுவதுடன், அம்மனின் அருளை உருகி வேண்டுவதாயும் அமைந்துள்ளது.

"வீறுகொண்டெழுந்து நின்று சபதம் செய்தாய்
வெறிகொண்ட துரியனவன் தொடையுடைத்து
சீறிவரும் உதிரத்தை அள்ளி உந்தன்
சிங்கார விரிகூந்தல் தன்னில் பூசி
கோதுகுழல் முடிப்பேனென்றுறுதி பூண்டாய்
கொற்றவளே நின்பாதமலர் மறக்கலாமோ
தீதகலும் பழுகாமம் நகரில் வாழும்
பத்தினியே பாஞ்சாலித் தாயே போற்றி..."

என்பது அவற்றுள் ஒரு பாடலாகும்.

அம்மன் சடங்கு வழிபாடு அது சார்ந்த வாழ்வியல் என்பவற்றினடியாக இயங்கும் இலக்கியப் பாரம்பரியம் - அதன் சமூக முக்கியத்துவம் பற்றி நோக்கும் நாம் பாரத அம்மானை மரபு பற்றியும் குறிப்பிடவேண்டும். பழுகாமம் திரௌபதையம்மன் கோயில் சார்ந்து இவ்விடயத்தை நாம் சிந்திக்க முடியும்.

அம்மானைப் பாடல்களை கிராமத்து மக்கள் மத்தியிலுள்ள அம்மன் வழிபாட்டுப் பக்தர்களான இலக்கிய ஈடுபாடுடைய அறிஞர்களே பாடுகின்றனர். பாரத அம்மானைப் பாடல் பல்வேறு கிளைக்கதைச் சரித்திரங்களைக் கொண்டிருப்பதால் குறிப்பிட்ட எட்டு நாட்களுக்குள் ஒரு சிலரால் பாடி முடிப்பது சிரமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனவே பலர் இதில் பங்கெடுப்பர். ஒருவர் அம்மானைப் பாடலின் ஒரு வரியைப் பாடி முடிக்க மற்றொருவர் பக்கத்திலிருந்து பயனைக் கூறுவார். (பயனென்பது படல்களின் பொருளாகும்)

ஆலயத்தின் வெளிப்புற மண்டபத்தில் மரத்தால் செய்யப்பட்ட ஒரு குற்றியில் வெள்ளை விரிக்கப்பட்டு அந்த வெள்ளைச் சீலையின் மேல் மடை வைத்து ஊதுபத்தி கொழுத்தி மங்கள விளக்கேற்றி பழைய பாரத ஏடும் தற்போதைய கையெழுத்துப் பிரதியும் அதில் வைக்கப்பட்டிருக்கும். மடைக்கு முன்பாக இருவர் அமர்ந்திருப்பர். ஒருவர் பாட மற்றவர் பயன் கூறுவார். பண்டைய நாளில் பாடல்களை மண்டபத்திற்குள்ளிருந்து கேட்கும் ஒரு மக்கள் கூட்டத்தின் முன்பாக பாடிப் பயன் சொல்லி வந்துள்ளனர். இன்றுள்ள நிலையில் கிட்டத்தட்ட முப்பத்தைந்து நாற்பது ஆண்டுகளாக ஒலி பெருக்கிகள் மூலம் பாடல்கள் பாடப்பட்டு பயன் கூறப்பட்டு வருகிறது.

இப்பாடல்கள் கிராமத்து வீடுகள் அனைத்திற்கும் ஒலிக்கத்தக்கதாக உள்ளது. அம்மன் சடங்கு வேளைகளில் கிராமத்து வீதிகள், வீடுகள், வளவுகள் எல்லாம் துப்பரவு செய்யப்பட்டு (சுத்தம்) எல்லா மக்களும் மச்சம் மாமிசம் மதுபானப் பாவனையிலிருந்து விடுபட்டு புனிதமாய் இருப்பர். எல்லா வீடுகளின் கதவுகளிலும் வேப்பிலைக் குருத்துகளால் அலங்கரிக்கப்பட்டு வாசனைத் திரவியங்களால் சூளப்பட்டு கிராமமே அம்மாள் மயமாக இருக்கும். இந்த ஒரு பின்னணியில் இப் பாடல்கள் ஒலிபெருக்கியில் ஒலிக்கும் போது பக்தர் மனதில் அமைதியும் நல்லெண்ணமும் தோன்றுவதை அவதானிக்கலாம். எனவே பாடல்கள் சார்ந்த சூழல் என்பதே பாடல்கள் மக்களுடன் ஒன்றிப்போக வழிசெய்து விடுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இத்தகைய இலக்கியப் பாரம்பரியத்தின் சமூக முக்கியத்துவத்தை பழுகாமம் மாரியம்மன் கோயில் சடங்குப் பாடல்களில் ஒன்றான மாரியம்மன் தாலாட்டுப் பாடலும் எமக்கு உணர்த்தி நிற்கிறது. தெய்வமாடிகளுக்குப் பலி கொடுக்கும்போது முக்கியமாகப் பாடப்படும் தாலாட்டுப் பாடல்கள் ஊர்வலத்தின் போதும் அம்மன் சடங்கு முடிந்த பின்னரும் ஒலிபெருக்கியில் பாடப்படுவதைக் காணலாம். தெய்வங்களுக்கு பலி கொடுக்கும் போது தாலாட்டித் தாலாட்டிப் பலி கொடுக்க வேண்டுமெனக் கூறப்படுகிறது.

தாலாட்டுப் பாடல்கள் ஊர்வலத்தின் போது ஒலிபெருக்கியில் பெண்களால் பாடப்படுவது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பழுகாமம் ஞானசேகரக் குருக்களின் மனைவி செல்லம்மா முக்கியமானவர். தாலாட்டுப் பாடல்களுடன் காத்தவராயன் கும்மிப்பாடல்களும் செல்லம்மாவினால் இனிமையாகப் பாடப்படுவதை அவதானிக்கலாம். சடங்குப்பாடல்கள் பாடுவதில் பெண்ணிலைப் பங்குபற்றலுக்கான உதாரணமாக இவர் இன்றும் விளங்குவது முக்கிய அம்சமாகும். பூசைவேளையின் போதும் செல்லம்மாவினால் மாரியம்மன் தாலாட்டு, காத்தவராயன் கும்மி என்பன பாடப்படுகின்றன. பெண்கள் சடங்குப்பாடல்கள் பாடுவதில் பங்கெடுப்பது குறைந்துவரும் அல்லது குறைக்கப்பட்டு வரும் இச்சூழலில் செல்லம்மாவின் ஆளுமை வியந்து போற்றுதற்குரியது.

பாலன் படுந்துயரம், குழந்தை படுந்துயரம், குருக்கள் படுந்துயரம், ஆசான் படுந்துயரம் ஆகியவற்றையும் தீராத நோய்பிணிகளையும் தீர்த்துவைக்க அம்மனை அழைப்பதாகவும் தாலாட்டுப்பாடல்கள் அமைந்திருப்பது (உளவியல் ரீதியில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு இன்னல்களில் அல்லல்பட்டு உழலும் சாதாரண மக்கள் வாழ்வில் நிம்மதி கிடைக்கும் எனும் நம்பிக்கையினை ஊட்டுவதாய் அமைந்து விடுகிறது. அவ்வகையில் மக்களுக்கு அண்மித்த உணர்வு நிலையை ஏற்படுத்தி மனங்களுக்கு நெருக்கமாகி விடுகிறது.

இவ்வகையில் அம்மன் வழிபாடு, அதுசார்ந்த வாழ்வியல் என்பவற்றினடியாக இயங்கும் இலக்கியப் பாரம்பரியம் பற்றி அறிந்து கொள்வதுடன் அதன் சமூக முக்கியத்துவம் குறித்த சிந்தனையினை - மாரியம்மன் காவியம், மாரியம்மன் தாலாட்டு ( இரு வேறுபட்டவை), மாரியம்மன் அகவல், திரௌபதையம்மன் காவியம், திரௌபதையம்மன் காவடிச்சிந்து, பாரத அம்மானை என்பன பாடப்படும் சந்தர்ப்ப சூழல், பாடல்களின் உள்ளடக்கம் என்பனவற்றின் அடிப்படையில் கண்டுகொள்ளவும் முடியும். இவ்விடயம் சார்ந்து ஏனைய அம்மன் சடங்குப் பாடல்கள் ( உதாரணம் - பத்திரகாளி அகவல் ) பற்றியும் சிந்தனை செய்தல் பல புதிய தரிசனங்களுக்கு வழிவகுக்கும்.

**உசாவியவை**


1. கணபதிப்பிள்ளை.சி, 1971, **மகமாரித் தேவி திவ்விய கரணி,** விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்.

2. சித்திரலேகா.மௌ(பதிப்பு), 2004, **வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக,** கிழக்குப் பல்கலைக் கழகம்

3. யோகராசா. செ (தொகுப்பாசிரியர்), 2002, **ஈழத்து**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாய்மொழிப் பாடல் மரபு**, பண்பாட்டுத் திணைக்களம், கொழும்பு.

4. மகேஸ்வரலிங்கம்.க, 1996. **மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு - ஓர் அறிமுகம்.** தில்லை வெளியீடு. மகிழடித்தீவு.

5. மௌனகுரு.சி(பதிப்பாசிரியர்), 2003, **மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு,** இரண்டாம் உலக இந்து மாநாட்டுமலர், மட்டக்களப்பு பிரதேச கிளை

6. செல்வி திருச்சந்திரன்(பதிப்பாசிரியர்), **மதப்பண்பாட்டின் கோலங்களையும் கருத்தியலையும் கட்டவிழ்க்கும் ஒரு பால்நிலை நோக்கு,** பெண்கள் கல்வி ஆய்வுநிறுவகம், கொழும்பு.

7. மாரியம்மன் தாலாட்டு துண்டுப்பிரசுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையில் உள்ளூராட்சி நிர்வாக முறைமை: அதன் நோக்கங்களும் அதிகாரங்களும்.

வே.குணரத்தினம்.

சிரேஷ்ட விரிவுரையாளர்.

சமூக விஞ்ஞானத்துறை

கிழக்குப்பல்கலைக்கழகம்.

## 1.0 அறிமுகம்

இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் தோற்றுவாய் நீண்ட வரலாற்று ஓட்டத்தைக் கொண்டது. இலங்கையில் மன்னர்களின் நிர்வாகத்தில் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உள்ளூராட்சி முறை வழக்கத்தில் இருந்ததாக மகாவம்சத்திலும் பண்டைய நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. மன்னராட்சிக்காலத்தில் யாழ்ப்பாண இராட்சியத்தில் பஞ்சாய முறையும் கண்டி இராட்சியத்தில் கம்சபா, ரட்டசபா ஆகிய முறைகளும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. போர்த்துக்கேயரிடம் யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைந்ததை அடுத்து யாழ்பாண இராட்சியத்தில் உள்ளூராட்சி முறை முடிவுற்றது. 1818ஆம் ஆண்டு கண்டி கலகத்தைத் தொடர்ந்து பிரித்தானியர் வெளியிட்ட பிரகடனத்தை அடுத்து கண்டி இராட்சியத்தில் உள்ளூராட்சி முறை இல்லாதொழிந்தது. ஆயினும் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில்தான் இன்றைய உள்ளூராட்சி கட்டமைப்பை நோக்கி முன்னேற்றங்கள் ஏற்படத் தொடங்கின. பிரித்தானியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆட்சியின் போது 1856ம் ஆண்டு நீர்ப்பாசனச்சட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இது உள்ளூராட்சி அமைப்புக்கு சட்ட வடிவம் கொடுத்தது. 1865ம் ஆண்டு கொழும்புக்கும் கண்டிக்கும் மாநகர சபைகள் உருவாக்கப்பட்டதுடன், உள்ளூராட்சியமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்டட வாக்குரிமையுடன் உறுப்பினர்கள் தேர்தெடுக்கப்படுவதும் தோற்றம் கண்டது. ஆயினும் இன்றைய தேர்ந்தெடுக்கப்பட்ட தவிசாளர் முறைமை உருவாக்கப்படவில்லை. மாகாண அதிபரை தலைவராக கொண்ட ஒர் அமைப்பாக இருந்தது. கிராம சபைகளை தோற்றுவிப்பதற்கான முயற்சி 1871ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பட்டின, நகரசபைகளை தோற்றுவிப்பதற்கான கால்கோள் 1871ம் ஆண்டு 18ம் இலக்க சட்டத்துடன் இடப்பட்டது. அத்துடன், 1898ம் ஆண்டு கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இலங்கை கிராமிய பாதுகாப்புச் சங்க கூட்டமொன்றை கூட்டி நூறு வருடங்களுக்கு முன்பிருந்தே காப்பாற்றப்பட்டு வரும் கிராமிய சமுதாய நிர்வாக முறையை அழிக்கக்கூடாது என பிரித்தானியரிடம் கேட்டுக் கொண்டார். ஆயினும் சனநாயக ரீதியில் அமைந்த உள்ளூராட்சி அமைப்புக்கு 1920ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டமே உந்து சக்தியாக அமைந்தது. ஆகவே, ஆசியாவிலே முதன்முதலாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட நகரசபை நிறுவப்பட்டது இலங்கையிலேயாகும். அது மட்டுமன்றி, இலங்கையில் முதலாவதாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட நகர முதல்வராக பதவியேற்றவர் டாக்டர் இரத்தினஜோதி சரவணமுத்து என்னும் தமிழர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### 1.1 உள்ளூராட்சி நிறுவனங்களும், நியதிச் சட்டவாக்கமும்

1938ம் ஆண்டு 60ம் இலக்கக் கிராம சபைக் கட்டளைச்சட்டத்தால் (Village Committee Ordinance No 60 Of 1938) கிராம சபைகள் தோற்றுவிக்கப்பட்டன. 1939ம் ஆண்டு 61ம் இலக்க கட்டளைச் சட்டத்தால் (Urban Council Ordinance No 61 Of 1939) நகரசபை உருவாக்கப்பட்டது. 1946ஆம் ஆண்டு கட்டளைச்சட்டத்தால் (Town Council Ordinance) பட்டின சபைகள் உருவாக்கப்பட்டன. 1947ஆம் ஆண்டு 29ம் இலக்க கட்டளைச்சட்டத்தால் (Municipal Council Ordinance no 29 Of 1947) மநகர சபைகள் உருவாக்கப்பட்டன. 1980ம் ஆண்டு 35ம் இலக்க மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டத்தால் (District Development Council Act No: 35 Of 1980) கிராம சபைகள், பட்டின சபைகள் ஒழிக்கப்பட்டு இன்றைய உள்ளூராட்சி அதிகார சபைகளான மாநகர சபை, நகர சபை என்பன நிலைநிறுத்தப்பட்டன. 1987ஆம் ஆண்டு 17ம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் (Predesha Shaba Act No;17 Of 1987) பிரகாரம் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன.

### 1.2 உள்ளூராட்சி நிறுவனங்கள்

மாநகர சபை, நகர சபை. பிரதேச சபை கட்டளைச்சட்டங்கள் மூலம் இச்சபைகள் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரால் வர்த்தமானி மூலம் அறிவித்து உருவாக்கப்படலாம். இச்சபைகளின் உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச்சட்டத்தின் (Local Authority Election Special Provision Act No 24 Of 1979) கீழ் மக்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இச்சபையின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாகும். தற்பொழுது மாநகர சபைகள்12 நகர சபைகள்41 பிரதேச சபைகள்255 என்பன உள்ளூராட்சி நிர்வாக முறையில் காணப்படுகின்றன.

சபை மாதமொரு முறை கூட்டப்பட வேண்டும். மாநர முதல்வர் கூட்டம் கூட்டப்பட வேண்டிய அவசியம் ஏற்றபடுகின்ற போதும், மூன்று உறுப்பினர்களால் சபைக்கூட்டம் கூட்டப்பட வேண்டும் எனக்கைச்சாத்திட்டு விண்ணப்பிக்கும் போதும் மாநகர முதல்வர் விசேட கூட்டங்களை கூட்டலாம். நகர சபையை பொறுத்தவரையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி கைச்சாத்திட்டு விண்ணப்பிக்கின்ற பொழுது விசேட கூட்டம் இடம் பெறும். கூட்டம் நடைபெறும் திகதியும் நிழ்ச்சி நிரல் பற்றியும் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் நான்கு நாட்களுக்கு முன்பு அறிவித்தல் கிடைக்கக்கூடிய வகையில் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். நகர சபைத்தலைவர் உறுப்பினர்களுக்கு மூன்று நாட்களுக்கு முன்பு அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும். சில வேளைகளில் கூட்டத்திகதி ஒத்திவைக்கப்படும் போது 24மணித்தியாலயத்திற்கு முன்பு தெரியப்படுத்தப்பட வேண்டும். தீர்மானச் செய்முறையின் போது கூட்டத்திற்கு சமூகமளித்திருக்கும் இரு சாராரின் வாக்குகள் சமநிலையில் இருக்கும் பொழுது மாநகர முதல்வருக்கு அல்லது பிரதி மாநகர முதல்வருக்கு அல்லது தலைமை வகிக்கும் தலைவருக்கு அவரது வாக்கைத்தவிர்த்து மேலும் ஒரு வாக்குரிமையுண்டு. இத்தன்மை மாநகர சபைக்கு உள்ளது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போன்று நகர சபைக்கும் பிரதேச சபைக்கும் உள்ளது. பொதுவாக, சபைச் செயற்பாடுகள் பின்வருமாறு இடம் பெறும். அவையாவன,

1. கடந்த பொதுக்கூட்டத்தின் நிகழ்வுகளை விடயங்களை உறுதிப்படுத்தல்.
2. சபைக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜர்கள், விஞ்ஞாபனங்கள், முறைப்பாடுகள் என்பன தொடர்பாக செய்துள்ள விடயங்கள்.
3. வினாக்கள், பிரேரணைகள்
4. சபைக்குழுக்கள் நிலைக்குழுக்களின் சிபார்சுகளைக் கலந்துரையாடல்
5. நிகழ்ச்சி நிரலிலுள்ள ஏனைய விடயங்கள்
6. சபைக்குத் தேவையான வரவு, செலவு தொடர்பான மாத அறிக்கைகள், வேலைகள் சார்பான முன்னேற்றங்கள்.

## 1.3 உள்ளூராட்சி அரசாங்கத்தின் நோக்கங்கள்

1. உள்ளூராட்சி அரசாங்க அதிகாரப்பகுதியில் வசிக்கும் மக்களால் தம்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்ற, சம்மந்தப்பட்ட வேறு விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுதல். அதாவது, தீர்மானம் மேற்கொள்ளுதலை பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பங்கேற்புடன் செய்விப்பதே அடிப்படை நோக்கமாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அதைப் போன்றே பிரஜைகள் கல்வியை விருத்தி செய்தல் மற்றுமொரு நோக்கமாகும். பிரசைக்கு அரசாங்க பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற கல்வி இதன் கருத்தல்ல. பிரஜைகள் என்ற வகையில் சமூகத்தில் வாழும் போது பயின்றிருக்க வேண்டிய சமூக, அரசியல், மற்றும் பொருளாதாரக்கல்வி பற்றியே இங்கு கூறப்படுகின்றது.

3. பகுதிவாழ் மக்களின் கருத்துக்களும் அபிப்பிராயங்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதைப் போன்றே அவற்றுக்கு அமைவாக உள்ளூராட்சி அரசாங்கங்கள் செயலாற்றுவதும் மற்றுமொரு நோக்கமாகும்.

4. மக்களின் விருப்பு வெறுப்புக்களை போன்றே தீர்மானங்கள் மற்றும் முடிவுகளின் அடிப்படையில் ஆட்சி இடம் பெறுவதால் பணிகளில் உச்சமட்ட வினைத்திறனைப் பெற்றுக்கொள்வதென்பதும் உள்ளூராட்சி அரசாங்க ஆட்சியின் மற்றுமொரு நோக்கமாகும்.

5. அதைப் போன்றே மத்திய அரசாங்கத்திடமிருந்து அவ்வாறின்றேல் மேலிடங்களில் இருந்து வருகின்ற கொள்கைத் தீர்மானங்களை தமது பிரதேச சுற்றுச்சூழலுக்கு பொருந்தக்கூடியதாக அமைத்துக் கொள்ளுதலும் ஒரு நோக்கமாக அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

6. மத்திய அரசாங்கத்தினால் அவ்வாறின்றேல் நாட்டின் பிரதான அரசியல் நிறுவனத்தினால் புரியப்படுகின்ற ஆட்சியில் இருந்து ஓரளவுக்கேனும் சுயாதீனத்தை பேணிவருதல் உள்ளூராட்சி அரசாங்கங்களுடன் தொடர்புடைய மற்றுமொரு நோக்கமாக எடுத்துக்காட்டலாம்.

7. பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் நிருவாக செயற்பாடுகளுக்கிடையில் இணைப்பாக்கத்தை பேணிவருதல் அதாவது, இத்தகைய அபிவிருத்தி மற்றும் நிருவாக பணிகளை ஈடேற்றுகின்ற அனைத்து நிறுவனங்களுக்கும் இடையில் தொடர்பினை வளர்த்துக் கொள்வது மற்றுமொரு முக்கிய நோக்கமாகும்.

8. பிரதேச அபிவிருத்தி, நிருவாக மற்றும் சமூக கலாசாரப்பணிகளை கிரமமாகவும் அமைதியாகவும் பேணிவரத் தேவையான மக்கள் பங்கேற்பினை பெற்றுக் கொள்வதும் உள்ளூராட்சி அரசாங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

9. மக்களின் பணம், இயற்கை வளங்கள் அதேபோன்றே பொதுச்சொத்துக்களில் இடம்பெறக்கூடிய ஊழல்கள், மோசடிகள் மற்றும் முறைகேடுகளை தடுப்பதும் உள்ளூராட்சி அரசாங்கத்தின் நல்லதொரு நோக்கமாகும்.

10. பிரதேசத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிவரத்தேவையான நல்லதொரு பிரஜைகள் சமூகத்தை உருவாக்குவது மற்றுமொரு நோக்கமாகும்.

11. உள்ளூராட்சி அரசியல் பிரதிநிதியொருவர்தான் என்றோ ஒரு நாள் தேசிய அரசியல் தலைவராவார். ஆவ்வாறு அமைவதற்கு அவசியமான அடிப்படை அரசியல் பயிற்சியை பெற்றுக்கொள்ளும் நிறுவனமாக உள்ளூராட்சி அரசாங்கங்களின் செயற்பாட்டினை அமைத்துக் கொள்வது மற்றுமொரு நோக்கமாகும்.

12. தமது அதிகாரப் பிரதேசத்திற்கு மாத்திரம் தனித்துவமான விடயங்கள் இருக்கின்றன. அவை தொடர்பான தீர்மானங்களை அப்பிரதேசத்தை சேர்ந்தவர்களே மேற்கொள்ள வேண்டும். அதன் பொருட்டு அவசியமான கருவியாக உள்ளூராட்சி அரசாங்கத்தை பிரயோகித்தல் மற்றுமொரு முக்கிய நோக்கமாகும்.

13. உள்ளூராட்சி அரசாங்கம் என்பது அடிமட்டத்தில் உள்ள சனநாயக அரசியல் நிறுவனமாகும். அதாவது, ஒரு நாட்டு மக்களால் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்ற மிகச்சிறிய அரசாங்கமே உள்ளூராட்சி அரசாங்கமாகும். அதனூடாக சனநாயகத்தை (மக்களால் மக்களுக்காக புரியப்படுகின்ற அவர்களின் ஆட்சி) செயற்படுத்துவது மற்றுமொரு நோக்கமாகும்.

14. நாட்டில் பல்வேறு வேறுபாடுகள் நிலவும். இட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அமைவுக்கிணங்க இடம்பெறும் வேறுபாடு, இன. மத, குலங்களுக்கிடையில் தோன்றுகின்ற வேறுபாடுகள். இத்தகைய வேறுபாடுகள் காரணமாக முரண்பாடுகள் உருவாகக்கூடும். அவ்வாறு இல்லாமல் அவ்வேறுபாடுகள் நிலவுகின்ற அதே வேளையில் ஒத்துழைப்புடன் செயலாற்றுவது உள்ளூராட்சி அரசாங்கங்களின் மற்றுமொரு நோக்கமாகும்.

15. அடுத்ததுதான் ஒரு நாட்டின் மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகளுடன் மக்களால் நேரடியாக தொடர்பு கொள்ள முடியாது. எனினும் உள்ளூராட்சி அரசாங்கங்களின் செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்பு கொள்ளக்கூடிய ஏதேனும் வாய்ப்பினை உருவாக்கிக் கொடுப்பது. உள்ளூராட்சி அரசாங்கத்தின் மற்றுமொரு முக்கிய நோக்கமாகும்.

16. அரசாங்கம் என்பது மக்களின் கூட்டமைப்பே. மக்களின் கூட்டமைப்பு நல்லதாக இருந்தாலேயே அரசாங்கம் நல்லதாக அமையும். எனவே நல்ல மக்களை – பிரஜைகளை உருவாக்க உதவுவது உள்ளூராட்சி அரசாங்கங்களின் மற்றுமொரு நோக்கமாகும்.

17. இப்போது முன்னரைப்போல் அல்ல. அரசுகள் மிகவும் விசாலமானவை. எனவே, இந்த விசாலமான நாடுகளில் ஆட்சி, நிருவாக அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்ளும் போது உள்ளூராட்சி அரசாங்கங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் அவசியமான நிறுவனங்களாகும். எனவே, மத்திய அல்லது பிரதான அரசாங்கத்தின் பணிகளுக்கு உதவுவது உள்ளூராட்சி அரசாங்கங்களின் மற்றுமொரு நோக்கமாக அமைகின்றது.

18. உள்ளூராட்சி அரசாங்கத்தின் அதிகாரப் பிரதேசத்தை எடுத்தக் கொண்டால் அதற்குள் மேலும் பல்வேறு அரச மற்றும் அரச துறையல்லா நிறுவனங்கள் காணப்படுகின்றன. அந்த நிறுவனங்களிடையே இணைப்பாக்கம் செய்து பொது அபிவிருத்திப் பணிகளை பேணிவரவேண்டியது உள்ளூராட்சி அரசாங்கமொன்றின் மிகச்சிறந்த நோக்கமும் பொறுப்புமாக அமைகின்றது.

19. அத்தகைய இணைப்பாக்கத்தை பேணிவந்து, பிரதேச நிறுவனங்களுக்கிடையில் தோன்றக்கூடிய முரண்பாடுகளை தீர்த்து வைப்பவர்களாக செயலாற்றவும் உள்ளூராட்சி அரசாங்கங்களுக்கு இயலும்.

20. பிரதேசத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிவரும் வேலைத்திட்டத்திற்கு உதவுவதையும் உள்ளூராட்சி அரசாங்கங்களின் ஒற்றுமை மூலமாக ஈடேற்ற முடியும்.

21. எமக்குத் தெரியும் நாங்களும் சுற்றாடலின் ஒரு பகுதி என்பது. எனவே, சுற்றாடல் அவ்வாறின்றேல் இயற்கையை பாதுகாத்தல், பேணுதல் அத்துடன் கட்டி வளர்ப்பது உள்ளூராட்சி அரசாங்கத்தின் மிகச்சிறந்த நோக்கமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

22. பிரதேச ரீதியாக எடுத்துக் கொண்டால் பல்வேறு விடயங்கள் காரணமாக மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அத்தகைய தொல்லைகளை தடுத்து மக்களுக்கு வசதியை வழங்குவது மற்றுமொரு நோக்கமாகும்.

23. அதைப்போன்றே மக்களுக்கு, அவசியமான அடித்தள வசதிகள் இல்லாமையாலேயே ஒரு சில தொந்தரவுகள் தோன்றுகின்றன. அடித்தள வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதும் மேம்படுத்துவதும் உள்ளூராட்சி அரசாங்கங்களின் மிக முக்கியமான நோக்கங்களாகும்.

24. மேற் சொல்லப்பட்ட பலவிதமான நோக்கங்களை கருத்திற் கொண்டு பிரதேசத்திற்கு ஏற்புடைய அவசியமான அபிவிருத்தி மற்றும் நிருவாக வேலைத்திட்டங்களை திட்டமிட்டுக் கொள்வதும் உள்ளூராட்சி அரசாங்கங்களின் மிக முக்கிய நோக்கமாகும்.

25. அதைப் போலவே அத்திட்டங்களை நேர்மையாகவும் நியாயமாகவும் செயற்படுத்துவதும் செயற்படுத்துகின்றவை பற்றி தொடர்ச்சியாக கண்காணிப்பதை போன்றே மதிப்பீட்டினை செய்ய வேண்டியதும் முக்கியமான நோக்கமாக அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.4 உள்ளூராட்சி நிர்வாக முறைமையில் மாநகர சபை, நகர சபை, பட்டின சபை போன்ற நிறுவனங்கள் தொழிற்படுகின்றன. அவை ஒவ்வொன்றையும் தனித்தனித்தனியாக ஆராயப்படுகின்றது.**

1.4.1 மாநகரசபை

இலங்கையில் உள்ளூராட்சி அமைப்பில் மாநகர சபையே முக்கியமான இடத்தை பெறுகின்றது. மாநகர சபையின் இலக்கு அதன் அதிகாரப்பரப்புக்கு உட்பட்ட மக்களுக்கு ஒன்றிணைந்த சேவைகளை அளிப்பதாகும். இச்சேவைகள் பொதுமக்களின் வாழ்க்கையோடு இரண்டறக்கலந்ததொன்றாகும். இந்த இலக்கை அடைவதற்காக மாநகர சபை ஏழு பிரிவுகளாக பிரிந்து இயங்க வேண்டும். அவையாவன,

1. பாதை, கட்டிடம், தாவர அமைப்புத்திட்டங்கள்
2. பொதுவான நிர்வாக சேவைத்திட்டங்கள்
3. பொதுச்சுகாதாரம்
4. நீர் வசதிகள்
5. பயன்தரு சேவைகள்
6. மின்சக்தி
7. சேமநலச் சேவைகள், மற்றும் வசதிகள் என்பனவாகும்.

**மாநகர சபையின் அதிகாரங்கள்**

1. அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபைக்கு உரித்தாக்கப்பட்ட அரச காணிகளை, கட்டடங்களை ஏலத்தில் விற்கவோ அல்லது வாடகைக்கு விடவோ அதிகாரமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2. பதவிகளை உருவாக்கவும், அப்பதவிகளுக்கு தகுதியானவர்களை நியமிக்கவும் முடியும்.
3. ஒப்பந்தங்களைச் செய்தல்
4. வரவு செலவுத்திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல்.
5. பொது நோக்கத்தின் அடிப்படையில் தனியார் காணிகள், கட்டடங்கள் என்பவற்றின் அளவு எடுத்தல்.
6. விகிதங்கள் வரிகள் முறியின் மீது கடன் பெறல்.
7. புதிய பாதைகள் அமைப்பதற்கு, பழைய வீதிகளைத் திருத்துவதற்கும் பாதைகளில் உள்ள தடைகளை அகற்றுவதற்கும் பாதைகள் சேதமிழைக்கப்பட்டால் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரவும் மின் வெளிச்சம் வழங்கவும் அதிகாரம் உண்டு.
8. புதிய கட்டடங்களின் மாதிரிப்படங்களை அங்கீகரித்தல், பழைய கட்டடங்கள் மாற்றங்கள் செய்வதை அங்கிகரித்தல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தடையாகவுள்ள கட்டடங்கள் மீது நடவடிக்கையெடுத்தல்.
9. இறைச்சிக் கடைக்காரருக்கும் பொது கொள்கலன்களுக்கும் அனுமதிச்சீட்டு வழங்குதல், நீர்விநியோகம், சந்தை போன்றவற்றை உருவாக்கி பராமரித்தல்.
10. சபையின் நடவடிக்கைக்கு எதிராக செயற்படுபவர் மீது பொது மக்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தும் விடயங்கள் மீது நடவடிக்கை எடுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாநகர சபையின் தொழிற்பாட்டுக்கு நிதி அவசியமாகும். அந்நிலையினை பின்வரும் நிதியீட்டு வழிமுறையினூடாக பெற்றுக் கொள்கின்றது.

1. சபைக்காணிகளையும் கட்டடங்களையும் பயன்படுத்தியமைக்கு வாடகை அறவிடுதல், அவற்றை விற்றல் மூலம் கிடைக்கும் பணம்.

2. சபையினால் வழங்கப்படும் அனுமதிச்சீட்டுகள் மீது வரியைப் பெறுதல்.

3. அப்பிரதேசத்திலுள்ள அசைய முடியாத சொத்துக்கள் மீது ஆண்டுப் பெறுமதி மீது வரிவிதித்தல் மூலம் கிடைக்கும் பணம்.

4. வழங்கப்படும் சேவைகள் பொருட்டுக் கட்டணங்கள் அறவிடுவதன் மூலம் கிடைக்கும் பணம்.

5. தண்டப்பணம், குற்றப்பணம் முத்திரை வரி மூலம் கிடைக்கும் பணம்.
6. அமைச்சரின் விசேட ஒதுக்கு நன்கொடை மூலம் கிடைக்கும் பணம்.

இச்சபை இந்நிதியினை பொதுவாக சமூகநலச் செலவுக்காக செலவிடுகின்றது. அதாவது, வீடமைப்பு திட்டம், வீதி வடிகாலமைப்பு, பாடசாலை பராமரிப்பு, வெள்ளப்பெருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போன்ற அனர்த்தங்கள் நூல் நிலையப் பராமரிப்பு, மின் வெளிச்சம் ஏற்படுத்தல். பஸ்தரிப்பு நிலையத் தாபரிப்பு, விழாவுக்கான செலவுகள், சுகாதாரத்தை பேணல், மலசலகூட வசதி, குளங்கள், கிணறுகள், பூந்தோட்டங்கள் அமைத்தல் போன்றவற்றுக்கு நிதியை செலவு செய்யலாம். மேலும் மாநகர முதல்வர் / ஆணையாளர் மற்றைய நிர்வாகிகள் கடமையாற்றும் போது ஏற்படும் செலவுகள் என்பவற்றுக்காக நிதியினை செலவு செய்கின்றது.

### 1.4.2. நகரசபை

வளர்ச்சியடைந்துவரும் ஒரு பிரதேசத்தை, நகரத்தன்மை கொண்ட இடத்தை நிர்வாக எல்லை குறிப்பிட்டு அமைச்சர் கட்டளை யொன்றின் மூலம் நகர சபையை உருவாக்கலாம். மாநகர சபையின் செயற்பாடுகளை ஒத்ததாகவே நகர சபையின் செயற்பாடும் அமைந்திருக்கும். நகர சபை பின்வரும் முக்கிய அதிகாரங்களை கொண்டிருக்கும்.

1. அமைச்சரின் அங்கீகாரத்துடன் நகரசபைக்கு உரித்தான காணிகளை கட்டிடங்களை, விற்கவோ வாடகைக்கு கொடுக்கவோ முடியும்.
2. பதவிகளை உருவாக்கவும் அதை நிரப்புவதற்கும் அதிகாரம் உண்டு.
3. ஒப்பந்தம் செய்வதற்கு அதிகாரமுண்டு.
4. சபையின் நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்காடவும் முடியும்.

5. அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நிவாரணம் அளிக்க முடியும்.

சபை விதிக்கும் வரிகள் மூலமாகவும் கொடைகள் மூலமாகவும் (இவைகள் மொத்தக் கொடையாகவோ, வாழ்க்கைச் செலவுக் கொடையாகவோ குறித்த கொடையாகவோ அமையலாம்) கடன்கள் மூலமாகவும் விற்றல் வாடகைக்கு கொடுத்தல் மூலமாகவும் அமைச்சரின் விசேட கொடுப்பனவுகள் மூலமாகவும் தமது நிதியை பெறுகின்றது.

### 1.4.3 பிரதேச சபை

உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரால் வெளியிடப்படும் கட்டளை மூலம் ஏதேனும் இடப்பரப்பினை பிரதேச சபை எனப்பிரகடனப்படுத்தலாம். இவ்வாறு பிரகடனப்படுத்தப்படும் பிரதேச சபையின் நிர்வாக எல்லையாக பிரதேச செயலாளர் பிரிவுகளே பெரும்பாலும் அமையும். மாநகர சபை, நகர சபை எல்லைகள் தவிர்ந்த ஏனைய நிலப்பரப்பு பிரதேச சபைகளின் நிர்வாகத்திற்கு உட்படுகின்றது.

பிரதேச சபைகள் உறுப்பினர்களின் எண்ணிக்கை உள்ளூராட்சி அமைச்சினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் விசேட கட்டளை ஒன்றினால் தீர்மானிக்கப்படும். தவிசாளர் வருகை தராதபோது துணைத்தவிசாளர் கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல் வேண்டும். மேற்படி இருவரும் வருகை தராதபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சமூகமளித்துள்ள உறுப்பினர்கள் அவர்களுள் ஒருவரை தலைமை தாங்குவதற்கென தெரிவு செய்து கூட்டத்தை நடத்தலாம். பிரதேச சபையின் பிரதம நிர்வாகி தவிசாளரே ஆவார். சபையின் செயற்பாடுகளை திறமையும் பயனுறுதியும் வாய்ந்தவையாக விளங்கச் செய்வதில் தவிசாளர் பிரதான பங்கு வகிக்கின்றார்.

தீர்மானம் எடுக்கும் உறுப்பு என்ற வகையில் தவிசாளர் வழங்கும் தலைமைத்துவம் வழிகாட்டுதல் மீதே பெருமளவு சார்ந்திருக்கின்றது. சபையின் செயற்பாடுகளை நிறைவேற்றுபவராக செயலாளரே விளங்குகின்றார். தவிசாளருக்கும், சபை உறுப்பினர்களுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாக செயலாளர் காணப்படுகின்றார்.

பிரதேச சபைக்கு ஆலோசனை வழங்குவதற்கென தனியான குழுக்களும் நியமிக்கப்படும். அவையாவன,

அ). நிதி மற்றும் கொள்கை உருவாக்கம்
ஆ). வீடமைப்பு சமூக அபிவிருத்தி
இ). தொழிநுட்ப சேவைகள்
ஈ). சுற்றாடலும் வாழ் வசதிகளும்

பிரதேச சபையானது பொதுமக்கள், சுகாதாரம், பொதுபயன்பாட்டுச் சேவைகள் பகிரங்க பொது வழிகள் தொடர்பான கருமங்களையும் ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல், மக்களின் சௌகரியம் சேமநலனையும் வாழ்வசதிகளையும் பாதுகாத்தல், மேம்படுத்தல் போன்ற பல அதிகாரங்களை கொண்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொதுவாக நோக்குகின்ற போது உள்ளூராட்சி நிர்வாகத்தில் இச்சபைகள் முக்கிய பங்கெடுக்கின்றன. இங்கு பிரதான அம்சம் யாதெனில் துணை விதிகளை உருவாக்கும் தத்துவம் இச்சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளமையாகும். அவற்றின் நடவடிக்கை முறை பற்றிய துணை விதிகளை இச்சபைகள் உருவாக்கலாம். அத்தோடு பாராளுமன்ற முதன்மைச்சட்டத்தால் கையளிக்கப்பட்ட தத்துவத்தை கொண்டு உள்ளூராட்சிக்கு பொறுப்பான அமைச்சர் துணைநிலைச் சட்டங்களை ஆக்கலாம். இத்துணைச்சட்டங்கள் பராளுமன்றத்தின் அதிகாரத்தைப் பெறுவதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படும். ஆயினும் இத்துணைநிலைச் சட்டங்கள் முதன்மைச் சட்டத்தின் அதிகார எல்லைக்கப்பால் ஆக்கப்பட்டால் பக்கச்சார்புடன் பிரயோகிக்கப்பட்டால் பாதிக்கப்படும் எந்த நபரும் இத்துணைநிலைச்சட்டங்களின் வலிமையை வலுவிழந்ததென்ற (Ultra – Virus) கோட்பாட்டின் கீழ் கேள்விக்கு உட்படுத்தலாம்.

சபைகளின் மீதான நிதிக்கட்டுப்பாடும் பலம் வாய்ந்ததாக உள்ளது. இச்சபைகளின் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தினை உள்ளூராட்சி அமைச்சர் தள்ளிவைப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். கணக்காளர் நாயகத்தினூடாக கணக்காய்வு செய்யலாம். அறிக்கைகளையும் புள்ளி விபரங்களையும் கோரிப் பெறலாம். விசாரணைகள் மேற்கொள்ளலாம். குறித்த வேலையை குறித்த காலப்பகுதியில் செய்யப்பணிக்கலாம். மேலும் ஒரு சபையின் எல்லைகளையும் உறுப்பினர்களின் அளவையும் உள்ளூராட்சி அமைச்சர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் மாற்றியமைக்கலாம். குறித்த செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கென ஆள் எவரையும் அமைச்சர் நியமிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிர்வாக ஊழல், திறமையின்மை, அதிகாரங்களை தவறாக பயன்படுத்தல் போன்ற காரணங்களுக்காக அமைச்சரின் கட்டளை மூலம் மாநகர சபை முதல்வர், அல்லது தலைவர், பிரதிமாநகர சபை முதல்வர் அல்லது எந்த உறுப்பினரும் அகற்றப்படலாம். அல்லது சபை கலைக்கப்படலாம். ஆனால், இதை ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவர் விசாரணை செய்ய வேண்டும். விசாரணையை எதிர்பார்த்து மேற்படி உறுப்பினர்களை இடைநிறுத்தம் செய்யலாம். உறுப்பினர்களை நீக்கும் கட்டளைகளையும் சபைகளை கலைத்தல் கட்டளைகளையும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

சபைகளின் சட்டமுரணான கொடுப்பனவுகள் கடமை முறிப்பால் ஏற்படும் இழப்புக்கள், நிதியை முறையாகப் பேணத்தவறுதல் ஆகிய காரணங்களினால் சபையின் உறுப்பினர்கள், ஊழியர்கள் எவரும் நீதிவான் நீதிமன்றத்தில் நிறுத்தப்படலாம். அரச உடமைகளுக்கு தீங்கு விளைவிப்பதற்கு எதிரான கட்டளைச்சட்டம். மூலம் உறுப்பினர்களும் ஊழியர்களும் குற்றவியல் சட்டத்திற்கு உட்படுத்தப்படலாம். எனவே மத்தியரசினதும் நியதிச்சட்டங்களதும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டே உள்ளூராட்சி சபைகள் செயற்பட முடியும். யு.கே.கிக்ஸ் (U.K.Hicks) என்பவர் இது பற்றி கூறும்போது ‘இக்கட்டுப்பாடுகள் உள்ளூராட்சி நிறுவனங்களின் சுயமான செயற்பாட்டை தகர்க்கின்றன. ஆயினும் கட்டுப்பாடுகள் இல்லாதவிடத்து சபைகள் திசை மாறலாம். எனவே அவசியமான நேரத்தில் முறைமையான தலையீட்டை மட்டுமே மத்தியரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்” என்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாக முறைமையில் உள்ளூராட்சி சேவைகள் ஆணையகம் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதொரு நிகழ்வாகும். (Logal

Government Service Act No 43 Of 1945 Amendment Act No 18 1969) இவ்வாணையத்திற்கு முன்பு உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆளணியின் நியமனம், பதவி உயர்வு, பதவி நீக்கம், உழைப்பூதியம் என்பன சபைகளால் தீர்மானிக்கப்பட்டன. இந்நிலைமையால் பதவிகளின் தகைமை, சபையின் விருப்பு, வெறுப்புக்கு உட்பட்டு சேவையாற்ற வேண்டியும் இருந்தது. மேலும் உயர் தகைமைகளை கொண்டவர்கள் உள்ளூராட்சி நிறுவனங்களில் தமது சேவையை அளிக்கத்தயங்கியதால் அவர்களின் ஆற்றலையும் பெறமுடியவில்லை. உள்ளூராட்சி ஆணையாளர் உட்பட அமைச்சரால் நியமிக்கப்படும் நால்வர் கொண்ட இச்சபை மூன்று ஆண்டு ஆயுளைக் கெண்டது. ஆளணி நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் உழைப்பூதியம், ஒழுக்காற்று நடவடிக்கை ஆகியவற்றுக்கு இவ்வாணையம் பொறுப்பாக்கப்பட்டிருப்பதால் உள்ளூராட்சி முறையில் அலுவலர் குழாம் பாதுகாக்கப்படுவதோடு அவற்றின் நிலையும் உயர்த்தப்பட்டது. இதன் மூலம் உள்ளூராட்சியின் திறமையான நிர்வாகத்துக்கு வழி செய்யப்பட்டுள்ளது எனலாம்.

## 1.5 உள்ளூராட்சி சபைகள் எதிர் நோக்கும் பிரதான சிக்கல்கள்

1. நிதிப்பற்றாக்குறை - இச்சபைகளின் நிதி மூலங்கள் குறைவாக இருப்பதும் மத்தியரசின் நன்கொடைகளிலும் கடன்களிலும் தங்கியிருப்பதுடன் இந்நிறுவனங்களை பலவீனப்படுத்துகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2. இன முரண்பாடு - இலங்கையில் காணப்படும் இன முரண்பாடு குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைகளின் செயற்பாட்டில் உறுதியற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது எனலாம். அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகள் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் மத்தியரசாங்கத்தால் நடாத்தப்படுகின்றன.

3. அரசியல் குரோதம், சுயநலநோக்கம் என்பன உள்ளூராட்சி சபைகளின் சிறந்த செயற்பாட்டிற்கு தடைக்கல்லாக அமைகின்றன.

4. மத்தியரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் - உள்ளூராட்சி சபைகளின் செயற்பாட்டுக்கு மத்தியரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் மிகவும் தடையாக உள்ளது. அதாவது, மத்தியரசாங்கத்தில் தங்கியிருக்கும் அமைப்புக்களாகியுள்ளன. இந்நிறுவனங்களை முழுமையாக கலைத்துவிடவும் பின்னர் அதன் நிருவாகத்தினை மத்தியரசாங்கம் கொண்டு செயற்படுத்துவதற்கும் பெற்றுள்ள அதிகாரம் உள்ளூராட்சி சபைகளை தனித்துவமற்ற அமைப்புக்களாக்கி விடுகின்றது. சுருங்கச் சொல்லின் உள்ளூராட்சி சபைகளின் வாழ்வும், அழிவும் மத்தியரசாங்கத்தின் கரங்களில் தங்கியுள்ளது எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 1.6 முடிவுரை

உள்ளூராட்சி மட்டத்தில் நிர்வாக மாற்றம் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்தல் நடைமுறையில் பயனுறும் வகையில் மக்கள் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக்களை வழங்குதல் என்ற இலக்கினை அடைவதற்காகவே உள்ளூராட்சி சபைகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த வகையில் மேலே குறிப்பிட்ட சிக்கல்களை நிவர்த்தி செய்வதன் மூலமாகவும் உள்ளூராட்சி சபைகளுக்கு மத்தியரசாங்கம் ஆலோசனை வழங்கி மேற்பார்வை செய்து ஒன்றோடொன்று சுமூகமான அணுகு முறைகளை பின்பற்றி செயற்படுவதன் வாயிலாகவும் உள்ளூராட்சி சபைகளும் மத்தியரசாங்கமும் கூடிய பொறுப்புணர்வோடு கடமை புரிவதாலும் 21ம் நூற்றாண்டுக்கு ஏற்ப சிறந்ததொரு உள்ளூராட்சி நிர்வாகத்தை ஏற்படுத்துவதுடன் உள்ளூராட்சி சபைகள் அமைக்கப்பட்டதன் இலக்கு நிறைவு பெறும் என்பது தெளிவாகும்.

### உசாத்துணை நூல்கள்


1. G.R.Tressie Leitar - Local Government and Decentralized Administration In Sri Lanka, Lake House Investment LTD, Colombo 1978.
2. W.A.Wiswa Warnapala - Local Politics in Sri Lanka, An Analysis of the Local Government Election of May 1991. South Asian Publisher LTD, New Delhi, 1993.
3. U.K.Hicks - Local Government and Finance in Ceylon Planning Secretarial Colombo, 1957.
4. தம்ம திசாநாயக்கா - பிரதேச அரசாங்க ஆட்சி CPA, கொழும்பு, 2007




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

B/S 2028 L

| | |
|---|---|
| வகுப்பு எண் | |
| தொடர் இலக்கம் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media